பக்கங்கள்: முப்பத்திரண்டு+A,B

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 17 ஞாயிற்றுக்கிழமை (03.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 311

# கிழக்கில் எவரும் அனுமதியின்றி ஆயுதம் வைத்திருக்கத் தடை!

## 30ஆம் திகதிக்குள் ஒப்படைக்காவிடில் கடும் நடவடிக்கை

கொழும்பு,ஒக்ரோபர்3

**கிழக்கு மாகாணத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி ஆயுதங்கள் எடுத்துச்செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு ஆயுதங்கள் வைத்திருப்பவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்காவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.**

கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் எடிசன் குணதிலக இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். சட்டவிரோதப் பயன்பாடு கிழக்கில் அதிகம் என அறிக்கைகள் கிடைக்கப்பெற்றதை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் உள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கிழக்கில் அனுமதிப்பத்திரம் (லைசென்ஸ்) பெறாத நிலையில் பெரும் எண்ணிக்கையான ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. அவற்றைக் கண்டுபிடிக்கவேண்டும்.

'லைசென்ஸ்' இல்லாமல் ஆயுதங்கள் வைத்திருப்பவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன் அவற்றை அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில்கையளிக்கவேண்டும்.

இவ்வாறு கையளிக்காமல், ஆயுதங்களுடன் எவராது நடமாடினால் அவர்களுக்கு எதிராக நட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் குற்றச் செயல்களுக்கு அவற்றைப் பயன்படுத்தும் சம்பவங்கள் கிழக்கில் அதிகரித்து வருவதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ-ஐ)

## மணல் ஏற்றுவதற்கு குடத்தனையில் எதிர்ப்பு; வாகனங்களைத் திருப்பி அனுப்பினர் மக்கள்

குடத்தனை,ஒக்.3

குடத்தனையில் மணல் ஏற்ற வந்த வாகனங்கள் அப்பகுதி மக்களால் நேற்றுத் திருப்பி அனுப்பப்பட்டன. தமது வளங்களைச் சூறையாடிச் செல்வதற்கு அனுமதிக்க முடியாது என்று கூறியே மக்கள் இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குடாநாட்டில் கட்டடத் தேவைக்கான மணல் வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் இப்போது ஏற்பட்டு வருக்கின்றது. குடத்தனை கிழக்கின் பின்புறமாக சவுக்குத்தோப்பில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட அகழ்வுப் பணிகள் இப்போது பொற்பதி கிராமத்தை எட்டியுள்ளன.

அரசின் விசேட அனுமதி பெற்ற மகேஸ்வரி நிதியமே மணல் ஏற்றுவது, விநியோகிப்பது போன்ற பணிகளை வியாபார ரீதியில் செய்து வருகின்றது.

நிதியத்தினால் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள வாகனங்களும் மற்றும் ஆள்களுமே மணல் அகழ்வில் ஈடுபட்டுள்ளனர்.

தமது கிராமத்தில் மணல் அகற்றப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொற்பதி கிராம மக்கள் ஜனாதிபதி மற்றும் அமைச்சர் டக்ளஸ் ஆகியோருக்கு முறைப்பாட்டு மனுக்களை வழங்கி இருந்தனர்.

ஏற்கனவே மணல் அகழ்ந்த

(32ஆம் பக்கம் பார்க்க)

## குடத்தனை மணல் எங்களின் சொத்து; அதனை வெளியார் சூறையாடுவது சரியா?

### ஊர் மக்கள் மாவையிடம் அழுதழுது முறையீடு

யாழ்ப்பாணம்,ஒக்.3

குடத்தனைப் பகுதியில் உள்ள மணலை வெளியார் சூறையாடி வருகிறார்கள். எமது செல்வம் எமக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள்.

குடத்தனைக்குச் சென்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடம் மேற்கண்டவாறு அப்பிரதேச மக்கள் தேம்பித் தேம்பி அழுதவாறு முறையிட்டனர்.

மாவை சேனாதிராசா தலைமையிலான குழுவினர் நேற்றுப் பிற்பகல் குடத்தனைப் பகுதிக்குச் சென்றிருந்தனர். அங்கு மக்களுடன் அவர்கள் கலந்துரையாடினர்.

எங்களின் செல்வமான மணல் எமக்குப் பயன்படாமல் வெளியாரால் சூறையாடப்படுவதைத் தடுத்து நிறுத்துங்கள். இவ்வாறு ஊர் மக்கள் உருக்கமான கோரிக்கையை மாவை சேனாதிராசாவிடம் முன்வைத்தனர். மாவை சேனாதிராசாவிடம் பிரதேச மக்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தப் பிரதேசத்தில் உள்ள

(32ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துக! தமிழ்க்கட்சிகள் அரங்கம் கோரிக்கை

ஜெனிவா,ஒக்.3

வடக்கில் இராணுவ நிர்வாகத்தை இல்லாமல் செய்து சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துமாறு அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்றை தமிழ்க்கட்சிகளின் அரங்கம் நிறைவேற்றியுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் அலுவலகத்தில் அவரின் தலைமையில் இந்த அரங்கத்தின் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினரும் தமிழர் தேசிய விடுதலை முன்னணியின் செயலாளர் எம். கே. சிவாஜிலிங்கம் தலைமையிலான குழுவினரும், தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் ஆனந்தசங்கரி தலைமையிலான குழுவினரும், முன்னாள் வட கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜ பெருமாள் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப். நாபா அணியினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மாகாண சபை உறுப்பினர் பி.பரசாந்தன் தலைமையிலான குழுவினரும் ஈழ அகதிகள் மறுவாழ்வு கழகத் தின் தலைவர் செ.சந்திரகாசன், புளொட், சிறிரெலொ பிரதிநிதிகளுடன் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

கூட்ட முடிவில் அங்கு எடுக்கப்பட்ட முடிவுகளை எம்.கே. சிவாஜிலிங்கம் குறிப்பிட்டார். அவை வருமாறு:-

அடுத்த பருவப் பெயர்ச்சியின் மழையின் போது ஏற்படும் வெள்ளப் பெருக்கினால் வன்னி முகாமில் வாழும் மக்களுக்கு பெரிதும் பாதிக்கப்படுவர். எனவே முகாம்களில் உள்ள மக்களை விரைவில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும்.

அத்துடன், இந்திய அரசால் கட்டிக் கொடுக்கவுள்ள 50,000 வீடுகளை கட்டிக் கொடுப்பதற்கு

(32ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமை மாவின் விலை ரூ. 8.50 சதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.3

நாடு முழுவதும் கோதுமை மாவின் விலை நேற்று நள்ளிரவில் இருந்து 8 ரூபா 50 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்புச் சபை இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இதன் காரணமாக கொழும்பில் பாணின் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்படலாம் என்று பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. (ஒ-ஐ)

## சீன புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு வருகை

கொழும்பு, ஒக். 3

இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் என்.ஐ.சீ என அழைக்கப்படும் சீன தேசிய புலனாய்வு அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று கொழும்பு வந்து சேர்ந்துள்ளனர்.

மட்டக்களப்பு கரடியனாறில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து எழுந்துள்ள நிலையை இக்குழு மதிபீடு செய்யும்.

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளுக்கும் இந்தக் குழு விஜயம் செய்யும்.

இலங்கையில் பணிபுரியும் சீன நிறுவனங்களின் பாதுகாப்புக் குறித்தும் இக்குழு ஆராயும்.

கரடியனாறு குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இரு சீன அதிகாரிகள் கொல்லப்பட்டமை தெரிந்ததே. (ஒ-ஐ)

## கிளிநொச்சியில் கடும் மழை: சோபையிழந்தது இலக்கிய விழா

கிளிநொச்சி,ஒக்.3

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சு ஏற்பாடடு செய்த இலக்கியப் பெரு விழா மக்கள் பங்களிப்புஇன்றி சோபையிழந்த நிலையில் நேற்று ஆரம்பமானது.

கிளிநொச்சியில் தொடரும் கடும் மழையின் காரணமாக இந்த விழாவில் பொதுமக்கள் பங்குபற்றவில்லை.

அரச ஊழியர்கள்,பாடசாலை மாணவர்கள் வெளியில் இருந்து வந்த அறிஞர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் நேற்றைய முதல் நாள் நிகழ்வுக்ள் முடிவடைந்துள்ளன.

விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்றாகும்.

முதல் நாளான நேற்று ஆய்வரங்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் அப்புச்சி கதிரவேற்பிள்ளை அரங்கில் பேராசிரியர் சிவலிங்கராஜா தலைமையில் காலை 9.30 மணியளவில் முதலாவது நிகழ்வாக ஆரம்பமாகியது.

ஆய்வரங்கத்தின் ஆரம்ப நிகழ்வாக தமிழ் மொழி வாழ்த்து இடம் பெற்றது. (32ஆம் பக்கம் பார்க்க)

## நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமராக உருத்திரகுமாரன்

ஜெனிவா,ஒக்.3

நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமராக விஸ்வநாதன் உருத்திரகுமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

புலம் பெயர் நாடுகளில் இடம் பெற்ற தேர்தல்களில் தெரிவானவர்கள் நேற்று ஐ.நா.சபைக்கு அருகிலுள்ள பிளாஸா ஹோட்டலில் ஒன்று கூடி இத்தெரிவை நடத்தினர்.

சபாநாயகராக கனடாவைச் சேர்ந்த பொன் பால்ராஜன்,பிரதிச் சபாநாயகராக சுவீசைச் சேர்ந்த செல்வி சுகன்யா புத்திரசிகாமணி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் மூன்று பிரதி பிரதமர்

(32ஆம் பக்கம் பார்க்க)


உள்ளே

சந்தியடி சோமு — பக்கம் 3
புற்றுநோய்க்கு இலக்காவோர் வடக்கில் அதிகம் — பக்கம் 5
ஐ.நாவுக்குச் சென்ற மஹிந்தவை சந்திக்காது ஒடி ஒதுக்கிக் கொண்ட மேற்குலகத் தலைவர்கள் — பக்கம் 7
பலன் பார்க்கலாம் பணத்தையும் இழக்கலாம் — பக்கம் 9
தமிழ்மக்களின் அரசியல் தீர்வில் இனவாதக் கட்சிகளின் சுயரூபம் — பக்கம் 13
இலங்கை அரசியலில் கட்சித் தாவல்கள் — பக்கம் 17
மரணங்கள் மலியத் தொடங்கிய நிலம் — பக்கம் 23
கம்போடியா இன்ப்படுகொலை விவகாரம் — பக்கம் 28




Digitized by Noolaham Foundation.







வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள இலக்கிய விழா நேற்று கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் இடம்பெற்றபோது எடுக்கப் பட்ட படங்கள் இவை.

கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும் மாணவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடுவதையும் மாணவிகளின் வரவேற்பு நடனத்தையும் மேல் வரிசையிலும் -

கலை நிகழ்வுகளை இரண்டாவது வரிசையிலும்

நாடக நிகழ்ச்சியையும் பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி சிறிதேவி தலைமையுரை ஆற்றுவதையும் கீழ் வரிசையிலும் காணலாம்.

*(படங்கள்: ஔண்யன், ஹரிஸ்)*

# ஆயுதத்தால் உலகை ஆளலாம் நினைத்த பலர் இறுதியில் குப்பைத்தொட்டியிலே வீசப்பட்டனர்

## கோத்தபாயவுக்கு ரில்வின் சில்வா அறிவுரை

கொழும்பு, ஒக்.3

ஆயுதங்களால் உலகை ஆட்சி செய்ய முடியும் எனப் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ கருதி வருகிறார் என்றும் ஆயுதங்களால் ஆட்சி நடத்த முயற்சித்த பலர் இறுதியில் குப்பைத் தொட்டிகளில் வீசி எறியப்பட்டனர் என்றும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மீது பிரயோகித்த அழுத்தங்களும், ஜே.வி.பியினால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களுமே சரத் பொன்சேகாவிற்கு இந்தத் தண்டனை வழங்குவதற்கு வழிகோலின என்றும் பாதுகாப்புச் செயலாளர் தேசியப் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்துள்ளார் என்றும் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பி. தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

நாட்டில் சட்ட ஒழுங்கின் மீது நம்பிக்கை வைக்க முடியாதளவுக்கு அரசின் சர்வாதிகாரம் மேலோங்கியுள்ளது. ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோரினால் சரத் பொன்சேகாவுக்கு விடுதலை வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்திருந்தார். இது வேடிக்கையாகவே உள்ளது.

10 - 12 ஆண்டுகள் அமெரிக்காவில் வசித்து வந்தவர்களுக்கு நாட்டை (இலங்கை) பற்றி என்ன தெரியும்?

ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம் செய்ததற்காகவே சரத் பொன்சேகாவை சிறையிலிட்டுள்ளோம் என அரசு கூறுமேயானால், சரத் பொன்சேகாவை விடுதலை செய்து எட்டு ஜே.வி.பியினரைக் கைது செய்து முறையிட வேண்டும். வைராக்கியம் பிடித்த அரசு விரைவில் வேரோடு அழியப் போகின்றது.

அரசால் சரத் பொன்சேகாவிற்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானத்தை மக்கள் மாற்றியமைப்பாளர்கள்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

(சி)

# ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கேட்டு மண்டியிடமாட்டார் சரத் பொன்சேகா

## விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 03

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் மன்னிப்புக் கோரி மண்டியிட மாட்டார் - என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்பட்ட தண்டனை ஓர் பழி வாங்கல் நடவடிக்கையாகவே கருதப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோரினால் தண்டனையைத் தளர்த்துவது குறித்து கவனிக்கப்படும் என் வெளியான செய்திகளுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா மன்னிப்புக் கேட்க வேண்டும் என்பதையே அரசு விரும்புகிறது எனவும், பொன்சேகா எந்தவிதமான குற்றச்செயல்களிலும் ஈடுபடவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

தவறுகள் ஏதும் இழைக்காத நிலையில் சரத் பொன்சேகா மன்னிப்புக் கோர வேண்டிய அவசியம் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா அப்பாவி என்பது இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும் என்றும், நாடு முழுவதிலும் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி போராட்டங்கள் நடத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சிவில் நீதிமன்றினால் சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படுவார் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

30 மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட சரத் பொன்சேகா தற்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார். (சி)

# மூன்-மஹிந்த பேச்சு ஐ.நாவால் இருட்டடிப்பு நிபுணர் குழு குறித்துப் பேசப்பட்டிருக்கிறதாம்

## இன்னர் சிட்டி பிரஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 03

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் ஆறு நாட்களுக்கு முன் நியூயோர்க்கில் இடம்பெற்ற சந்திப்பில் பேசப்பட்ட விடயங்களை ஐ.நா. சபை இருட்டடிப்புச் செய்து விட்டது - என்று நியூயோர்க்கில் இருந்து வெளியாகும் இன்னர் சிட்டி பிரஸ் பத்திரிகை குற்றஞ்சாட்டியுள்ளது.

பான் கீ மூன் - ஜனாதிபதி மஹிந்த சந்திப்பில் உண்மையில் நடந்தது என்ன என்று கேள்வி கேட்டிருக்கும் அப்பத்திரிகை, இச்சந்திப்புக் குறித்து இரு தரப்பினராலும் முரண்பாடான அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்றும் சாடியுள்ளது.

இம்முரண்பாடுகள் ஏன் ஏற்பட்டன என்று இப்பத்திரிகை பான் கீ மூனின் ஆலோசகர் நிஷொலஸ் ஹைசொன்னிடம் (icho las Hayson) நேரடியாக வினவியுள்ளது.

பான் கீ மூன் - மஹிந்தர் ஆகியோருக்கு இடையில் உத்தியோகபூர்வ சந்திப்பு ஒன்று மட்டுமன்றி தனிப்பட்ட சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றுள்ளது என்றும் அத்தனிப்பட்ட சந்திப்பு குறித்த விவரங்களை ஐ.நா வெளியிட்டிருக்கவில்லை என்றும் பான் கீ மூனின் ஆலோசகர் பதிலளித்துள்ளார்.

தனிநபர் சந்திப்புக்களில் பெரும்பாலானவை தனிப்பட்ட விடயங்கள் சார்ந்தவை என்பதால் அவற்றை ஐ.நா வெளியிடவில்லை என்று அவர் காரணம் கூறியுள்ளார்.

ஆனால் இத்தனிப்பட்ட சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்த தரப்பினர் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றமை ஏன் என்று இன்னர் சிட்டி பிரஸ் அடுத்த கேள்வியைத் தொடுத்தது.

இக்கேள்விக்கு மூனின் ஆலோசகரால் பதில் கூற முடியாமல் போய் விட்டது. ஆனால் இதனிப்பட்ட சந்திப்பில் இலங்கையில் இடம்பெற்றன என்று கூறப்படும் யுத்தக் குற்றங்கள் குறித்த ஐ.நா. செயலாளருக்கு ஆலோசனை கூற நியமிக்கப்பட்டிருக்கும் நிபுணர்கள் குழு குறித்துப் பேசப்பட்டிருக்கின்றது என்று இன்னர் சிட்டி பிரஸ் தெரிவித்துள்ளது.

நிபுணர் குழு விவகாரம் பற்றிய பேச்சு தனிப்பட்ட விடயம் சார்ந்தது அல்ல என்றும் இப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

# வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட பெண் சிக்கினார்

கொழும்பு, ஒக். 03

ஹொங்கொங் நாட்டில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி, 3 பெண்களிடம் இருந்து தலா ஒன்றரை இலட்சம் ரூபாவை மோசடி செய்த பெண் ஒருவர் ஹோமாகமப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பெண்ணால் ஏமாற்றப்பட்ட 3 பேரில் ஒருவர் வேலை வாய்ப்புக்காக வட்டிக்குப் பணத்தைப் பெற்றுக்கொடுத்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அவருடைய கணவர், பணத்தைத் தொலைத்த கவலையில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

இந்தச் சம்பவம், கடுவெலப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்ட பெண் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தியடி சோமு

பின்னேரத்தில ஒரு பெக் அடிச்சிட்டு சந்தியில நிண்டு கதைக்கிறது ஒரு தனிச் சுகம்.

''என்னண்ண போன கிழமை சம்மேளனத்தோட ஏர்பூட்டுக்குப் போனியள், என்ன மாதிரியெண்டு'' பேப்பர்காரனொருத்தன் வாயக்கிளறினான். நானும் மனதுக்க கிடந்ததுகளைக் கொட்டிப் போட்டன்.

''உதைபொருக்கா எழுதண்ணையென்றான்.'' வம்புக்க மாட்டுறான் எண்டு தெரியும்தான். எண்டாலும் ஒமெண்டு எழுதத் தொடங்கினதில எள்ளெண்ணையும் போச்சு. இந்தச் சனிக் கிழமையாவது சனியனைத் தொலைப்பம் எண்டால் முடியாமப் போச்சு.

ஏர்பூட்டு எண்டு சொல்லி எங்கள ஏத்திக்கொண்டு போய் அரியாலயில ஈச்சங்காட்டுக்கு அங்கால ஒரு இடத்தில வயல்வெளியில, ரென்ட் அடிச்ச இடத்தில இறக்கி விட்டாங்கள். மழைக்கு நடுவில வாற வெய்யில் எல்லோ காய் காய் எண்டு காய்ச்சு கருவாடாக்கிப் போட்டுது.

பசில் வாறாரெண்டுதான் அத்தனை தடல்புடலும். பிறகு பாத்தா ஒரு புடலங்காயும் கிடையாது. பசில் வரேல்ல. அவற்ற தம்பியாரும் வாறார் எண்டு முதல் நாள் சாடையான கதை இருந்தது. ஆனால் அதுவும் நடக்கேல்ல.

என்னட்ட ஒரு மாலையத் தந்தாங்கள். வந்திறங்கினதும் போடவேணும் எண்டதுதான் உத்தரவு. நானும் வலு கவனமா பூ உதிராம மாலையத் தூக்கிக் கொண்டு நிற்கிறன் நிக்கிறன்..... எவ்வளவு நேரமெண்டாலும் நான் பொறுப்பன் இந்தப் பூ பொறுக்குமே? விலஸ்தகெட்ட அது உதிரத் தொடங்கிட்டிது.

நானும் மாலையும் வாடினாப் பிறகு ஒரு வழியா பரிவாரங்கள் சூழ வாகனங்களில வந்திச்சினம்.

''வருகுது வருகுது இறங்கின உடன மாலையப் போடுங்கோ'' எண்டு அவசரப்படுத்தினாங்கள். நான் வாகனத்தால இறங்கிற ஒருத்தருக்கு மாலையப் போட நீட்டினா, எனக்குப் பக்கத்தில நிண்ட முந்தின ஜி.ஏ. தலையக் கொண்டு வந்தார் தனக்குப் போடெண்டு. எனக்கென்ன வந்தது நான் போட்டு விட்டன்.

ஏதோ மாலை போட்டால் சரிதானே என் கடன் பணி செய்து கிடப்பதுதானே. சும்மா சொல்லக்கூடாது, எனக்கொரு வோட்டர் பம்பு தந்தவங்கள்.

என்ர மாலைய தலையக் குடுத்து வாங்கின முந்தின ஜி.ஏ., கவர்னரும் மந்திரியும் இருந்த பக்கமா ஓடிப் போனார். அவரப் பாத்து கவர்னர் கேட்டார் ''சனங்கள் பாவம் கனநேரமா வெய்யில்ல நிக்குதுகள் போல?'' எண்டு. அதுக்கு அந்தாள் சொல்லுது, ''நோ... நோ... தேர் ஆர் ஹப்பி'' எண்டு. உள்வெக்கை வெளிவெக்கை எல்லாம் எங்களுக்கெல்லோ தெரியும்.

இவர் சீமான் அப்பத்தான் பிக்கப்பில வந்து இறங்கிப் போட்டு வெய்யிலுக்க நிக்கிறதில சனத்துக்கு சந்தோஷம் எண்டுறார். பென்சன் எடுத்துப் போட்டும் பதவிகளில தொடர வேணும் எண்டால் உப்பிடி எல்லாம் செய்யத்தான் வேணும் போல. இல்லையெண்டா கொன்ட்ராக்க நீடிக்க மாட்டாங்கள் போல.

ஏர்பூட்டு விழா எண்டதால மாட்டோட ஏரில கைய வைச்சு படத்துக்கு போஸ் குடுக்க யாருக்குத்தான் விருப்பம் வராது. ஆனா இவையின்ர எடுபாடுகள் எல்லாம் மாட்டுக்குத் தெரியுமே? அதுகள் வெருண்டு ஒரே ஓட்டமா பறந்துபோட்டுதுகள்.

### ட்ராக்டர் ஓட்டு விழா

பிறகு ட்ராக்டர் ஓட்டு விழாதான் நடந்தது. அமைச்சர் ஏறி இருந்து நல்லா ஓடினார். பழைய பழக்கங்களை மனிசன் இன்னும் மறக்காம வைச்சிருக்குது போல.

அந்த நேரம் கவர்னர் அடிக்கடி ஒரு வசனம் சொல்லிக் கொண்டிருந்தார், ''திஸ் இஸ் ஏ கிஸ்டோரிக் போட்டோ'' எண்டு. இண்டைக்கு நடந்ததுகள் எல்லாம் நாளைக்கு வரலாறுதானே. என்ன! நாளைக்கு நடக்கிறது நாளையிண்டைக்கு வரலாறாகிப் போகும்.

அதைவிடப் பகிடி மிரண்டு ஓடின மாட்டைப் பாத்து பத்திரிகைக்காரர் ஓட, அவையளைப் பாத்து மிச்சத்துக்கு மாடுகள் கலப்பையோடு எந்தப் பக்கம் எண்டு தெரியாம ஓட, ஒரே அல்லோலகல்லோலம்தான் போங்கோ கொஞ்சநேரம்.

அதப் பாத்து எனக்கு உள்ளூரக் கொஞ்சம் சந்தோஷம்தான். நாங்கள் வரிசாவரிசம் விதைச்சுக் கொண்டுதானே இருக்கிறம். இப்ப என்ன புதிசா விழாக் காட்டுகினம் எண்டு எனக்கொரு கொதிப்பு உள்ளுக்கை இருக்கத்தான் செய்தது. எண்டாலும் நான் அதப்பத்தி மூச்சு விடேல்ல. பிறகு ஒண்டும் கிடைக்காது பாருங்கோ. விழாவில் பேசேக்க அமைச்சரே அடிக்கடி அதைச் சொன்னவர் ''காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேணும்'' எண்டு.

வேண்டினதுக்குப் பிறகு கதைக்கக்கூடாது எண்டு நீங்கள் நினைப்பியள். ஆனா, மனசு கேக்குதில்லைப் பாருங்கோ. ஏனெண்டா ஏர்பூட்டு விழா எண்டுதான் சொல்லிச்சினம். ஆனா, செருப்புச் சப்பாத்து எல்லாத்தோடையும் வயலுக்க எல்லாரும் நிண்டவை. நஞ்சை புஞ்சையை தாய் எண்டு மதிச்சு வளர்ந்த எங்களப் போல ஆக்களுக்கு பாக்கிறத்துக்கு அது கொஞ்சம் கஷ்டம்தான். இந்தக் காலத்து இளசுகளுக்கு அது சில நேரம் சரியாத் தெரியுமாக்கும்.



இதில மற்றொரு விசயம், ''செருப்பக் களற்றிப் போட்டு வயலுக்க இறங்குங்கோ'' எண்டு சொல்லுற துணிவு அங்க ஒருத்தருக்கும் கிடையாது எண்டுறதுதான். ஆனாலும் யுத்தம் முடிஞ்சு ஒரு வரியமாச்சு எண்டு சொல்லுறாங்கள். எனக்கொண்டுமாப் புரியேல்லை.

ஆனா, கவர்னர மட்டும் பாராட்ட வேணும். அந்தாள்தான் முதலில சப்பாத்தக் கழத்தினது. ''கழத்த வேணுமெல்லோ?'' எண்டு அந்தாள் கேக்க, ''நோ... நோ... நோப்புராப்ளம்'' எண்டு பதில் சொல்லுகினம்.

அதைக் கவனிக்காம அந்தாள் கழட்ட, பிறகு அமைச்சர், அதிகாரிகள் எண்டு ஒவ்வொருத்தரா கழட்டிச்சினம். கவர்னரும் அமைச்சரும் கழட்டின செருப்புகளக் காவ பல முண்டியடிச்சிச்சினம் எண்டது தனிக்கதை. பிறகொருநாள் அதச் சொல்லுறன்.

கொஞ்சம் கூடத்தான் அலட்டிப் போட்டன் எண்டு நினைக்கிறன். எண்டாலும் கடைசியா ஒண்டச் சொல்லாட்டி பொச்சம் அடங்காது.

எங்கட பாரம்பரியத்தில வயலுக்க இறங்கேக்க அல்லது நல்ல காரியம் செய்யேக்க ஆம்பிளையளுக்குத் தலைப்பா கட்டிறது சம்பிரதாயம்தானே. ஏர்பூட்டு விழாவில ஆர்வக் கோளாறா ஜி.ஏ. அம்மாவுக்கும் எல்லோ தலைப்பா கட்டிப் போட்டான்கள்.

கடைசியா இன்னுமொண்டு. விடுவிக்கப்பட்ட நிலத்தில பயிர்ச் செய்கை எண்டு சொல்லிச்சினம். எனக்கு ஒண்டுமா விளங்கேல்லை. யார் யாரிட்ட இருந்து விடுவிச்சது.

---

**அச்சுவேலி கைத்தொழிற் பேட்டைக்கு**

## பெரிய முதலீட்டு நிறுவனங்களின் வருகையால் உள்ளூர் முதலீட்டாளர்கள் மத்தியில் அச்சம்

யாழ்ப்பாணம், ஒக்.3

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் தொழில்முயற்சியில் ஈடுபடும் உள்ளூர் முதலீட்டாளர்கள் பெரியபெரிய முதலீட்டு நிறுவனங்கள் இங்கு முதலிட இருப்பதன் காரணமாக தாம் பெரும் பாதிப்பை எதிர்நோக்க நேரிடும் என்று அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் நான்கு பெரும் முதலீட்டு நிறுவனங்கள் இயங்கத் தயாராகி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த முதலீட்டு நிறுவனங்கள் மூலம் இங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கு ஏராளமான தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட உள்ளன.

இந்த நிறுவனங்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதியை மேற்கொள்ளும் நிறுவனங்கள். அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் இந்த நிறுவனங்களுக்காக பரந்த நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக தமது தொழில் வாய்ப்புக்களில் பாதிப்பு ஏற்படும் என்றும் தமக்குக் கீழ் தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் புதிய முதலீட்டாளர்கள் இங்கு முதலிடும் நிலையில் கூடிய சம்பளத்தை எதிர்பார்த்து அவர்களை நாடிச் செல்லக்கூடும் என்றும் உள்ளூர் முதலீட்டாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

தமக்கும் அவ்வாறான முதலீடுகள் வழங்கும் பட்சத்தில் தாங்களும் இங்கு வரவுள்ள முதலீட்டாளர்களுக்குப் போட்டியாகத் தொழில் செய்ய முடியும். அவ்வாறான முதலீடுகளைத் தருவதற்கு வங்கிகள் முன்வர வேண்டும் அவ்வாறு நிதியுதவி கிடைத்தால் எம்மால் இங்குள்ள இன்னும் பல இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கி மேலும் சிறப்பாக தொழில் செய்ய முடியும் என்கிறார்கள் அச்சுவேலி கைத் தொழிற் பேட்டையில் தொழில் முயற்சியில் ஈடுபடும் உள்ளூர் முதலீட்டாளர்கள். (ஒ-15)

### தொழிலுக்கு வழிகாட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்3

யாழ்.மத்திய கல்லூரியில் நாளை திங்கட்கிழமை காலை 8 மணி முதல் இடம்பெறவுள்ள தொழில் வழிகாட்டல் செயலமர்வில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் 2009,2010 ஆம் ஆண்டு ஜீ.சீ.ஈ.(உயர் தர)வகுப்பு மாணவிகளைப் பங்குபற்றி பயன் பெறுமாறு அதிபர் கேட்டுள்ளார்.(ஒ-ஐ)

### யாழ்.மத்திய கல்லூரியில் சித்திரக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.3

தேசிய கல்விநிறுவகத்தின் ஏற்பாட்டில் சித்திரக்கண்காட்சி இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன, தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி உபாலி எம்.சேதர, ஜி.ரி.இசற் நிறுவன நிகழ்ச்சித் திட்டப் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி மற்ஸ்கர் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.(ஒ-16)

### ஆசிரியர் பயிற்சி ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.3

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் பயிற்றப்படாத ஆசியர் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அமைச்சர் கே.என்.டக் ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினராகவும் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிறிசேன மற்றும் தேசிய கல்வி நிறுவனப் பணிப்பாளர் கலா நிதி உபாலி எம்.சேதரவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

---

**சுற்றுச்சூழல் மாசடைவதாக முறைப்பாடு:**

## கல்லுடைக்கும் இயந்திர இயக்குநர் நெடுந்தீவு பொலிஸாரால் விசாரணை

யாழ்ப்பாணம், ஒக்.2

நெடுந்தீவுப் ப.நோ.கூ. சங்கத்தின் கல்லுடைக்கும் இயந்திர இயக்குநர் நேற்றுமுன்தினம் நெடுந்தீவு பொலிஸாரால் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்டார்.

கல்லுடைக்கும் பணிகளால் சுற்றுச்சூழல் மாசடைவதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே பொலிசார் இவரை விசாரித்து வருவதாகத் தெரியவருகிறது.

நெடுந்தீவிலுள்ள வீதி புனரமைப்பு மற்றும் வீடமைப்புத் திட்டங்களுக்கு வெளியிடங்களில் இருந்த சல்லிக் கற்கள் எடுத்து வரவேண்டிய நிலையில் இச்சங்கத்தின் மூலம் இக் கல்லுடைக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வந்தது.

எனினும் தற்போது சூழல் பாதிக்கப்படுவதால் இத்தொழிற்சாலைப் பணிகள் நிறுத்தப்படும் பட்சத்தில் வெளியிடங்களிலிருந்தே கற்கள் பெற்றுக் கொள்ளப்படும் நிலை ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

குடிசனமற்ற பற்றை வெளிப் பகுதியில் கடந்த பத்து வருடங்களாக இத்தொழிற்சாலை இயங்கி வருகின்றது.

இதேவேளைசங்கத்தின் பொது முகாமையாளர். விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.(ஒ-7-16)

## தென்மராட்சிநெற் செய்கையாளருக்கு நேற்று முதல் மானிய உரம் விநியோகம்

தென்மராட்சிப் பகுதியில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள கம நல சேவை நிலையத்தில் நேற்றுத் தொடக்கம் மானிய உரம் முதற் கட்டமாக வழங்கப்பட்டு வருகிறது.

நேற்று மட்டுவில் வடக்கு விவசாயிகளுக்கு மானிய உரம் வழங்கப்பட்டது. இன்று ஞாயிறு இடைக்குறிஞ்சிப் பகுதி விவசாயிகளுக்கு காலை 8 மணிக்கும் குடமியன் பகுதி விவசாயிகளுக்கு 10.00 மணிக்கும் உரம் வினியோகிக்கப்படும் தொடர்ந்து எதிர் வரும் 8 ஆம் திகதி வரை ஏனைய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மானிய உரம் வினியோ கிக்க ஏற்பாடாகியுள்ளது.

(ஒ-131)

## கணவனின் தாக்குதலில் மனைவி மரணம் படுகாயமுற்ற மாமியார் ஆஸ்பத்திரியில்

**முள்ளியவளையில் கோரச் சம்பவம்**

யாழ்ப்பாணம், ஒக்3

கணவனின் தாக்குதலுக்குள்ளாகிய மனைவி மரணமடைந்தார். மாமியார் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை காலை முல்லைத்தீவு,முள்ளியவளைமூன்றாம் வட்டாரத்தில் இக்கோரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பாக மேலுந் தெரிய வருவதாவது. வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து இராமநாதன் முகாமில் தங்கியிருக்கும் அமரசிங்கம் இராசகுலதேவி (வயது-51)என்பவர் முல்லைத்தீவு, முள்ளியவளை மூன்றாம் வட்டாரத்தில் மீளக் குடியமர்ந்துள்ள தமது மகளின் குடும்பத்தினரைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தார்.

அங்கு ஏற்பட்ட தகராறை அடுத்து இராசகுலதேவியின் மருமகன் எஸ்.தமிழ்வேந்தன் தனது மனைவியையும், மாமியாரையும் மண்வெட்டியால் தாக்கியுள்ளார்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் காலை தாக்கியவரின் மனைவியான தமிழ்வேந்தன் கலைச்செல்வி (வயது - 32) மரணமானார்.

இவரது தாயார் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இறந்தவரின் கணவரைப் பொலிஸார் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ-16)

## யாழ்.பல்கலைக்கழக அணி காலிறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக்.3

இலங்கைப் பல்கலைக்கழககங்களுக்கு இடையிலான 10 ஆவது விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாகக் கொழும்பு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்.பல்கலைக் கழக அணி காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

நேற்றுக்காலை இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.பல்கலை அணியை எதிர்த்து கொழும்பு அழகியற் பல்கலைக்கழக அணி மோதியது. இதில் யாழ்.பல்கலைக்கழக அணி 6.0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

நேற்று மாலை இடம்பெற்ற ரஜரட்டைப் பல்கலைக்கழக அணியுடனான ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று குழு நிலைச் சம்பியனாகியது.

இன்று காலை நடைபெறவுள்ள காலிறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி றுகுணு பல்கலைக்கழக அணியுடன் மோதவுள்ளது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வசீகரத் தோற்றத்திற்கு!

# சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் கருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும்.

சந்தனாலேப

யாழ்ப்பாண விநியோகஸ்தர்

**'சிவா நறுமணப் பூங்கா'**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

*(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).*

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

(சி/555203)



நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு

## தேசிய லொத்தர் சபை

இலங்கையின் முன்னணி அரச நிறுவனமான தேசிய லொத்தர் சபையுடன் இணைந்துகொள்வதற்கு சிறந்த சந்தர்ப்பம்.

**நாளாந்த சம்பளம் கொடுப்பனவு முறையில் வடக்கு/ கிழக்கு தேர்தல் தொகுதிகளில் தமிழ் அறிவிப்பாளர்கள் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர்.**

உங்களது திறமைக்கு ஆக்கத்திறனுக்கு சிறந்த தொழில்.
நாட்டிற்காக உங்கள் திறமை, அர்ப்பணிப்பை வழங்குவதற்கு சிறப்பான தருணம்.
தேசிய லொத்தர் சபையின் பெருமைக்குரிய அங்கத்தவர் ஆகுங்கள்.

தகைமைகள் மற்றும் அனுபவம்

- க.பொ.த. (சா/த) சித்தி அடைந்திருத்தல் மற்றும் அறிவிப்பு துறையில் மூன்று வருட அனுபவம்.
- அறிவிப்புத்துறை தொடர்பாக பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல் மேலதிக தகைமையோடு தமிழ் மொழியை சிறப்பாக கையாள்வது விசேட திறமையாகும்.
- வயது 18 - 45 வருடம்
- சம்பளம் நாளொன்றிற்கு 1,000/= கொடுப்பனவுடன் விற்பனை இலக்கை பூர்த்தி செய்வதன் பெயரில் கவர்ச்சிகரமான கமிஷன் வழங்கப்படும்.
- வடக்கு/ கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகக்கொண்டிருத்தல்
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினம் 15.10.2010

இந்த தினத்திற்குபின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டா.

விண்ணப்பப்படிவத்தை சகல சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவினர் அல்லாத இருவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்துடன் பதிவுத்தபாலில் மேற்குறிப்பிட்ட தினத்துக்கு அல்லது அதற்கு முன்னர் 'தலைவர், தேசிய லொத்தர் சபை, இல. 234/2, காலி வீதி, கொழும்பு 03' என்ற முகவரிக்கு கிடைக்கச்செய்யவும்.

விண்ணப்பப்படிவம் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடல் வேண்டும்.

தலைவர்
**தேசிய லொத்தர் சபை**
234/2, காலி வீதி, கொழும்பு 03.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலைக்கு 64 பரப்பு காணியை மைதானப் பயன்பாட்டிற்காக அன்பளிப்புச் செய்தவரும் எமது பாடசாலையின் பழைய மாணவருமான

**வி.இராமநாதன்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி வித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திய டைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
பழைய மாணவர் சங்கம்.

புங்குடுதீவு கமலாம்பிகை
வித்தியாலயம்,மடத்துவெளி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 03.09.2010 அன்று இறைபதம் எய்திய (முன்னாள் C.T.B. உத்தியோகத்தர்) குணரத்தினத்தின் அன்பு மனைவியான

**அமரர் குணரத்தினம் சந்திராதேவி**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்துடன் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கனகம்புளியடிச் சந்தி,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

(சி/571560) குடும்பத்தினர்.

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கல்வியங்காடு பகுதியில் ஒரு பரப்பும் 17 குழி வீட்டு டன் கூடிய காணி உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவை இல்லை.

**தொடர்பு: 0778177864**

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

கொழும்பு, யாழ். மாவட்டங்களில் வெற்றிகர மாக இயங்கி வரும் முன்னணி நிறுவனத்திற்கு யாழ். வன்னி அனைத்து பகுதிகளுக்கும் ஆர்வமும், சுறு சுறுப்பான ஆண், பெண் விற்பனை பிரதிநிதிகள் தேவை. மாதம் 15,000/= ற்கு மேல் வருமானம் பெற லாம். ஆர்வம் உள்ளோர் உடன் தொடர்புகொள்ளவும்.

அதிக்கா பிறைவேட் லிமிட்டட்,
*734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே. 0774050936, 021 3207455*

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கலைப்புலவர் வீதி, இல 15இல் அமைந்த வீடு (1 பரப்பு) விற்பனைக்கு. (ஸ்ரான்லி றோட் அருகில்)

தொடர்பு : 0777111212, 0213008675

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

கொழும்பு, நவலோகா வைத்தியசாலையின் பெறப் பட்ட வைத்திய அறிக்கைகள், X-ரே படங்கள் அடங்கிய கோப்பு ஒன்று ஆட்டோவில் கண்டெடுக் கப்பட்டுள்ளது. உரியவர் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு : 0212229136

## விற்பனைக்கு

253 XXXX ரக டொல்பின் மொடல் வாகனம் விற்பனைக்குண்டு.
**தொடர்பு : T.P.0729456399**

## தவறிவிட்டது

2ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி என்னும் முகவரி யில் உள்ள யேசீலன் அன்ரலற்றா மேரி திரேசா என்பவருடைய கைப்பை 02.10.2010 அன்று பகல் 12.30 மணியளவில் யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.04, சென் மேரிஸ் வீதி, நாவாந்துறை, யாழ். அல்லது மேற்குறித்த முகவரியில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0779184346, 0774683274

## ரீலோட் மூலம் சம்பாதிக்க

வீட்டிலிருந்தவாறே SMS மூலம் ரிலோட் ஏற்றி சம்பாதிக்கலாம். கொமினிக் கேசன், கடைகள் என் பவற்றிற்கு ரீலோட் விலைக் கழிவுடன் செய்த தரப் படும். தொடர்பு:-0774590163

## விவசாய நிலம் தேவை

கோப்பாய்,நீர்வேலி,கோண்டாவில்,திருநெல் வேலி, தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், போன்ற பகுதிகளில் குத்தகைக்கு நிலம் தேவை.
தொடர்பு:-0775453794,0771362148

## வேலையாள்கள் தேவை

மலேசியாக் கம்பனி ஒன்றிற்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை.
**தொடர்பு:-0774176123**

## வீடு வாடகைக்கு

பழைய பூங்கா வீதியில் உப தபாற் கந்தோருக்கு அண்மை யாக சகல வசதிகளுடனான வீடு வாடகைக்கு உண்டு.
**தொடர்பு:-021 222 6266**

## தவறிவிட்டது

தலங்காவல் பிள்ளையார் வீதியைச் சேர்ந்த தியா கேஸ்வரன் சிவதர்ஷி என்பவரது தேசிய அடையாள அட்டை (868532793V) கைப்பையுடன் ஆடியபாதம் வீதி, திருநெல்நெல்வேலிச் சந்திக்கு அருகில் தவறிவிட் டது.கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும் அல்லது 0774839287 என்னும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் கட்டுடைச் சந்தியில் (மானிப்பாய்க்கும் சண்டிலிப்பாய்க்கும் இடையில்) 5 பரப்புக் காணியில் 6 அறை, Hall விறாந்தாவுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. மெயின் வீதியில் இருந்து 200 யார் தொலைவில் சிறந்த குடிமனைகளுடன் அமைந்துள்ளது.

தொ.பே :- *0776614534, 0776003591*

## கார் விற்பனைக்கு

**WPGJ XXXX**
**இலக்கமுடைய**
**TOYOTA Sprinter**
**(Japan)**
**Sillver Colour, Full Option, Alloy wheel**
**T.P: 0774115544**
**0771525518**

## கார் விற்பனைக்குண்டு

13 சிறி XXXX இலக்க NISSAN வெள்ளை நிற நல்ல நிலையிலுள்ள அழகிய கார் உடன் விற்பனைக்குண்டு.

**தொடர்புக்கு-0777159735**


## D.S.குணசேகராவின் அதிரடிச் சலுகை

யாழ். மக்களின் நலன் கருதி D.S.குணசேகரா
Balloon பஸ் ~~1,000/=~~ ரூபா 900/= ரூபாவாகவும்
சொகுசு பஸ் ~~900/=~~ 700/= ரூபாவாகவும்
அரைச்சொகுசு (வீடியோ காட்சி களுடன்) ~~600/=~~ ரூபா 500/= ரூபாவாகவும் குறைக்கப்பட் டுள்ளன.




தொடர்புகளுக்கு : **வரணி மிசன் பாம்,**
145, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212222868, 0214900955,
0777917691

(104123)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
05 . 10 . 1939



மறைவு
03 . 09 . 2010

**அமரர் சரஸ்வதி யோகரட்ணம்**

*கடந்த 03.09.2010 அன்று அமரத்துவம் அடைந்த எமது இல்லத்தரசியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து நிகழும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

40/21, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (104129)

கணவர் மற்றும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

*சின்னத்தம்பி வேலாயுதம்*



(இளைப்பாறிய பதவிநிலை உத்தியோகத்தர், உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம்)

புலோலி மத்தி, கந்த உடையார் ஒழுங்கை, பருத் தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலாயுதம் நேற்று (02.10.2010) சனிக்கிழமை காலை 80 ஆவது வய தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விநாயகம் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மரு மகனும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராசரட்ணம் (இந்தியா) ஆகியோ ரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நகுலேஸ்வரியின் அன்புக் கண வரும் கதிரவேற்பிள்ளை (ENRAP, வவுனியா), சிவசுப்பிரமணியம் (தே.வீ. அ.அ.சபை, யாழ்ப்பாணம்), நந்தகோபால் (வவுனியா), விக்கினேஸ்வரன் (மாலைதீவு), கலாராணி (ஆசிரியை, வ/கணேசபுரம் வாணி வித்தியால யம்), புவனாராணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜய லட்சுமி, இந்திரகுமாரி, சசிகலா, கெங்கமலர், ஸ்ரீஜெகனேஸ்வரன் (சவுதி), இந்திரன் (ஜேர்மனி), இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, இரத்தினம் (யாழ். வைத்தியசாலை), சிவயோகம் (மந்திகை வைத்தியசாலை) ஆகியோரின் மாமனாரும் பத்மாசனி, காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் (பொறி யியலாளர், கட்டடத் திணைக்களம்), விஜயலட்சுமி மற்றும் சிவகுமார் (இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர், RDA), காலஞ்சென்ற தவமணி ஆகியோரின் மைத்துனரும் மீனலோஜினி (டென்மார்க்), புவனலோஜினி (அரச முதியோர் இல்லம், கைதடி), இராஜசிலோஷினி (ஜேர்மனி), குசலலோஜினி (கனடா), கணேசகரன் (நோர்வே), பிரபா கரன் (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும் காலஞ்சென்ற துரைராஜா மற்றும் திலகநாயகி, ரஞ்சிதமலர் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதர ரும் கஜேந்திரன் (M.L.T, மன்னார் அரச வைத்தியசாலை), கோபிநாத் (மாணவன், யாழ்.மருத்துவபீடம்), குலதீபன் (QS, மொறட்டுவ), வினோபா (BBM, 2ஆம் வருடம், பெங்களூர் பல்கலைக்கழகம்), ஸ்ரீராம், மேகலா (ஆசிரியை, வட இந்து மகளிர் கல்லூரி), பிரசாத் (3ஆம் வருடம், பொறி யியல் பீடம், பேராதனை), சங்கர், குகனேசன், தேவநேசன், துவாரகன், நிலக் ஷன், நிலுஜன், இந்துஷா, நிதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை இலக்குமி பவளம், கந்த உடையார் ஒழுங்கை, புலோலி மத்தியிலுள்ள அவ ரது இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரி யைக்காக பி.ப. ஒரு மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொலைபேசி இல. 0777416415,*
*0113150717*

தகவல்:
சி.வே.சிவசுப்பிரமணியம் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## யாழ் பாட்டுப்போக விடாதீர்கள்!

யாழ்ப்பாணக் குடாநாட்டு மாணவர்களின் இப்போதைய நடத்தைகள், போக்குகள் பெரும் அதிர்ச்சி தருவனவாக உள்ளன. நிகழ்காலத்திலும், வருங் காலத்திலும பெரும் சமூகப் பிறழ்வுகளை உண்டாக்கக் கூடிய அளவுக்கு, இப்பிரதேச மாணவர்களின் செயற்பாடுகள் அமைந்திருப்பதாக அதிர்ச்சித் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லும்போது சீருடைகளை அணிந்துகொண்டு, புத்தகப் பைக்குள் மாற்றுடைப் பொதிகளை எடுத்துச் செல்கிறார்கள். பாடசாலை முடிந்த பின்னரும் இடைவேளையிலும் பல சந்தர்ப்பங்களில் வகுப்புகளுக்குச் செல்லாமலும் தவறான நடத்தைகளில் ஈடுபடுகின்றனர்.

இணையத்தள வசதிகளை வழங்கும் நிலையங்களுக்குச் சென்று தவறான வழிநடத்தல்களை வழங்கும் வலை அமைப்புகளைப் பார்வையிடுகின்றனர்.

அதிநவீன கையடக்கத் தொலைபேசி மூலம் தமது வயதுக்கு அப்பாற்பட்ட நட்டாமுட்டித்தனமானதும் தமக்கும் ஏனையோருக்கும் கெடுதி செய்யும் ஒவ்வாத, சொல்வதற்கே வாய்கூசும் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

ஆள்நடமாட்டமற்ற பகுதிகளில், ஒதுக்குப்புறமான இடங்களில் உள்ள கட்டடங்களில் பாலியல் துஷ்பிரயோகங்களில் சம்பந்தப்படுகிறார்கள்.

தற்காலிக தங்குமிட விடுதிகளும் மக்கள் வசிக்காத பாவனையில் இல்லாத வீடுகளும் மாணவர்களால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு பயன்படுத்தப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

இந்த அதிர்ச்சித் தகவல்கள், யாழ்ப்பாணம் செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் சிறுவர் அபிவிருத்திச் கூட்டத்தில் வெளியாகியுள்ளன. சிறுவர் நலன் பேணும் குழுவைச் சேர்ந்த வைத்தியர், மிகப் பலருக்கும் தெரியாத இந்த விவரங்களை வெளியிட்டுப் பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் சமூக நலன்விரும்பிகளையும் உஷார்ப்படுத்தியுள்ளார்.

பதினாறு வயதுக்கு உட்பட்ட இளமைப்பருவம், கட்டிளமைப் பருவம், வாலிபப் பருவம் என்பன மாணவன் ஒருவரை, இளைஞன் ஒருவனை, தனது விருப்புக்கும் ஆசை அவாவுக்கும் நினைத்த போக்கில் இழுத்துச்செல்வன.

குறிப்பிட்ட இந்தப் பருவகாலத்தில், மாணவர் மீது கண்காணிப்பும் கட்டுப்பாடும் மேற்கொள்ளப்படாவிட்டால், புத்திமதியும் நற்போதனையும் வழங்கப்படாவிட்டால், கண்காணிக்காவிட்டால் அவர்கள் தமது எதிர்காலத்தையும் பழாக்கி சமுதாயத்தையும் சீரழித்துவிடுவர். ஒரு கட்டத்தில், சட்டத்துக்கும் தண்டனைக்கும் அப்பாற்பட்ட கெட்டவர்களாக மாறும் பேராபத்து உண்டு. ஒவ்வொரு தனி மாணவனும் இந்த ஒவ்வாத நிலையை எட்டினால், எய்தினால் சமூகச் சீரழிவுகள் பரவும். எதிர்காலச் சமுதாயத்திற்குரிய வளர்ச்சியும் வாழ்நிலையும் குட்டிச்சுவராகிவிடும்.

பள்ளிப்பருவம் பொல்லாத பருவம் என்பது பேச்சு வழக்கு மொழி. இந்தப் பருவத்தில் உரிய வழிகாட்டலும் கட்டுப்பாடும் கண்டிப்பும் கண்காணிப்பும் இல்லாதவிடத்து, அவர்கள் தாமும் கெட்டு சமுதாயத்தையும் சீரழித்து விடுவார்கள். இவர்களை நெறிப்படுத்தி நற்பிரஜைகளாக்கும் பொறுப்பும் கடமையும் முழுக்க முழுக்க பெற்றோர்களிடமும் ஆசிரியர்களிடமும் உள்ளது.

விடலைப்பருவம் எதிர்வினையை கருத்தில் கொள்ளாமல், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற தடத்தில் வேகமாகச் சென்று ஏதோ ஒரு முடக்கில் தட்டுப்பட்டு வாழ்க்கையைச் சீரழிக்கும். ஒவ்வொரு தனிநபரும் கூட்டிணைவது தான் சமூகம்.

ஆகையால், பாடசாலை மாணவர்கள் தமது போக்கில் தீயபழக்க வழங்கங்களுக்கு ஆளாகி எதிர்காலத்தை நாசமாக்கி எங்கள் சமூகத்தின் வீழ்ச்சிக்கும் தோல்விக்கும் வழிசெய்யாது தடுப்பதற்கு பெற்றோர், ஆசிரியர், சமூக நலன் விரும்பிகள், சமயத் தலைவர்கள் போன்ற பல தரப்பினரின் கூட்டு முயற்சி தேவை. வெறும் திட்டங்களாலும் வாய்ப் பேச்சாலும் ஒன்றுகூடல்களாலும் அன்றி மனதாலும் செயலாலும் ஆற்றப்படவேண்டிய கருமம் இது.

இதுவிடயத்தில் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் சமூகத்தின் சீரழிவுக்கும் அதன் தாழ்ச்சிக்கும் வழி செய்யும்.

யாழ்ப்பாணச் சமூகக் கல்வியிலும் நற்பண்புகளிலும் மேலோங்கி நிற்கும் ஒன்றெனப் பெற்றுள்ள நற்பெயர், வருங்காலத்தில் சீர்கெட்ட, நிலை தளம்பிய 'கவ்வைக்கு உதவாத' சமுதாயம் என்ற தாழ்ந்த நிலைக்குப் பாழ்பட்டுப் போகாது தடுப்பதில் எங்கள் அனைவருக்கும் பங்குண்டு.

# புற்றுநோய்க்கு இலக்காவோர் வடக்கில் அதிகம் இதனால் 3 வைத்திய நிபுணர்கள் இங்கு தேவை

## சுட்டிக்காட்டுகிறார் டாக்டர் ஜெயக்குமார்

யாழ்ப்பாணம், ஒக். 3

வடமாகாணத்தில் புற்றுநோய்த் தாக்கத்துக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. இதற்கேற்ப யாழ். போதனா வைத்தியசாலையின் புற்று நோய்ச் சிகிச்சைப் பிரிவை மேம்படுத் துவதற்குப் புற்றுநோய்ச் சிகிச்சை நிபுணர் மூவரைச் சேவையில் நிய மிக்க வேண்டிய தேவை உள்ளதாக போதனா வைத்தியசாலையின் புற்று நோய்ச் சிகிச்சைப் பிரிவின் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமார் தெரிவித் தார்.

மருதனார்மடத்திலுள்ள ''கேன்'' புற்றுநோய்க் காப்பகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உலக சிறுவர் தின நிகழ்வில் தலைமை உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமார் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு :-

வடபகுதியில் புற்றுநோய்த் தாக்கத்துக்கு உட்படுவோரின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. யாழ்.மாவட்டத்தில் புற்றுநோய் காரணமாக 50 சிறுவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். புற்றுநோய்த் தாக்கத்துக்கு உள்ளான பலர் சிகிச்சை பெற்றுக் குணமடைந்துள்ளனர். மேலும் பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் முதல்தர, இரண்டாம்தர, மூன்றாம் தர நிலையமாகப் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மகரகமவிலுள்ள தேசிய புற்றுநோய் நிறுவனம் முதலாம் தர சிகிச்சை நிலையமாகவும், யாழ்ப்பாணம், கண்டி, காலி ஆகிய மாவட்டங்களிலுள்ள சிகிச்சை நிலையங்கள் இரண்டாம்தர சிகிச்சை நிலையங்களாகவும், மட்டக்களப்பு, அனுராதபுரம், பதுளை, குருநாகல் ஆகிய மாவட்டங்களிலுள்ள சிகிச்சை நிலையங்கள் மூன்றாம்தர நிலையங்களாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு நவீன உபகரணங்களுடன் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மேலும் மூன்று வைத்திய நிபுணர்கள் சேவையில் நியமிக்கப்பட வேண்டியுள்ளது. இதன்மூலம் சிறுவர் பகுதிக்கு ஒரு வைத்திய நிபுணரும், வயது வந்தவர்களுக்கு மூன்று வைத்திய நிபுணர்களும் நியமிக்கப்பட வேண்டும்.

குருதிப் புற்றுநோய், மூளைப் புற்றுநோய் ஆகியவையே சிறுவர்களை அதிகம் பாதிக்கின்றன. பரம்பரை ரீதியான காரணியே சிறுவர்களின் புற்றுநோய்க்கு அதிக காரணமாக உள்ளது - என்றார். (த-14)

# பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் 6000 பெற்றோர் முதியோர் இல்லங்களில்

யாழ்ப்பாணம்,ஒக்.3

உலக முதியோர் தினமான ஒக்ரோபர் முதலாம் திகதியில் தமது பிள்ளைகளாலும் மற்றும் உறவினர்களாலும் கைவிடப்பட்டுள்ள 6 ஆயிரம் பேர் வரையிலான பெற்றோர் நாடு முழுவதிலும் 250 முதியோர் இல்லங்களில் தஞ்சமடைந்துள்ளனர் என சமூக சேவைகள் அமைச்சின் மூத்தோருக்கான தேசிய செயலகம் தெரிவித்துள்ளது.

மேலும் 2030ஆம் ஆண்டில் நாட்டின் ஒட்டுமொத்த சனத் தொகையின் நூற்றுக்கு 22 வீதமானோரும் 60 வயதைக் கடந்த முதியவர்களாகவே இருப்பார்களென மூத்தோருக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் திருமதி ஜே.கிருஷ்ணமூர்த்தி ஊடகமொன்றுக்குத் தெரிவித்தார்.

இதனிடையே தமது வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்குப் போதுமான பராமரிப்புத் தொகையொன்றைத் தமது பிள்ளைகளிடமிருந்து பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்து இது வரையில் 600 பெற்றோர்களிடமிருந்து மூத்தோருக்கான தேசிய செயலகத்தின் பராமரிப்புப் பிரிவிற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்த ஆண்டின் கடந்த சில மாதகாலத்துள் மாத்திரம் அத்தகைய 158 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், அவற்றுள் 117 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்டோருக்கு நிவாரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த ஐந்து தசாப்த காலத்துள் இந் நாட்டில் நிகழ்ந்து வரும் சமூகப் பொருளாதார மாற்றங்களை அடுத்து சிலர் தமது பெற்றோரைப் பராமரிக்காது கைவிடும் நிலைப்பாடு உச்சம் பெற்றுள்ளதாகவும், இந்த நிலைப்பாட்டைக் கவனத்தில் கொண்டே அவ்விதம் பிள்ளைகள் மற்றும் உறவினர்களால் கைவிடப்பட்டுள்ள மூத்த பிரஜைகளின் பாதுகாப்புக் கருதி கதிர்காமத்தில் மூத்தோர் பராமரிப்பு இல்லமொன்றைத் தமது செயலகம் ஆரம்பித்துள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த-22)

# அகில இலங்கைச் சைவப் புலவர்களின் பொன்விழா மாநாடு இன்று கொழும்பில்

யாழ்ப்பாணம், ஒக். 3

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பொன்விழாச் சைவமாநாடு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 7 மணிவரை கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தப்பிள்ளையின் தலைமையில் நடைபெறுகிறது.

இவ்விழாவுக்கு அதிதிகளாக திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் 23ஆவது குரு மகா சந்நிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச பரமாரச்சாரிய சுவாமிகள், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் கலந்து கொள்வர்.

இன்று காலை 9 மணிக்கு குருமகா சந்நிதானங்களின் ஆசியுரைகளுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து வித்துவான் வ.செல்லையா அரங்கில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சைவப்புலவர் ஹேமலோஜினி குமரன் வரவேற்புரை நிகழ்த்துவார். தொடர்ந்து தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனின் சிறப்புரையும் சைவப்புலவர், இளஞ் சைவப் புலவர் பட்டமளிப்பும் இடம் பெறும்.

பி.ப 3 மணிக்கு சைவப்புலவர் அருணாசலம் தேசிகமணி அரங்கில் ''கல்வியில் சைவநீதி, கடமையில் சைவநீதி, சமூகப்பணியில் சைவநீதி, ஆலயப் பணியில் சைவநீதி'' என்ற தலைப்புக்களில் கருத்தரங்கு களும் அதனைத் தொடர்ந்து பொன் விழாப் போட்டிப் பரிசளிப்பும், கலை விழாச் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (த-ற)

# வடமாகாண உள்ளூராட்சி மாநாடு இம்மாத இறுதியில் வவுனியாவில்

யாழ்ப்பாணம்,ஒக்.3

வடக்கு மாகாண உள்ளூராட்சி மாநாடு இம்மாதம் இறுதிப்பகுதியில் வவுனியாவில் நடைபெறவுள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி அறிவித்துள்ளார்.

'நல்லாட்சி மூலமான நிலை பேறான அபிவிருத்தி' என்ற தலைப்பில் இந்த மாநாடு இடம்பெறும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களைச் சேர்ந்த 34 சபைகள் இந்த மாநாட்டில் பங்குபற்றவுள்ளன.

வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களின் வினைத்திறன், பயனுறுதியான சேவை வழங்கல் ஆகியவற்றை பேண்தகு நிலைக்கு மாற்றுவதற்கு உந்துசக்தியாகவும் உள்ளூராட்சி அலுவலர்களிடையே புரிந்துணர்வையும் இணைப்பையும் ஏற்படுத்தக்கூடியதாகவும் இந்த மாநாடு அமையும் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

மாநாட்டு இறுதிநாள் நிகழ்வில் சிறப்பாக செயற்பட்ட மூன்று உள்ளூராட்சி சபைக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்படவுள்ளன. (த-302)

## நாளை

| | | |
|---|---|---|
| புரட்டாதி 18 | | 04.10.2010 திங்கட்கிழமை |
| திதி: | : | ஏகாதசி பி.ப 10.23 வரை |
| நட்சத்திரம் | : | ஆயிலியம் பி.ப. 01.02 வரை |
| [illegible] | : | 12.02-01.32 வரை |
| ராகுகாலம் | : | 07.32-09.02 வரை |

# உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்.அலுவலகத்தில் ஆளணிப் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,ஒக்.2

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் ஆளணிப்பற்றாக்குறை நிலவுவதன் காரணமாக அதன் செயற்பாடுகளை விரிவுபடுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வரி மதிப்பீட்டாள்கள், வரி உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் எனப் பலதரப்பட்ட வெற்றிடங்கள் இந்த அலுவலகத்தில் உள்ளன. அவை முப்பது வருடங்களாக நிரப்பப்படாமல் உள்ளமையால் ஒப்பந்த அடிப்[illegible]லேயே கணிசமான வெற்றிடங்களுக்கு ஆள்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தினால் முழுவீச்சுடன் பணிகளை முன்னெடுக்க முடியாத நிலை இருந்தது. அதன் காரணமாக உள்ள பணியாளர்களை வைத்துக்கொண்டு ஓரளவு சமாளிக்க முடிந்ததாகத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் தற்போது யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் திணைக்களத்தின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதாயின் அலுவலகத்தில் உள்ள ஆளணிப் பற்றாக்குறை பூர்த்திசெய்ய வேண்டுமெனக் கூறப்படுகிறது.(த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2010 ஆம் ஆண்டு
## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
## சித்தி பெற்ற அக்கராயன் மாணவர்களுக்கான
## பரிசளிப்பு விழா அழைப்பு 2010

காலம்: இன்று (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை

நேரம்: 9 மணி

இடம்: இல. 2 ஸ்கந்தபுரம் அ.த.க. பாடசாலை ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

இந்த நிகழ்வில் தாங்களும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை

கண்ணம்மா அரிசியாலை, இரணைமடுச் சந்தி, கிளிநொச்சி (C/571544) அவுஸ்திரேலிய சிட்னிவாழ் புலம்பெயர் உறவுகள்.

## தேவை

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் 2 பரப்புக்கு மேற்பட்ட காணியுடன் அல்லது கட்டடத்துடன் சேர்ந்து நிலம் குத்தகைக்குத் தேவை.

தொடர்பு: 0773208634, 0777144130, 0772683602

## வேலை வாய்ப்பு

கணக்காளர் (ஆண்,பெண்) -Food costing,Income tax,Staff salary,Profit Lost போன்றவை பற்றிய முன் அனுபவம் தேவை.

காசாளர் (ஆண்) - முன் அனுபவம் தேவை,கிராமசேவகர் நற்சான்றிதழ் தேவை.

அறைகள் சுத்திகரிப்பவர் (ஆண்)- முன் அனுபவம் தேவை.

நேர்முகப் பரீட்சை-04/10/2010 திங்கள்

நேரம் -மு.ப. 9.00-பி.ப.5.00 மணி வரை

இடம் -ஹோட்டல் சுவர்க்கா

இல.6,சட்டநாதர் வீதி (முடமாவடிச் சந்தி) நல்லூர். (104117)

## கண்ணீர்க் காணிக்கை



எம்முடன் எழுது வினைஞராக கடமையாற்றி ஓய்வு பெற்ற

**திரு.வேலுப்பிள்ளை துரைராஜா**

அவர்கள் 30.09.2010 அன்று இறைபதமடைந்ததைக் கேள்வியுற்று மிகுந்த அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### Dr.கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை துரைராஜா

*(யாழ்.போதனா வைத்தியசாலையின் ஓய்வுபெற்ற சுகாதார முகாமைத்துவ உதவியாளர், சித்த ஆயுர்வேத வைத்தியர், அகஸ்தியர் வைத்தியசாலை)*



கரம்பைக் குறிச்சி, வரணியைப் பிறப்பிடமாகவும் இல. 29, மூத்த விநாயகர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை துரைராஜா கடந்த 30.09.2010 வியாழக்கிழமை சிவபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அனுசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், வாசுகி (B.A., M.B.A.லண்டன்), கோபிநாத் (சித்த மருத்துவர்), சுகிர்தரநாத் (பொறியியலாளர், சிங்கப்பூர்), கோகுல்நாத் (Q.S.யாழ்ப்பாணம்), ராகவநாத் (B.A.லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், முருகானந்ததாஸின் (லண்டன்) மாமனாரும், சிதம்பரப்பிள்ளை, வேலாயுதம்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பரமேஸ்வரி, இலட்சுமியம்மா, சண்முகரத்தினம், அனுசபவானி, ஜெய நீதிமாலா, சத்தியபவானி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*29, மூத்த விநாயகர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
*தொ.பே. 0773535516* (104118)

தகவல்:
குடும்பத்தினர்.

## முதியோர் இல்லத்துக்கு பஸ்

யாழ்ப்பாணம், ஒக். 2

கைதடி முதியோர் இல்லத்துக்கு விரைவில் பஸ் ஒன்று வழங்கப்படவுள்ளது.

இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோரின் வசதி கருதி வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி இந்தப் பஸ்ஸை வழங்கவுள்ளார்.

இல்லத்தில் நடைபெற்ற சர்வதேச முதியோர் தின விழாவில் பிரதம விருத்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார் ஆளுநர்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த இல்லதின் பாவனைக்கு ஜெனரேற்றர் ஒன்றும் வழங்கப்படும் அதனைவிட இல்லப் புனரமைப்பு பணிக்காக நிதியை ஒதுக் கவும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஒ-26)

## BRITISH COUNCIL IELTS





முதன்முறையாக யாழ்குடாநாட்டில் **IELTS** பரீட்சை **November 20**அன்று

**'Special Classes by: Senior Teachers including Cambridge Qualified Teachers.**

**வார நாட்களில்**

**Diploma In English**
திங்கள் – புதன் – வெள்ளி
காலை 10 மணி – 12மணி
பிற்பகல் 2.30 மணி – 4.30 மணி

**Spoken English**
செவ்வாய் – வியாழன்.
காலை 10 மணி – 12 மணி.
பிற்பகல் 2.30 மணி – 4.30 மணி

ஆங்கில மொழியில் கல்வியைத்தொடர விரும்பும் சிறுவர்களுக்கான விசேட வகுப்புக்கள்.

**PRE-FOUNDATION**
**LEVEL 1,2,3 & 4**
**[FROM 5 YEARS TO 16 YEARS]**
திங்கள் / செவ்வாய் / புதன் / வியாழன்
மாலை 2.30 – 4.30

**வாரஇறுதி நாட்கள்.**

**Diploma in English**
**Advanced Diploma in English**
**IELTS** வகுப்புக்கள்.
சனி – ஞாயிறு
காலை 8.30 – 11.30 / பிற்பகல் 2.30 – 4.30

ஆங்கில மொழியில் கல்வியைத்தொடர விரும்பும் சிறுவர்களுக்கான விசேட வகுப்புக்கள்.

**PRE-FOUNDATION**
**LEVEL 1,2,3 & 4**
**[FROM 5 YEARS TO 16 YEARS]**
சனி – ஞாயிறு
காலை 8.30 – 11.30
மாலை 2.30 – 4.30

### BBS இன் 9 வளாகங்கள்

- நல்லூர்: 140, கோவில் வீதி, நல்லூர்.
- கோப்பாய்: பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி.
- நீர்வேலி: 1ம் கட்டை, இராச வீதி, நீர்வேலி.
- சாவகச்சேரி: சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அருகில்
- மானிப்பாய்-1: 252, ஆலடி சந்தி, யாழ் வீதி மானிப்பாய்.
- மானிப்பாய்-2: சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.
- சுன்னாகம்: Lakshmi Cottage (புதிய நீதிமன்ற அருகாமை) கே.கே.ஸ் வீதி, மல்லாகம்.
- புலோலி: ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை.
- அச்சுவேலி: அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகில்

**BRITISH BUSINESS SCHOOL**
140, கோவில் வீதி, நல்லூர். Contact: 021 222 5796, 0773627055, 0776646357.

## யாழ். நகரில் வீடு விற்பனைக்கு

யாழ்.நகரில் வீடு விற்பனைக்குண்டு. யாழ்.மொடல் மார்க்கட்டில் இருந்து 400 மீற்றர் தூரத்திலும் 2.8 பரப்பளவுடையதும் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் கூடியதும் 2850 சதுர அடி விஸ்தீரணமும் கொண்டது.வீடாகவோ வியாபார தேவைக்காகவோ பாவிக்கக் கூடியது. வாகனத் தரிப்பிட வசதியுமுண்டு.

தொடர்பு:-யாழ்ப்பாணம்-0772993764
(சி/571270) கொழும்பு -0112360858

## வீடு வாடகைக்கு மற்றும் ஆசிரியர் தேவை

இரண்டு அல்லது மேற்பட்ட அறை கொண்ட வீடு யாழ்.நகரம் அல்லது அதனை அண்மித்த பிரதேசங்களில் வாடகைக்குத் தேவை.

IELTS GENERAL ENGLISH IT Class கற்பிக்கக் கூடிய ஆசிரியர் மற்றும் வரவேற்பாளர் (Recephonist) ஆகியோர் தேவை.தொடர்பு:-0777919293

e.mail-manager@sec.edu.lk.

## திருமண சேவை

15 வருட திருமண சேவை நிறைவினை முன்னிட்டு வேல் அமுதன் பாரிய சேவைக் கட்டணக் குறைப்பு! விவரங்களை "சுயதெரிவு முறை முன்னோடி" சர்வதேச, மூத்த திருமண ஆற்றுப் படுத்துநர் வேல் அமுதனுடன் திங்கள், புதன், வெள்ளி, மாலையிலோ சனி, ஞாயிறு நண்பகலிலோ தொடர்புகொண்டு விசாரித்தறிக!

தொலைபேசி: 0112360488,0112360694, 0114873929

## SPONSORSHIP
## ONLY - 75, 000/=

வெளிநாடு செல்லவுள்ள மாணவர்களுக்கான பணித்தியான ஏற்பாடுகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படும்

HOT LINE 0771615010
GALLE ROAD, WELLAWATTA, COLOMBO 06.

## முகாமையாளர், வெளிக்கள உத்தியோகத்தர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் லிஸ்வின் நிதி நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை.

**முகாமையாளர்**

★ தொடர்பாடல் திறமையும் சுறுசுறுப்பும் துரித தீர்மானம் எடுக்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
★ அலுவலக தொடர்பாடல் மற்றும் அலுவலக வேலைகளை ஆங்கிலத்தில் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
★ வயது எல்லை 30-45 வரை
★ நிதியியல், வங்கியியல், லீசிங் போன்ற அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**வெளிக்கள உத்தியோகத்தர்**

★ நிதித்துறையில் சந்தைப்படுத்தல் அனுபவம்
★ வயது 20-40 வரை
★ சந்தைப்படுத்தல் துறையில் சான்றிதழ் இருப்பது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

மேற்கூறிய தகைமையுடையோர் எதிர்வரும் 07.10.2010, 08.10.2010 ஆகிய தினங்களில் சுயவிவரக்கோவை மற்றும் ஆவணங்களுடன் 9 மணி தொடக்கம் 4 மணி வரை நேர்முகத்தேர்வுக்கு வரவும்.

**Lisvin Investments Ltd**

56/17, ஸ்ரான்லி வீதி,
(சம்பத் வங்கிக்கு அருகில்), யாழ்ப்பாணம்.
T.P: 0777997998, E-mail:vajira@lisvin.com





யப்பானில் இருந்து தனிப்பட்ட ரீதியாக இறக்குமதி செய்யப்பட்ட இலங்கையில் பதிவுசெய்யப்படாத

## கார் விற்பனைக்கு

**2007 Model Suzuki Alto**

**Pearl White**
**Price Rs.2,150,000/-**
**Condect Number:**
**M.Matheesan 0777725258**

ஓடிய தூரம்
23 000 Km மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.வுக்குச் சென்ற மஹிந்தவைச் சந்திக்காது ஓடி ஒதுங்கிக் கொண்ட மேற்குலகத் தலைவர்கள்

'லங்காதீப' சிங்கள நாளிதழில் வியாழக்கிழமை வெளிவந்த 'வியாழன் அலசல்' அரசியல் கட்டுரையின் தமிழ் வடிவம் இங்கு பிரசுரமாகிறது.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில், சுரண்டும் மேலாதிக்கவாத நாடுகளாகவே அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் கருதப்பட்டன. அமெரிக்க நிதி உதவியுடன் இலங்கையில் செயற்பட்ட 'போர்ட்' அமைப்பை ஒரு உளவு நிறுவனமென விமர்சித்து இலங்கையிலிருந்து வெளியேற்றியவர் சிறிமாவோவே.

ஆயினும் ஐ.நா. சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ள அமெரிக்கா சென்ற சகல சந்தர்ப்பங்களிலும் அந்நாட்டு ஜனாதிபதியைச் சந்தித்து, இருநாடுகள் தொடர்பான பிரச்சினைகளை விவாதிக்க சிறிமாவோவுக்கு வாய்ப்புகள் கிடைத்தே வந்தன.

அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளை எவ்வளவுதான் தாக்கி விமர்சித்த போதிலும், அமெரிக்க ஜனாதிபதிகளில் எவரும் எந்தச் சந்தர்ப்பங்களிலும் சிறிமாவைச் சந்தித்துப் பேச்சு நடத்த மறுத்ததில்லை.

சிறிமாவோ போன்றே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளைத் தாக்கி விமர்சிக்கும் ஓர் அரசுத் தலைவர்.

ஆனால், அண்மையில் ஐ.நா. சபைக் கூட்டத்துக்காக அமெரிக்கா சென்ற மஹிந்த ராஜபக்ஷவால் ஒபாமாவைச் சந்திக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள இயலாது போனதேன்?

2006 ஆம் ஆண்டின் ஐ.நா.சபைக் கூட்டத்துக்குச் சென்றதே, ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட முதலாவது அமெரிக்கப் பயணம் ஆகும். அவ்வேளை இடம்பெற்ற விருந்தில் ஒரு சில நிமிடங்கள் அப்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை சந்திக்கும் வாய்ப்பு மஹிந்தவுக்குக் கிட்டியது.

அச்சந்திப்பின்போது மஹிந்தவின் காதருகே குனிந்து ஜோர்ஜ் புஷ் ஏதோ கூறினார். அச்சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம். இலங்கையின் நாலா பகுதிகளிலும் 'கட் அவுட்'டுக்களாக விளம்பரப்படுத்தப்பட்டன.

2008 ஆம் ஆண்டின் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்துக்குச் சென்றிருந்தவேளையும் மஹிந்தவால் ஒபாமாவைச் சந்திக்க இயலவில்லை. ஒபாமா 2008 ஆம் ஆண்டிலேயே அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார்.

பொதுவாக அமெரிக்காவில் புதிய ஜனாதிபதியொருவர் பதவி ஏற்றதும் உலக நாடுகளின் தலைவர்களைத் தமது பதவிக் காலத்திற்குள் ஒருமுறையாவது சந்தித்து உரையாடுவது சம்பிரதாயம். இதற்கேற்ப கடந்த காலங்களில் அமெரிக்க ஜனாதிபதிகள் தமது பதவிக் காலத்துள் ஒரு தடவையாவது இலங்கை அரசுத் தலைவர்களைச் சந்தித்து உரையாடியுள்ளனர். பரக் ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு ஆண்டுகள் முடிவடைந்த போதிலும் அவர் இன்னமும் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியதில்லை. அது ஏன்?

தேர்தல்களில் வெற்றியீட்டும் பொருட்டு அமெரிக்காவை வாயில் போட்டுமென்ற மஹிந்த அரசு அதனைப் பகைத்துக் கொண்டமையே இதற்குக் காரணமாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவின் வெற்றிக்கு அமெரிக்கா உதவுவதாக அரசு பல தடவைகள் குற்றம் சாட்டியது. அமெரிக்க அரசு அக் குற்றச்சாட்டை மறுத்து இலங்கை அரசிடம் விளக்கம் கூறிய வேளையில் இலங்கை அரசு இரகசியமாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்து ''நாம் வேடிக்கையாகத்தான் அவ்விதம் கூறினோம். அவற்றையெல்லாம் பொருட்படுத்த வேண்டாம்'' எனக் கேட்டுக் கொண்டது.

இதேபோன்ற ஒரு புரளி முன்னரும் கிளம்பி இருந்தது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பைப் பெற ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினரொருவரின் இல்லத்தில் இரகசியப் பேச்சு நடத்தப்பட்டதாக விமல் வீரவன்ச பகிரங்கமாகக் குற்றம்சாட்டியிருந்தார்.


அத்தோடு, அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை எதிர்க் கட்சிக்குத் தாவ வைக்க அமெரிக்கா, ஜெனரல் பொன்சேகாவுக்கு நிதி வழங்கியது எனவும் விமல் வீரவன்ச கட்டுக் கணக்கில் பணத்தைக் காட்டிக் குற்றம் சுமத்தினார்.

இலங்கையில் தேர்தலை வென்றெடுக்க மஹிந்த அரசு இவ்வாறு அமெரிக்காவை வாயில் போட்டு மென்றால், உலக அரங்கில் மஹிந்த அரசை வாயில் போட்டு மெல்ல அமெரிக்கா முயலாமல் இருக்குமா?

இதற்கு முன்னர் அமெரிக்கா சென்ற போதெல்லாம் மஹிந்த ராஜபக்ஷ அந்நாட்டு ஜனாதிபதியைச் சந்திக்க இயலாது போனாலும் கூட, ராஜாங்கச் செயலாளரையாவது சந்தித்துப் பேச முடிந்திருந்தது.

ஒபாமா அரசின் வெளிவிவகார அமைச்சர் கிலாரி கிளிங்டன், இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலத்திலும், யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் ஜனாதிபதி மஹிந்தவுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரையாடியிருந்தார். அத்தகைய அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், அந்தப் பேச்சுக் குறித்த விவரங்களைப் பிறழ்வுபடுத்தி மஹிந்த அரசு வெளியிட்டது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மஹிந்த



அரசின் செயற்பாடுகளைப் பாராட்டினார் என விவபரித்துப் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்தது. ஒருதடவை இலங்கை அரசின் அத்தகைய பத்திரிகை அறிக்கைக்கு மறுப்புத் தெரிவித்து அறிக்கை வெளியிட வேண்டிய நிலையும் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்துக்கு ஏற்பட்டது.

இவ்விதம் இலங்கை அரசு கிலாரி கிளிங்டனுடனான மஹிந்தவின் உரையாடல் விவரங்களைப் பிறழ்வு படுத்தி அறிக்கை வெளியிட்ட பின்னர் கிலாரி கிளிங்டன் இற்றைவரை மஹிந்தவுடன் தொடர்பு கொண்டு பேசியதில்லை. மஹிந்த இந்த ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் வெற்றியீட்டிய பின்னர் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அமெரிக்காவுக்குச் சென்று கிலாரி கிளிங்டனைச் சந்தித்த வேளையிலும் கிலாரி கிளிங்டன் மஹிந்த அரசின் நடவடிக்கைகளுக்கு பாராட்டுத் தெரிவித்தார் என அரசு பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டது. இதன் காரணமாகவே மஹிந்தவின் அண்மைய ஐ.நாவுக்கான பயணத்தின் போது அமெரிக்க கிலாரி கிளிங்டனைச் சந்தித்துப் பேச்சு நடத்தும் வாய்ப்புக்கிட்டாது போயிற்று.

ஜனாதிபதியின் அண்மைய ஐ.நா. பயணத்தின் போதும், ஐ.நா.சபைப் பொதுச் செயலாளர் பான் கீ - மூன், மஹிந்தவைச் சந்தித்தபோதும் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து கண்டறியவென ஐ.நா. பொதுச்செயலாளர் நியமித்த குழு இலங்கை அரசுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளமாட்டாது என ஐ.நா. பொதுச்செயலாளர் ஜனாதிபதி மஹிந்தவிடம் தெரிவித்தார் என அரசு பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்திருந்தது. ஆனால் ஐ.நா.பொதுச் செயலாளர் அத்தகைய கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை என ஐ.நா. சபையின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கடந்த வருடம் ஐ.நா. பொதுச்செயலாளரின் இலங்கைக்கான பயணத்தின் போது ஜனாதிபதி மஹிந்தவுடன் அவர் மேற்கொண்ட எழுத்து மூல இணக்கப்பாட்டை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தியாக வேண்டும் என ஐ.நா.செயலாளர் வலியுறுத்தினார் என்றே ஐ.நா. ஊடகப் பிரிவு அறிக்கை வெளியிட்டிருந்தது. அத்தகைய இணக்கப்பாட்டை நிறைவேற்ற இலங்கை அரசு தவறியதன் காரணமாகவே போர்க் குற்றங்கள் குறித்துத் தனக்கு ஆலோசனை வழங்குவதற்கான குழுவை நியமித்தார் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறாயின் எதற்காக அரசு இவ்விதம் விமர்சித்துத் தூற்றிப் பேச வேண்டும்?

உண்மையில் ஐ.நா. சபை என்பதென்ன? சர்வதேச சமூகம் என்றால் என்ன? என்பது குறித்து எதுவும் தெரிந்திராத இந்நாட்டின் அப்பாவிப் பொதுமக்களது அனுதாபத்தையும் ஆதரவையும் திரட்டிக்கொள்ளும் நோக்கிலேயே அரசு அவ்விதம் செயற்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்தவின் ஐ.நா. விஜயத்தின் போது மேற்குலக நாடுகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு மேற்கொள்ளும் பொருட்டு அவ்வவ் நாடுகளின் இலங்கைக்கான தூதர்கள் ஊடாக வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும், ஆயினும் அத்தகைய மேற்குலக நாடுகளின் தலைவர்களில் ஒருவரைத்தானும் ஜனாதிபதி மஹிந்தவுக்குச் சந்தித்துப் பேச வாய்ப்புக் கிட்டவில்லை எனவும் ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

பிரிட்டனில் தற்போது புதிய பிரதமரொருவர் பதவியேற்றுள்ளார். பிரிட்டனுக்கும் இலங்கைக்கும் இடையேயான உறவு, அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையேயான உறவைவிட மிக நெருக்கமானது. ஆனாலும் ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் பிரிட்டன் பிரதமரை ஜனாதிபதி மஹிந்த சந்தித்துப் பேசவும் வாய்ப்புக் கிட்டாது போய்விட்டது.

மாறாக கட்டார், துருக்கி, ஜமேய்க்கா, ஹங்கேரி மற்றும் ஈரான் ஆகிய நாடுகளின் தலைவர்களை மட்டுமே சந்தித்துப் பேசும் வாய்ப்பு ஜனாதிபதிக்குக் கிட்டியிருந்தது.

மேற்குலக நாடுகள் பட்டியலில் உள்ளடங்கியிருப்பவற்றில் நோர்வே நாட்டின் பிரதிநிதியையே ஜனாதிபதி மஹிந்தவால் சந்தித்துப் பேச முடிந்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவு வழங்கியதாகக் குற்றம் சாட்டி ஜனாதிபதி மஹிந்த நோர்வே நாட்டுப் பிரதமரை கடுமையாக விமர்சித்தார் என்பது ஞாபகத்திற்குரியது. அது மட்டுமல்லாது விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உதவி, ஒத்தாசை வழங்கி அந்த இயக்கத்தைப் பலமடைய வைப்பதாக நோர்வே மீது குற்றம் சாட்டிய இந்த இலங்கை அரசே, முன்னாள் நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை இலங்கைக்கு வருமாறு இப்போது அழைப்பும் விடுத்துள்ளது. அந்த அழைப்பின் பேரில் இலங்கைக்கு வர சொல்ஹெய்ம் தயாராகி வருகிறார்.

ஜனாதிபதி மஹிந்தவின் ஐ.நா. பயணத்தின் ஒரேயொரு சாதகமான பயன் இது மட்டுமே.

சரி, ஐ.நா. சபைக்கான பயணத்திற்குச் செலவிடப்பட்ட நிதி ஐ.தே.கட்சி தெரிவிக்கும் கணக்குப்படி 1500 மில்லியன் ரூபாக்களாகும். இது இந் நாட்டுப் பொதுமக்களின் நிதியே.

ஈரான், துருக்கி,ஹங்கேரி ஆகிய நாடுகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசவும், சொல்ஹெய்மை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுவதற்கும் 1500 மில்லியன் ரூபாக்களை செலவிட வேண்டியது அவசியம் தானா?

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட்ட மேற்குலக நாடுகளுடன் முரண்பட்டுக் கொண்டு இலங்கையால் முன்னேற்றப்பாதையில் பயணிக்க இயலாது.

''உங்களுக்கு எங்களது ஆதரவு தேவையே தவிர உங்களது ஆதரவு எங்களுக்கு ஒரு போதும் தேவையில்லை.'' அண்மைய ஐ.நா. சபைப் பொதுக் கூட்டத்தில் வைத்து அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட்ட மேற்குலக நாடுகளின் தலைவர்கள் மஹிந்தவின் அரசுக்கு விடுத்துள்ள சமிக்ஞை இதுவே.

இந்த மேற்குலக நாடுகள் சீனா மற்றும் இந்தியா போன்று இலங்கையிடமிருந்து துறைமுகங்களையோ, நிலங்களையோ கோரவில்லை. வேறெந்த உதவிகளையும் கோரவில்லை. இலங்கை மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமையைப் பாதுகாக்குமாறே இலங்கையைக் கோரி நிற்கின்றன. இதற்காக இலங்கை அரசு நிதியெதனையும் செலவிட வேண்டியதில்லை. இந்நாட்டு மக்களது மனித உரிமைகளைப் பாதுகாத்து, ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தி, அரசுக்கு எதிரான தரப்புக்களும் ஜனநாயக ரீதியிலான அரசியற் செயற்பாடுகளில் ஈடுபடத்தக்க சூழலை ஏற்படுத்தினாலே போதும்.

இலங்கையின் ஆடைக் கைத்தொழில் ஊக்குவிப்புக்கான ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகை மட்டுமல்ல, இலங்கை இளைஞர், யுவதிகளுக்கு வருமானம் ஈட்டத்தக்க தொழில் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்க மேற்குலக நாடுகள் தயாராகவுள்ளன.

**சிங்கள மூலம்:- உபுல் யோசெப் பெர்னாண்டோ**
**தமிழில்:- வீயெஸ்ரீ**

கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதை விடுத்து, ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்துக்கான அமெரிக்க விஜயத்தின் போது மேற்குலக நாடுகளின் அரசுத் தலைவர்களுடன் எடுத்துக் கொண்ட புகைப்படங்களை விளம்பரப்படுத்தி ''இதோ அமெரிக்காவும் மஹிந்தவின் சட்டைப் பைக்குள் வீழ்ந்துவிட்டது'' எனக் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்ள அரசு முயல்கிறது.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டுமல்ல உலக அரசுத் தலைவர்களையும் தம் பக்கம் இழுத்துக் கொள்ளத் தக்க வீரர் மஹிந்த எனக் காட்டிக் கொள்ள ஆர்வம் காட்டிச் செயற்படுகிறது அரசு.

அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் இலங்கை அரசின் இத்தகைய பாணி குறித்து நன்கு அறிந்து வைத்துள்ளன. மஹிந்தவுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டால் அப்புகைப்படங்களைக் காட்டியே மஹிந்தவின் அரசு தான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை உலகமே அனுமதிக்கிறது என இந்நாட்டு மக்களுக்குக் காட்டிக் கொள்ளும்; இந்நாட்டு மக்களை நம்ப வைக்கும் என்பதை அந்த மேற்குலக நாடுகள் நன்கு தெரிந்து வைத்துள்ளன. இதனாலேயே அந்நாட்டுத் தலைவர்கள் ஜனாதிபதி மஹிந்தவுடன் சந்திப்புக்களை மேற்கொள்ள விரும்புவதில்லை.

முன்னாள் இராணுவத் தளபதிசரத்பொன்சேகாவுக்கு எதிரான வழக்கில் இராணுவ நீதிமன்றம் அவருக்கு முப்பது மாதகால சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்ததன் பின்னரே ஜனாதிபதி மஹிந்த ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றார்.

சரத்பொன்சேகா குற்றம் இழைத்திருப்பின் அவருக்கு நாட்டின் சாதாரண நீதிமன்ற விசாரணை மூலம் தண்டனை வழங்கப்படுதலே நியாயம் என அமெரிக்கா பகிரங்கமாகவும், தனிப்பட்ட ரீதியிலும் ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஆலோசனை வழங்கியிருந்தது. ஆனால் இராணுவ நீதிமன்றம் மூலம் தீர்ப்பு வழங்க வைத்தே ஜனாதிபதி மஹிந்த

(29ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

## FACULTY OF AGRICULTURE

Senior Professor/ Professor in Agronomy/ Agricultural Biology/ Agricultural Chemistry/ Agricultural Economics

Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Agricultural Biology/ * Animal Science

*Preference will be given to those who have B.V.Sc. degree for the appointment in the Department of Animal Science

## FACULTY OF ARTS

Senior Professor/ Professor in Education/ Economics/ Fine Arts / Geography/ Linguistics/ Tamil /History

Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Education/ Hindu Civilization/ Law/ Political Science/ Psychology/ Linguistics/ Geography/ Sanskrit/ Sociology/ Teaching of English as Second Language / Dance (Bharathanatiyam/ Drama & Theatre Arts)/ Music (Vocal/ Miruthangam/ Veena/ Violin)

Instructor Grade II in Music (Vocal/ Miruthangam/ Violin/ Veena/ Pannisai ) Dance (Bharathantiyam)/ Art & Design (Painting and Sculpture)

Note: Preference will be given those who have specialization and research publications in recognized National/International Journals in the fields of Human Geography for the appointment for the Post of Senior Lecturer Gr.I/II in the Department of Geography.

## FACULTY OF MEDICINE

Senior Professor/Professor in Anatomy/ Physiology/ Community Medicine/ Pathology/ Forensic Medicine/ Pharmacology/ Psychiatry/ Medicine/ Paediatrics / Surgery/ Obstetrics & Gynaecology

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Anatomy/ Biochemistry/ Physiology/ Community Medicine/ Pathology/ Microbiology/ Parasitology / Forensic Medicine/ Pharmacology/ Psychiatry/ Medicine/ Paediatrics/ Medical Education

Endowment Chair in Oncology/ Orthopedic Surgery

Scientific Assistant in Biochemistry/ Forensic Medicine

**Notes :**

1. Applications for permanent position as well as contract appointment will be entertained from candidates with MBBS degree.
2. Applications from candidates with specialization in Chest Medicine will only be considered for the Posts in Medicine
3. Preference will be given to those who have post graduate qualification in Community Medicine/Family Medicine for the posts in Community Medicine
4. Applications from candidates with BDS/BVSc degree can also be considered for the posts in Biochemistry.

## PARA MEDICAL DEGREE PROGRAMME

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Nursing/ Pharmacy/ Medical Laboratory Technology

Note : Applicants with special degree in related fields with postgraduate degree or professional training in the relevant field will also be considered under category III / IV of the scheme of recruitment for the Post of Lecturer (Probationary) .

## FACULTY OF SCIENCE

Senior Professor/Professor in Mathematics /Statistics/ Physics/ Botany/ Zoology/ Fisheries Biology/Computer Science /Chemistry (Physical/organic)

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Mathematics/Statistics/ *Physics/ Zoology/ **Chemistry/Computer Science

**Notes :**

1. * Applications from candidates with B.Sc. (Eng) degree with specialization in Electronics can also be considered for the posts in Physics.
2. ** Preference will be given to applicants with Specialization in Inorganic Chemistryfor the post of Senior Lecturer in Chemistry.

## UNIT OF SIDDHA MEDICINE

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Siddha Medicine.

## LIBRARY

Post of Librarian

Senior Assistant Librarian Grade I/ Senior Assistant Librarian Grade II/ Assistant Librarian

Note : Preference will be given to those who have degree in Social Science stream for the Post of Senior Assistant Librarian Grade I/ Senior Assistant Librarian Grade II/ Assistant Librarian

## PHYSICAL EDUCATION UNIT

Instructor in Physical Education Grade II

Note: Age Limit - Not more than 45 years

## SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.57,755 - 11x900 - 67,655/- p.m. |
| Professor | Rs.50,905 - 13x850 - 61,955/- p.m. |
| Librarian | Rs.50,905 - 13x850 - 61,955/- p.m. |
| Senior Lecturer Gr. I / Senior Asst.Librarian Gr.I | Rs.42,650 - 7x800 - 48,250/-p.m |
| Senior Lecturer Gr. II / Senior Asst.Librarian Gr.II | Rs.37,650 - 11x700 - 45,350/- p.m. |
| Lecturer (Probationary) / Asst.Librarian | Rs.26,900 -10x585 - 32,750/-p.m |
| Scientific Assistant | Rs.22,595 - 10 x 280 -25,395/-p.m |
| Instructor Grade II | Rs.22,595 - 10 x 280 -25,395/-p.m |

**Note :**

In addition to the above salary, the following allowances will also be paid:

i. An academic allowance equivalent to 25% of the basic salary (for permanent academic posts)
ii. Cost of living allowance of Rs.5,250/-p.m

**Statutory benefits:**

I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
III. Gratuity payments
IV. Employees' Trust Fund benefits.
V. Free Medical Services.

**Closing date :**

**Post of Senior Professor/Professor/Librarian - 22.12.2010**

**Other posts - 16.11.2010**

Applications and other documents for the Post of Senior Professor/Professor/ Librarian shall be sent to the Vice-Chancellor with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments.

Application forms and scheme of recruitment for each position may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk** . Those who wish to send the downloading application forms through the University website should be attached a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one post** should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**01.10.2010.**

(C/571543)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலன் பார்க்கலாம்; பணத்தையும் இழக்கலாம்!

ஊர் முழுக்க அந்த ஜோதிடரைப் பற்றித்தான் ஒரே பேச்சு. இந்தியாவில் இருந்து வந்தவராம். அம்மனின் அருள் இருக்காம். அவர் சொன்னதெல்லாம் அப்படியே நடக்குதாம். நேர்ல இருந்து பாத்தது மாதிரி நடந்தயெல்லாத்தையும் ஒண்டு விடாமல் சொல்லுறாராம். மந்திரிச்ச யந்திரம் ஒண்டைத் தந்தாராம். எல்லாத் தடையும் மாயமா மறைஞ்சிட்டுதாம்.

மக்களின் இத்தகைய கதையாடல்கள் போதாதென்று ஊடகங்களிலும் குறித்த ஜோதிடர் பற்றிய கட்டணம் செலுத்திய விளம்பரங்களும் ''ஒருமுறை அவரிடம் சென்றால் எமது மனக்குறைகள் நீங்காதா?'' என்ற எண்ணத்தை பலரிடமும் தோற்றுவிப்பது இயல்புதானே?

மனக்குறையா? காதலில் தோல்வியா? தீராதவியாதிகளா? கல்வியில் நாட்டமில்லையா? தொழிலில் நஷ்டமா? எல்லாப் பிரச்சினைகளையும் துல்லியமாகக் கணித்து பரிகாரம் காண தென்னிந்தியாவில் இருந்து வந்துள்ள ஜோதிடரைக் காணுங்கள் என்று பார்ப்போரைக் கவரும் வகையில் பிரசுரமான அந்த விளம்பரங்களில் ஜோதிடர் தங்கியுள்ள தங்குமிடவிடுதியின் முகவரியும், சந்திக்கும் நேரமும் குறிப்பிடப்பட்டிருக்கும். பிறகென்ன? ஜோதிடரின் காட்டில் மழைதான்.

அந்த விடுதி எந்த மூலையில் இருந்தாலும் அதைக் கண்டுபிடித்து தமது மனக்குறைகளுக்குப் பரிகாரம் காணுவதற்காக எம்மவர்கள் முண்டியடிக்கத் தொடங்கிவிடுவார்கள். பணத்தை வாரியிறைத்து தமது மனக்குறைகளை



எப்பாடுபட்டாவது இறக்கி வைப்பதற்காக ஜோதிடர் போடுகின்ற தாளத்துக்கு அவர்கள் ஆட வேண்டி யிருக்கும். அவதிப்படவும் வேண்டியிருக்கும்.

உதாரணத்துக்கு-ஒரு பானைசோற்றுக்கு ஒரு சோறு பதம் போல- 27-08-2010 அன்று-யாழ்.நகர்ப்பகுதியில் நடைபெற்ற ஒரு சம்பவம்:

அவர் ஒரு நடுத்தர வயதுப்பெண்மணி. யுத்தத்தின் காரணமாக சகோதரரைத் தொலைத்து விட்டார். சிறுவயதிலிருந்தே ஒரு தாயைப்போலவே தம்பியின் மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்த அந்தப் பெண்மணியால் இந்தப் பிரிவுத்துயரைத் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. எத்தனையோ வழிகளில் முயன்றும் தம்பி கிடைப்பதாகவில்லை. எந்நேரமும் மீண்டும் தனது சகோதரனுடன் மகிழ்வாக இருக்கும் காலம் வராதா? என்று ஏங்கிகொண்டிருந்தவரின் காதுகளுக்கு தென்னிந்தியாவில் இருந்து வந்துள்ள ஜோதிடரின் அற்புதங்களின் மகிமை(?) எட்டியது.

உடனேயே இப்படி ஒரு ஜோதிடர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கும் செய்தியை கிளிநொச்சியில் இருக்கும் தனது இன்னொரு தம்பிக்கும் தொலைபேசி மூலமாகத் தெரியப்படுத்தியிருக்கிறார். அவரும் ஜோதிடரைக் காண விரைந்து வந்துவிட்டார். நடுத்தர வயதுப் பெண்மணியும், அவரது மகளும், கிளிநொச்சியில் இருந்து வந்திருந்த சகோதரனும் ஜோதிடரைக் காணப்புறப்பட்டார்கள்.

கந்தர்மடத்தில் ஜோதிடர் தங்கியிருந்த விடுதி வழமையை விடவும் சனக்கூட்டத்தால் பிதுங்கிக்கொண்டிருந்தது.

விடுதியில் இருந்து வெளியேறுவோரின் நெற்றியில் ஜோதிடர் பூசிய விபூதிக்குறி. தமது முறைவரும் மட்டும் மூவரும் காத்திருந்தனர். நேரம் போய்க்கொண்டிருந்ததேதவிர, கூட்டம் குறைவதாக இல்லை.

நீண்ட நேரக் காத்திருப்பின் பின்னரே ஜோதிடரைச் சந்திக்கும் பாக்கியம் அவர்களுக்குக் கிட்டியது.

ஆனாலும் ஒரே நேரத்தில் இருவர் மட்டுமே உள்ளே சென்று அவரின் அருளைப் பெறலாம் என்று ஜோதிடரின் அடிப்பொடிகள் நிபந்தனை விதித்தார்கள்.

நிபந்தனைகளின் பிரகாரம் கிளிநொச்சியில் இருந்து வந்த சகோதரனை வெளியில் இருக்க வைத்து விட்டு, மகளுடன் உள்ளே நுழைந்தார் நடுத்தர வயதுப் பெண்.

அவர் கேள்விப்பட்டதை போலவே ஜோதிடர் தங்கியிருந்த அறையில் தெய்வீகக் களை வீசிக்கொண்டிருந்தது.

நீண்ட தலைமுடியுடன் படங்களில் வருகின்ற சாமியார்களைப் போலவே ஜோதிடரின் தோற்றமும் இருந்தது. ''நீ உனது உறவொன்றின் இழப்பைத் தாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறாய். அந்த உறவை எப்படியாவது மீண்டும் உன்னுடன் சேர்த்து வைக்கவேண்டும் என்று என்னிடம் கேட்க வந்துள்ளாய். அப்படித்தானே'' என்று எடுத்த எடுப்பிலேயே ஜோதிடர் வீசிய கேள்விக்கணையில் அந்தப்பெண்மணி திக்குமுக்காடிப் போனார். என்னடா இது? எல்லாவற்றையும் துல்லியமாக அப்படியே சொல்கிறாரே! உண்மையிலேயே இவர் சக்தி வாய்ந்தவர்தான் என நினைத்தார்.

என்னுடைய தம்பியை மீண்டும் என்னுடன் சேர்க்க இவரால் மட்டுமே முடியும் என்று எண்ணிக் கொண்டார்.(ஆனால் உண்மையில் வெளியில் காத்திருக்கும் நேரத்தில் அருகில் இருந்தவரிடம் குறித்த பெண்மணி தனது மனக்குறையைச் சொன்னபோது, அதில் ஒரு வார்த்தையைக்கூட தவறவிடாது முழுவதையும் ஜோதிடரின் காதுகளில் சேர்த்திருந்தார்கள் என்பது ஜோதிடருக்கும், அவரது அடிப்பொடிகளுக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம்).

''ஓம் ஐயா! நீங்கள் சொல்றது முழுக்க உண்மை. பிள்ளை மாதிரி வளர்த்த தம்பி கதைக்காமல் இருக்கிறதை என்னால தாங்கேலாமல் கிடக்கு. நீங்கள்தான் எங்களைச் சேர்த்து வைக்கவேணும்.''

அந்தப்பெண் கண்ணீருடன் கெஞ்சினார்.

ஜோதிடர் கண்களை மூடிக்கடுமையாக யோசித்தார்.

சில நொடிகளில் அவரது கண்கள் பிரகாசத்தோடு திறந்துகொண்டன. ''உனது மனக்குறைகளை நீக்கும் பரிகார பூஜை செய்வதற்கு கொஞ்சம் செலவாகும். பரவாயில்லையா?'' ஜோதிடர் கேட்டதும் மறுபேச்சின்றி கையில் இருந்த பத்தாயிரம் ரூபாவை அவர் முன்னால் வைத்தார் பெண்.

''ம்கூம். இது போதாது. இன்னும் வேண்டும்'' திருப்தியின்மை ஜோதிடரின் குரலில் வெளிப்பட்டது.

''என்னட்ட இவ்வளவுதான் இருக்கையா'' ஆற்றாமையோடு அந்தப் பெண் சொன்னார்.

ஆனாலும் ஜோதிடர் விட்டபாடாயில்லை.

அவர் கண்கள் குறித்த பெண்ணின் தோடுகள் மீது பதிந்தன. பரவாயில்லை. உனது தோட்டை கழற்றிக் கொடுத்து விட்டுப் போ. பரிகாரம் செய்து உன் தம்பியின் கோபத்தை இல்லாமல் செய்து விடலாம்'' என்று ஒரு தூண்டிலை ஜோதிடர் போட்டார்.

''இல்லை ஐயா. என்னட்ட நகை எண்டு இது மட்டும் தான் இருக்கு. அதையும் தந்திட்டால்.....''

அந்தப்பெண்ணின் குரல் இழுபட, ஜோதிடரின் முகபாவம் சட்டென மாறியது. கோபத்தின் உச்சதுக்கே போய்விட்டார். ''நீ என்னையும், எனக்கு அருள் தந்த தெய்வத்தையும் அவமானப்படுத்துகிறாய். நான் கேட்ட காணிக்கையை நீ தராவிட்டால் உனது மாங்கல்யத்துக்கு-உனது கணவருக்கு-ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் நான் பொறுப்பல்ல.'' சாபம் கொடுப்பதுபோல அவர் பேசிக்கொண்டே போக, குறித்த பெண்ணுக்குப் பயம் ஏற்படத் தொடங்கியது.

சிலவேளைகளில் ஜோதிடரின் மாயவேலைகளால் தனது கணவருக்கு ஏதேனும் நேர்ந்துவிடுமோ என்று பயம் ஏற்பட்டது.

சில நிமிடத் தயக்கத்துக்கு பின்னர், அவரது காது வெறுமையாக, அதிலிருந்த தோடு ஜோதிடரிடம் கையளிக்கப்பட்டது.பதிலுக்கு மந்திரித்த யந்திரத் தகடு அந்தப் பெண்ணுக்கு வழங்கப்பட்டு நாளைக்கு வா என்று சொல்லப்பட்டது.

அவரைத் தொடர்ந்து உள்நுழைந்த -கிளிநொச்சியிலிருந்து வந்திருந்த -குறித்த பெண்ணின் தம்பியிடமும் இவ்விதம் முப்பதாயிரம் ரூபா கறக்கப்பட்டு அவருக்கும் இன்று போய் நாளை வா என்ற உத்தரவு வழங்கப்பட்டது.

ஆனால் மறுநாள் தான் இருந்த சுவடே தெரியாமல் விடுதியில் இருந்து குறித்த தென்னிந்திய ஜோதிடர் தலைமறைவாகி விட்டார்.

தம்பியுடன் மீளவும் சொந்தம் கொண்டாடத் தவித்த பெண்ணின் பணமும், தோடும், அவரது சகோதரனின் பணமும் அவ்வளவுதான்.

நடந்த விடயங்களை வெளியே சொல்ல வெட்கப்பட்டு, தாம் சொத்துகளை பறிகொடுத்த விடயத்தை பொலிஸில் கூட இவர்கள் முறையிடவில்லை.

இவர்களைப் போலவே இன்னும் பலர் பெருந்தொகைப் பணத்தையும், நகைகளையும் குறித்த ஜோதிடரிடம் மட்டுமல்லாது அவரைப் போன்று தென்னிந்தியாவில் இருந்து வந்துள்ளதாக விளம்பரப்படுத்துகின்ற போலி ஜோதிடர்களிடம் பறிகொடுத்து விட்டு மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர் என அறிய முடிகின்றது.

யாழ்ப்பாணத்தவர்கள் எல்லாவற்றிலும் வலுசுழியர்கள்



என்றொரு கருத்து நிலை இருந்து வருகின்றது. எம்மவர்கள் எந்தளவுக்கு சுழியர்களோ அதேயளவுக்கு ஏமாளிகளும் கூட. குறிப்பாக அக்கரைப் பச்சைக் கனவுகளால் அலைக்கழிக்கப்படுபவர்கள். எப்போது உள்ளூர்ப் பொருள்களை விடவும் வெளியூர்ப்பொருள்களின் மீதே அதிக நம்பிக்கை உடையவர்கள்.

இதனாலேயே இந்தியாவில் இருந்து வந்ததாக விளம்பரப்படுத்தும் ஜோதிடர்களின் வலைகளில் இலகுவாகவே வீழ்ந்து ஏமாறுகின்றனர்.

மேலே சொல்லப்பட்டதைப்போல நிறையச் சம்பவங்கள் நிகழ்ந்திருந்தாலும் நாம் ஏமாந்த விடயம் நாலு பேருக்குத் தெரிந்து போய்விடுமே என்ற எண்ணத்தில் ஒளிக்க முனைவதால் இன்னும் பலர் அவர்களைப் போலவே ஜோதிடர்களின் சுயரூபம் தெரியாமல் மாட்டுப்படவேண்டியிருக்கும்.

இப்படியான, தலையில் மிளகாய் அரைக்கும் வேலைகளில் புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து வந்த ஜோதிடர்கள் ஈடுபட்டதால் நாளடைவில் அவர்கள் உரியவர்களால் அப்புறப்படுத்தப்பட்டிருந்த விடயத்தை இங்கு ஞாபகப்படுத்த வேண்டியிருக்கின்றது. அதன் பின்னர் நீண்டநாள்களாக இல்லாமல் போயிருந்தவர்கள் மீளவும் இப்போது பிரசன்னமாகியிருக்கிறார்கள்.

சிலவேளைகளில் அவர்களில் பெரும்பாலானோர்

-ஔண்யன்-
-வாணி-

நேர்மையானவர்களாகவும், உண்மையிலேயே ஜோதிடத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களாகவும் இருக்கக்கூடும். ஆனாலும் ஒரு குடம் பால் முழுதும் ஒரேயொரு துளி விஷத்தால் கெடுவது போல, ஒரு சில போலி ஜோதிடர்களின் திருகுதாளங்களினால் தென்னிந்தியாவில் இருந்து வருகின்ற ஜோதிடர்கள் அத்தனைபேரும் ஏமாற்றுக்காரர்கள் என்ற பெயரைச் சம்பாதிக்க வேண்டியிருக்கின்றது.

தம்மைப்போன்று வேடமிட்டு அப்பாவிகளின் சொத்துகளைக் கபளீகரம் செய்யும் கறுப்பாடுகளை இனங்காண வேண்டிய தேவை இப்போது மக்களை விடவும், தென்னிந்திய ஜோதிடர்களுக்கே அதிகம் இருக்கவேண்டும்.

அவ்வாறு குறித்த ஏமாற்றுப்பேர்வழிகளை இனங்கண்டு களைவதற்கு அவர்கள் முயற்சிக்காவிட்டால், தென்னிந்திய ஜோதிடர்கள் எல்லோருமே நாமம் போடுபவர்கள்தான் என்ற எண்ணம் எல்லோரிடமும் பரவிவிடும். அதேவேளை இத்தகையவர்களால் ஏமாற்றப்படும்போது தமது சுயகௌவரத்தைப் பார்க்காது, அது குறித்து சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்க மக்கள் பின்னிற்கக்கூடாது.

அவ்வாறில்லாமல் தொடர்ந்தும் எமக்கு ஜோதிடர்களிடமிருந்து ஏற்படும் ஏமாற்றங்களை மறைக்க முனைந்தால், அது உங்களை ஏமாற்றியவர்கள் இன்னும் பலரின் தலைகளில் சம்பல் அரைக்கவே வழிவகுக்கும். இதுதவிர தற்போது இவ்வாறான தென்னிந்திய ஜோதிடர்கள் 40 பேர் விடுதிகளில் வந்து தங்கியிருக்கின்றனர் எனத் தகவல்கள் வருகின்றன.

எனவே போலிகளை இனங்கண்டு இடங்கொடுக்காமலிருப்பது விடுதி உரிமையாளர்களின் சமூகக் கடமை. இல்லாவிட்டால் இத்தகைய மோசடிப் பேர்வழிகளால் குறித்த விடுதியின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்படக்கூடும்.

திருடனாகப் பார்த்துத் திருந்தாவிட்டால் நாம்தான் விழிப்போடிருந்து நம்மையும் நமது சொத்துகளையும் பாதுகாக்கவேண்டும். இனியாவது விழிப்பு வருமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IDM Affiliated Campus, Jaffna

## With, WinSYS Networks (Pvt) Ltd.

வடக்கிற்கான பொன்னான வாய்ப்பு
நாம் பெருமைப்படுகின்றோம்

## Launches School of Network Engineering

**Global Recognition**

**Unparalleled Quality**

**Affordable Tuition Fee**

Operating since 2004, IDM Jaffna has always strived in bringing the best quality study programmes to the youth in the region. Now completely under the supervision of the Regional Office in Colombo, IDM Jaffna has bought numerous brand-new opportunities to the youth. School of Network Engineering is a significant collaboration in bringing globally recognized Networking Qualifications to Jaffna.



Now, **operated fully under the supervision of IDM City Campus #3**, Regional Office in Colombo for North & East, IDM Jaffna promises development & study programmes **that will cater largely to the development of the youth in the peninsula.** With new management & strong foundations into developing academic values of the students of IDM Jaffna, **we have partnered with the best to bring the best education programmes to our students.** I believe School of Networking of IDM Jaffna will be a popular destination for anyone wishing to study Networking programmes in the region. With our strong **collaboration with WinSYS Networks, who is the Academic partner of the division**, we will ensure the quality of the programmes delivered to the students. Now any student wishing to pursue a career in Computer Networking may walk in to IDM Jaffna to achieve your dream goals. **Not only delivering Diploma, Higher Diploma & Internationally recognized UK, Canadian degrees in our branch also with our School of Network Engineering students may study for Microsoft, Cisco & Red hat qualifications, all under one roof.**

***V. Janagan, Regional Director (North & East) and International Director IDM Group of Companies***



WinSYS Networks (Pvt) Ltd. was established in May 2003 with the prime intention of providing Hi Tech training and Consulting for corporate sector. In short period of time we have built reputation as a professional organization of very high integrity. Today WinSYS Networks, has become a premier training & consultancy company for networking, network security, & internet technologies in Sri Lanka, Human resources of WinSYS Networks include senior network consultants, business consultants, network security experts, project managers, system analysts and professional trainers. In the past six years we have trained more than 5000 and produced hundreds of Cisco & Microsoft Certified Network Professionals. With the collaboration established with IDM Affiliated Campus – Jaffna, we wish to extend our services to the students in the Northern Region. As the Academic Partner of the School of Network Engineering, we will employ our best team of professionals, Lecturers to assist the students in their learning process. The center will concentrate on delivering courses/ programmes targeted towards Microsoft, Cisco & Red hat Linux Online examinations.

***Mohamed Ziyam – Managing Director***
**WinSYS Networks (Pvt) Ltd.**

## Courses & Programmes Offered at the School of Network Engineering

### Microsoft Certified Exams

**1. Microsoft Certified Professional + Microsoft Certified System Administration**
70-270: Installing, configuring, and Administering Microsoft Windows XP Professional.
70-290: Managing and Maintaining a Microsoft Windows Server 2003 Environment.
70-291: Implementing, Managing and Maintaining a Microsoft Windows 2003 network Infrastructure.
70-284: Implementing and Managing Microsoft Exchange Server

**2. Microsoft Certified System Engineer**
70-270: Installing, configuring, and Administering Microsoft Windows XP Professional.
70-290: Managing and Maintaining a Microsoft Windows Server 2003 Environment.
70-291: Implementing, Managing and Maintaining a Microsoft Windows 2003 network Infrastructure.
70-284: Implementing and Managing Microsoft Exchange Server
70-293: Planning and Maintaining a Microsoft Windows Server 2003 Network infrastructure.
70-294: Planning, Implementing and Maintaining a Microsoft Windows Server 2003 Active Directory Infrastructure.
70-297: Designing a Microsoft Windows Server 2003 Active Directory and Network Infrastructure.

**3. MCTS – Microsoft Certified Technology Specialist**
070-680 MCTS: Windows 7 Configuring
070-640 MCTS: Windows Server 2008 Active Directory Configuration
070-642 MCTS: Windows Server 2008 Network Infrastructure Configuration
070-643 MCTS: Windows Server 2008 Applications Infrastructure, Configuring

**4. MCITP - Microsoft Certified Information Technology Professional**
070-646 PRO: Windows Server 2008, Server Administrator
070-647 PRO: Windows Server 2008, Enterprise Administrator

### Cisco Certified Exams

**5. CCNA 640-802 (Cisco Certified Network Associate)**

**6. CCNP (Cisco Certified Network Professional)**
642-901 BSCI Building Scalable Cisco Internetworks (BSCI)
642-812 BCMSN Building Cisco Multilayer Switched Networks (BCMSN)
642-825 ISCW Implementing Secure Converged Wide Area Networks (ISCW)
642-845 ONT Optimizing Converged Cisco Networks (ONT)

**7. CCNP New Syllabus**
642-902 ROUTE Implementing Cisco IP Routing (ROUTE)
642-813 SWITCH Implementing Cisco IP Switched Networks (SWITCH)
643-832 TSHOOT Troubleshooting and Maintaining Cisco IP Networks

## Why select Us

### For Network Engineering

1. **Individual Attention**
2. **Individual Computer for Practical's**
3. **Qualified & Experienced lecturer Panel**
4. **Exam Focused**
5. **Unlimited Practical's**
6. **Classes on Weekdays & Weekends**
7. **Affordable Tuition Fee – Payable in Installments!**
8. **No software Simulations! Original Hardware in place for Practical's (Cisco Routers)**
9. **Availability of Online Testing Center**
10. **Free Supporting Course Material**

**We Bring Real Opportunities to the North!**

IDM

3 தசாப்த கால உயர்கல்வி நம்பிக்கையின் சின்னம்
இல. 216, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**School of Network Engineering**
**IDM Affiliated Jaffna Campus**
#216, Navalar Road, Jaffna
T: 021 2 229901 | www.idmcc3.lk | jaffna@idmcc3.lk

**Affiliated Jaffna Campus** *Managed by, IDM City Campus #3, Regional Office for North & East*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் மர நடுகைத் திட்டம்; கைத்தொழில் அமைச்சர் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.3

குடாநாட்டில் பெருமயளவில் மரநடுகைத் திட்டத்தை ஆரம்பிக்க பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என அவரது அந்த அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:

மரநடுகைத் திட்டத்துக்கென 10 மில்லியன் ரூபா நிதியை அமைச்சர் ஒதுக் கீடு செய்துள்ளார். இதனடிப்படை யில் குடாநாட்டில் உள்ள பிரதேச செயலாளர் பிரிவில் நடுவதற் கென மரக்கன்றுகள் இனங்காணப் பட்டுள்ளன்.

இதேவேளை குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களில் சவுக்கு, பூவரசு, மருது, கருவேலம் போன்ற மரக்கன்றுகள் நடுகைக் காக இனங்காணப்பட்டுள்ளதாகவும்- குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மரக்கன்றுகள் தேவையானவர்கள் அமைச்சின் யாழ். அலுவலகத்துடன் அல்லது பிரதேச செயலாளர் அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

''தற்போது குடாநாட்டில் பயன் தரு மரங்கள் பெருமளவில் அழிவடைந்துள்ள நிலையில் மேற்படி மரக்கன்றுகளைப் பெற்று அவற்றை உரிய முறையில் பராமரித்து அதிக பயன்களைப் பெற்றுக் கொள்ள குடாநாட்டு மக்கள் முன்வர வேண்டும் என்பதே அமைச்சரின் எதிர்பார்ப்பாகும்'' என செய்திக்குறிப்பில் குறிப் பிடப்பட்டுள்ளது. (த-201)

## சர்வோதய அமைப்பால் நுளம்பு வலைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.3

இலங்கை சர்வோதய அமைப்பு டெங்கு நுளம்புத் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொது மக்களுக்கு நுளம்பு வலைகளை வழங்கியுள்ளது.

புங்குடுதீவில் 144 நுளம்பு வலைகளும் நயினாதீவில் 900 நுளம்பு வலைகளும் மேற்படி அமைப்பால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-7)

# எழுதுமட்டுவாழில் மீள் குடியமர்த்துமாறு அப்பிரதேச மக்கள் அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.3

எழுதுமட்டுவாழ் பிரதேச மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர்.

அந்தப் பிரதேச மக்கள் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை அவ ரது அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் சந்தித்து இக்கோரிக்கையை விடுத்தனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட பல பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியமர்த்தப் படுகின்றனர். இந்தப் பிரதேசங்கள் எமது பிரதேசத்திற்கு அண்மையாகவுள்ள பிரதேசங்களே. எனவே எம்மையும் சொந்த இடங்களில் மீளக்குடிய மர்த்துமாறும் அந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த விடயம் தொடர்பாக அரச அதிபர் உடனடியாகவே இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்ட பொழுது, அந்தப் பிர தேசங்களை விடுவதில் எமக்குப் எந்த விதமான இராணுவ சிக்கல்களும் இல்லை.

இருந்த போதும் அப்பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் கிடைக்கப் பெறுமாயின் அப்பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்த முடியும் என்று தெரிவித்தார். இத்தகவலை அவர்களிடம் அரச அதிபர் தெரிவித்தார். (ஐ-15)




## யாழ்.நூலகத்தில் ஐரோப்பிய ஒன்றிய தகவல் நிலையம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

ஐரோப்பிய ஒன்றியம் பற்றிய தகவல்களை யாழ்.மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் யாழ். பொது நூலகத்தில் ஐரோப்பிய ஒன்றியத் தகவல் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக் கிழமை யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்தநிலையத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

அத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்தினால் யாழ்.பொது நூலகத்துக்கென பெறுமதி வாய்ந்த சுமார் பத்தாயிரம் நூல்களும் குறித்த தினத்தன்று அன்பளிப்புச் செய்யப்படவுள்ளன.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் நடமாடும் நூலக சேவையொன்று ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

(ஒ-16)

# பாதுகாப்பு வலயம் என்ற ஒன்று இனி வலி.மேற்கில் இருக்க மாட்டாது

**கலந்துரையாடலில் ஆளுநர் தெரிவிப்பு**

மானிப்பாய்,ஒக்.3

வலி.மேற்கில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பிரதேசம் இனி இருக்கமாட்டாது. அவ்வாறான பிரதேசம் அகற்றப்பட்டு மக்களின் அபிவிருத்திக்காக மக்களின் கைகளில் வழங்கப்படும்.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இவ்வாறு தெரிவித்தார்.

வலி.மேற்குப் பிரதேசத்தின் ''தரிசுநிலப் பயன்பாடு- அபிவிருத்தி'' தொடர்பான கலந்துரையாடல்- ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் ஜி.ஏ. சந்திரசிறி தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

வலி.மேற்குப் பிரதேசம் 25 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பரந்து விரிந்த பிரதேசம் இப்பிரதேசத்தில் உள்ள பயன்படு மற்றும் பயன்படாத நிலங்களின் விவரங்களைத் திரட்ட வேண்டும்.

பயன்படாத தரிசு நிலங்களில் எவ்வாறான அபிவிருத்திகளையும் உட்கட்டுமான செயற்பாடுகளையும் மேற்கொள்ளலாம் எனப் பட்டியல்படுத்த வேண்டும்.

அதற்கான நிதி மூலாதாரங்களை தேடும் பணியை பொருளாதார அபிவிருத்தி நிபுணர் எந்திரி. ஆர்.ரி. இராமச்சந்திரன் பொறுப்பில் விடப்படும் தரிசு நில பயன்பாடு- அபிவிருத்தி தொடர்பாகப் பிரதேச மட்டத்தில் விரைவில் துறைசார்ந்த அமைப்புகளை திரட்டி கூட்டம் நடத்த வேண்டும்- என்றார்.

மேற்படி கூட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி நிபுணர் வலி. மேற்குப் பிரதேச தரிசுநில பயன்பாடு தொடர்பான எண்ணக்கரு பத்திர முன்மொழிவைச் சமர்ப்பித்தார்.

இத் திட்டத்தில் பிரதேச செயலர் திருமதி தே.பாபு, பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி, சிறுவர் கல்விக்கும்- பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் இயக்குநர் திருமதி.பொன்மலர் இராஜேஸ்வரன் ஆகியோர் பிரசன்னமாகி இருந்தனர்.

(201-302)

# இரணைமடு குடிதண்ணீர் விநியோகம் காணி சுவீகரிப்புக்கான பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

கிளிநொச்சி- இரணைமடுக் குளத்தில் இருந்து குடாநாட்டுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்கான நிலங்களை அடையாளம் காணுதலும் அதற்கான பிரதேசங்களைச் சுவீகரிப்பதற்குமான ஐந்தாம் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி, இரணைமடு குளத்து நீரை யாழ். குடாவிற்கு 'பைப் லைன்' மூலம் கொண்டு வருவதற்கான நிலங்கள் அடையாளம் இடும் வேலைகள் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மேற்படி திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்திச் செல்ல பெருமளவிலான காணிகள் சுவீகரிக்கப்பட வேண்டியுள்ளது.

இதற்கான வேலைத்திட்டங்களை முழுமையாகவும், பகுதியாகவும் நடைமுறைப்படுத்தி செயற்படுத்த ஒப்பந்தகாரர்கள் இங்கு காணப்பட வேண்டும் எனவும்,

மேலும்- கிளிநொச்சி- யாழ். குடாநாட்டு குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தை நடைமுறைப் படுத்த யாழ். பிராந்திய காரியாலயத்தில் பிரதான அலுவலகம் ஒன்று விரைவில் உருவாக்கப் படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (201-302)

# குடாநாட்டின் 300 பாடசாலைகளில் இம்மாதம் நடமாடும் நூலக சேவை

**ஐரோப்பிய ஒன்றியம் உதவி**

யாழ்ப்பாணம்,ஒக்.3

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஐரோப்பிய ஒன்றிய அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களைச் சேர்ந்த சுமார் 300 பாடசாலைகளுக்கான நடமாடும் நூலக சேவை இம்மாதத்தில் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் இயேசுவின் பிள்ளைகள் அமைப்பினால் யாழ்.கல்வி வலயம் மற்றும் யாழ்.பொது நூலகத்துடன் இணைந்து மேற்படி நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கும் நோக்குடனும் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்களிடம் நூலகப் பாவனையின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவுமே இந்த நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடமாடும் சேவையின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். நகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நடமாடும் சேவையின் முதலாவது நிகழ்வு யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது. இதில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொண்டு ஆரம்பித்து வைப்பார். (ஒ-16)



உலக சிறுவர் தினத்தையொட்டி அம்மா பகவான் ஏகத்துவ இளைஞர் அணி இயக்கத்தின் ஏற்பாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு மருதனார்மடம் கேன் புற்றுநோய்க் காப்பகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமார்,சிறுவர்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்குவதைக்காணலாம். (படங்கள்: ரட்ணம்)

## கிராம அலுவலர்களுக்கு இன்று சட்டத்துறை சார் பயிற்சி வகுப்பு

வலி.வடக்கு,ஒக்.3

யாழ்.மாவட்ட சட்ட உதவிகள் மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட கிராம அலுவலர்களில் ஒரு பகுதியினருக்கு சட்டக் கல்வி சம்பந்தமான பயிற்சி வகுப் புகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளன.

கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில், தென்மராட்சி பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 150 கிராம அலுவலர்கள் இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள உள்ளனர்.

பயிற்சி வகுப்பில் மேல் நீதிமன்ற நீதிபதி, மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி,சட்டத்தரணிகள் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

கடந்த பல வருடங்களின் பின்னர் இத்தகைய சட்டத்துறை சார்ந்தவகுப்புக்களை சட்ட உதவிகள் மன்றம் நடத்துவதால் கிராம அலுவலர்களும் பொது மக்களும் பயனடையக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(த-86)

# ஓய்வூதிய இலக்கமற்ற ஊழியர்கள் விவரங்களை அறியத்தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்.மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றி இளைப்பாறிய அல்லது இறந்த ஊழியர்களில் இதுவரை விதவை அநாதை ஓய்வூதிய இலக்கம் கிடைக்காதவர்களின் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஊழியரின் முழுப்பெயர், பதவி, இளைப்பாறிய அல்லது இறந்த திகதி உள்ளூராட்சி ஓய்வூதிய இலக்கம் ஆகியவற்றுடன் விதவை அநாதைகள் ஓய்வூதிய இலக்கத்திற்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டதா? அனுப்படாவிடின் அதற்கான காரணம் ஆகிய விவரங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை விதவை, அநாதை ஓய்வூதிய இலக்கம் கிடைக்காததால் பல குடும்பங்கள் விதவை, அநாதை ஓய்வூதியம் பெறாமல் உள்ளதாகவும், இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடந்த 11 ஆம் திகதி உதயன் செய்தி வெளியிட்டதையடுத்து இந் நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (201-207)

# அண்ண, உதட்டுப் பிளவு நோயாளிக்கு இலவச சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஒக்.3

பிறவியிலேயே அண்ணப் பிளவு, உதட்டுப் பிளவு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப் பேராதனைப் பல்கலைக்கழக பல்வைத்தியசாலையில் இயங்கும், புன்னகை பயிற்சி நிறுவனம் முன்வந்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக பல் வைத்தியசாலையில் விசேட பல்வைத்தியக் குழுவினர் மேற்படி சிகிச்சையை இலவசமாக வழங்குவதோடு சிகிச்சை பெற வரும் நோயாளிக்கும் அவருடைய பெற்றோருக்கும் தங்குமிட வசதியும் பிரயாணச் செலவும் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

மேற்படி சிகிச்சையைப் பெற விரும்புவோர் தமது பெயரை யாழ். போதனா வைத்தியசாலையின் பல் வைத்திய பிரிவில் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவு செய்யுமாறு கேட்கப் பட்டுள்ளனர். மேலதிக விவரங்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் பல்வைத்தியப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு பேராதனை பல் வைத்தியசாலை பல்வைத்திய கலாநிதி பி.விஜயகோன் கேட்டுள்ளார். (த-201)

## குடியேறிய குடும்பங்களுக்கு சுகாதாரப் பொதிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.3

வன்னியில் இடம்பெயர்ந்திருந்து மீண்டும் சாவகச்சேரிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு சேவாலங்கா, யுனிசெப் நிறுவனங்கள் இணைந்து சுகாதாரப் பொதிகளை வழங்கியுள்ளன.

மீளக்குடியமர்ந்த பொதுமக்களின் அன்றாட பாவனைகளுக்குத் தேவையான சுகாதாரம் சம்பந்தமான பொருள்கள் அடங்கிய பொதிகளை கடந்த செவ்வாய்க் கிழமை சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் பொதுமக்களுக்கு வழங்கியுள்ளார். (201-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

லேத் மெஷினில் வேலை செய்வதற்கு லேத்மென் தேவை. தொழில் பயிற்சிக் கல்விகற்று இருப்பின் அனுபவம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
தொடர்பு:- 0773760594

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



03.09.2010ஆம் திகதி சிவபதமடைந்த, எமது யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சின்னத்தம்பி கணேசமூர்த்தி அவர்களின் பாசமிகு தந்தை

**கதிரிப்பிள்ளை சின்னத்தம்பி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(104078)

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
857, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12.05.1955

மறைவு: 13.10.2009

திதி: தசமி

செல்வி

**முத்துக்கிருஷ்ணன் தெய்வநாயகி (பேபி)**

அன்பாலும் பண்பாலும்
எம்மை அரவணைத்த
உம்மை ஆண்டொன்று
சென்றாலும் மறவாது எம் இதயம்.

கோட்டைக்காடு,
மல்லாகம்.

(104075)

தாய், சகோதரர்கள்,
பெறாமக்கள், மருமகன்.

## முறைசாராப் பிரிவினருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சி கல்வி வலய முறைசாராப் பிரிவினரால் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டவர்களால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி-நுணாவில் அ.த.க. பாடசாலையில் நடைபெறும் .

மேற்படி வலய முறைசாராப் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.தர்மராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தென்மராட்சி வலய கல்வி பணிப்பாளர் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதுடன் பயிலுனர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கவுள்ளார். இந் நிகழ்வில் வலயக்கல்வி பிரதிக் கல்விப்பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி, பொ.இரவிச்சந்திரன், ச்ாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகர் கு.சிவானந்தம், பாடசாலை அதிபர் கா.அருட்சோதி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வர். (201-207)

## சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு விரைவில் இருமாடிக்கட்டடம்

தென்மராட்சி, ஒக்.3

சாவகச்சேரி நகரில் நவீன முறையிலான இருமாடிக் கட்டடங்களைக் கொண்ட பஸ் நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

புதிய பஸ்நிலையக் கட்டடம் நிர்மாணிப்பதற்கு வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் 4 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-207)

## விநாயகர் முன்பள்ளியின் கட்டடத் திறப்பு விழா

கைதடி,ஒக்.3

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்புவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் விநாயகர் சனசமூக நிலைய தலைவர் செ.மயூரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார். (204-288-23)

## ஆசிரியருக்கான செயலமர்வு

பருத்தித்துறை,ஒக்.3

கொழும்பு தேசிய கல்வி நிறுவனத்திலிருந்து வருகைதரும் வளவாளர்களினால் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் வடமராட்சியில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்புக்களில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

இச்செயலமர்வு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளது. பாடசாலைகளில் இப் பாடத்தைக் கற்பிக்கும் ஒரு ஆசிரியரை செயலமர்வுக்குஅனுப்பிவைக்குமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (201-190)

## வீடு விற்பனைக்கு

புலோலி மத்தி, பருத்தித்துறையில் சகல வசதிகளுடனும் கூடிய 3 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு:- க.கருணா, 0771601233

## காணிகள் விற்பனைக்கு

சாவகச்சேரி நகர எல்லைக்குள் அமைந்துள்ள குடியிருப்புக் காணிகள், தென்னந்தோட்டங்கள், நெல்வயல்கள் விற்பனைக்குண்டு.
தொலைபேசி: 0212225626 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.இல: 0772720139

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 28.10.1944

மறைவு: 03.09.2010

**மரியான் இரத்தினம்**

எங்கள் அன்பு அப்பாவே! ஏங்கித் தவிக்கின்றோம்
காலன் உனைக் கவர்ந்ததனால் கலங்குகின்றோம்
நம்ப முடியவில்லை நாங்கள் உங்களை இழந்தோம்
உம் துணைபோல் யார் எமக்கு உண்டு?
தணல் புழுவாய் துடிக்கின்றோம் துயர்தீர்க்க வாரீரோ!

அராலி வீதி,
சங்கரத்தை.

(104078)

குடும்பத்தினர்.

## தில்லையம்பதி சேர் திருவிளக்கே



தோற்றம்: 17 ✦ 11 ✦ 1931

மறைவு: 28 ✦ 09 ✦ 2010

**அமரர் வினாசித்தம்பி இராமநாதன் (V. R. M)**

தில்லையம் பதியில் திசைதோறும்
புகழ்ந்து பாராட்டும் புண்ணியநாச்சி
மடத்தைச் சிறப்புற அமைத்துத்தந்த
செம்மல்களில் ஒருவர் சபையின் ஆயுட்கால
உறுப்பினர் – புங்குடுதீவில் முருகன்
ஆலயத்தை தனித்து நின்று அமைத்து
மூர்த்தி தலம் தீர்த்தம் முச்சிறப்பும்
கூட வைத்தோன் – கல்லூரிக்கு நிலம் வழங்கிய மேலோன்
அரை நூற்றாண்டுக்கு மேல்
ஆண்டுதோறும் தில்லையம்பதியில்
பாதம் பதித்துவரும் வினாசித்தம்பி இராமநாதன்
இன்று இல்லை. அவர் ஆத்மா சாந்திபெற
இறைஞ்சும் காலை அவர் தம் குடும்பத்தினரின்
துயரிலும் பங்கு கொள்கின்றோம்.

66, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

சைவ பரிபாலனசபை.

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03 . 06 . 1945

மறைவு
10 . 10 . 2004

**அமரர் சின்னத்தம்பி காராளசிங்கம்** *(யப்பான்)*

இன்று (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

25,காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(103906)

குடும்பத்தினர்
(மனைவி, பிள்ளைகள், மருமக்கள்)

## கண்ணீர் அஞ்சலி



சமயப் பணியும் சமூகப் பணியும்
செய்த செம்மல் தருமவள்ளல் சிறந்த
வணிகர் எல்லோருக்கும்
இனியவரான அன்புத் தெய்வம்
**அமரர் வினாசித்தம்பி இராமநாதன்**
(கொழும்பு பிரபல வர்த்தகர், கிளிநொச்சி பாலமுருகன் அரிசி ஆலை உரிமையாளர் (V.R.M), புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய தேவஸ்தான அறங்காவலர் சமூக சேவையாளர்)
அவர்களது மரணச் செய்தி கேட்டு
இதயம் தாங்காது வேதனையுடன்
வயலூர் முருகன் பாதம் சரணடைந்த
தெய்வத் திருமகனுக்கு எமது கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செய்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை இத்தால் தெரிவிக்கின்றோம்.

(671476)

**புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஆலய திருப்பணிச் சபையினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் அரசியல் தீர்வில் இனவாதக் கட்சிகளின் சுயரூபம்

இலங்கைத்தீவில் கடந்த 3 தசாப்தங்களாகத் தொடர்ந்துவரும் இனப்பிரச்சினைத் தீர்வு வழங்கு வதில் ஆட்சிக்கு வரும் எந்தச் சிங்கள அரசியல் கட்சிக்கும் அறவே மனமில்லை. இந்தப் பிரச்சினையை வைத்து அரசியல் கதிரைகளை அலங்கரிக்க அந்தக் கட்சிகள் போடும் பித்தலாட்டம் சொல்லித் தெரியவேண்டிய தொன்றல்ல. தேர்தல் காலத்தில் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்ற ஒரே தாரக மந்திரத்தை வைத்துப் பிரசாரத்தில் ஈடுபடும் சிங்களக் கட்சிகள் ஆட்சி யில் அமர்ந்த பின்னர் அவற்றைத் தூக்கி வீசிவிட்டு 'பழைய குருடி கதவைத் திறவடி' என்பது போல செயற்பட்டு வருகின்றமை காலம் காலமாகத் தொடர்கிறது.



தமிழர்களின் பிரச்சினையைத் தமது சுயலாபத் திற்காகப் பயன்படுத்திப் பழக்கப்பட்டுப் போன இந்தச் சிங்களக் கட்சிகள் இனியும் திருந்துவதற்கு - தமிழர்கள் பிரச்சினை தொடர்பான தமது பாதையை மாற்றுவதற்கு - 30 ஆண்டுகளாக தொடரும் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்குவதற்கு எள்ளளவேனும் தயாரில்லை என்பது இப்போது தெட்டத் தெளிவாக வெளிப் படுகின்றது. இந்த விடயத்தில் தென்னிலங்கையில் உள்ள இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டையே கொண்டுள்ளன என்பது தெளிவு.

புலிகள் இயக்கம் தோற்கடிக்கபட்டு ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது. யுத்தம் முடிவடைந்து விட்டது. யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் இப்போது படிப்படியாக மீளக்குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். போதிய வசதிகள் இல்லாத நிலையில் - சந்தித்த இழப்புக்கள் ஈடுசெய்யப்படாத நிலையில் - சேதம டைந்த வீடு வாசல்களுக்கு இழப்பீடுகள் எதுவும் வழங்கப்படாமல் அந்த மக்கள் இப்போது வன்னி யில் குடியமர்த்தப்படுகிறார்கள். எனினும் சொந்த இடத்தில் மீளக்குடியமர்கின்றோம் என்ற மனத்திருப்தி அந்த மக்களுக்கு.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன் வைக்க பல சாட்டுப்போக்குகளைக் கடந்த சில வருடங்களாகக் கூறி வந்தது. முதலில் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பது என்று தனது ஆட்சிப் பய ணத்தை ஆரம்பித்த ஜனாதிபதி பின்னர் அதனை மாற்றிக் கொண்டார். புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர்தான் தீர்வு என்றார். யுத்தமும் முடிந்தது.

## இரண்டும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்

அதன் பின் மக்களை சொந்த இடத்தில் குடியமர்த்திய பின்னர் தீர்வு என்று இந்தியா உட்பட சர்வதேச சமூகத்துக்கு உறுதியளித்தார். மீள் குடியமர்வும் இப்போது வேகமாக நடைபெற்று முடிவடையப்போகிறது. எனினும் தீர்வு வந்ததாக இல்லை. இனப்பிரச்சினைத் தீர்வைப் பற்றிய பேச்சை இப்போது ஜனாதிபதியின் உரை களில் காணமுடிவதில்லை. இப்போது அவருக்கு வேலை சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்த வேண்டியது. அதற்காகப் படாதபாடு படுகிறார் அவர். அதனைச் செய்வதற்காக தனது சகோதரரும் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ மூலம் 'வடக்கின் வசந்தம்' என்ற பெயரில் பூச்சாண்டி விளையாட்டை ஆரம்பித் திருக்கிறார். வடக்கில் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தப் பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை ஊதிப்பெருப்பித்துச் சர்வதேச சமூகத்துக்குக் காட்டி அதன் மூலம் நாட்டுக்கு நிதியுதவிகளையும் பெறுவதற்கு ஜனாதிபதி வகுக்கும் திட்டங்கள் ஏராளம். வடக்கு மக்கள் சந்தோஷமாக உள்ளனர் என்பதை வெளியுலகுக்குத் தெரியப்படுத்த யாழ்ப்பாணத்தில் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி, கல்விக் கண்காட்சி, களியாட்ட விழாக்கள் என்பனவும், கிளிநொச்சியில் வடமாகாண இலக்கிய விழாவும் நடத்தப்படுகின்றன. இவற்றை நடத்தி தமிழ் மக்களை மகிழ்ச்சிப்படுத்துவதன் மூலம் இனப்பிரச்சினைத் தீர்வை மழுங்கடித்துவிடலாம் என்ற எண்ணத்துடன் இந்த அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருவது நன்கு புலனாகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து அரசு பேசி வருகின்ற போதும், அந்தப் பேச்சுக்கள் எதுவும் இதயசுத்தியுடன் இடம்பெறவில்லை என்பதும் தெரிகின்றது. இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் ஒர் உடன்பாட்டுக்கு வரவும் அரசுக்கு மனமில்லை. அதற்கான அவசியம் இல்லை என்றும் அது கருதுகின்றது. மீள் குடியமர்வு, அபிவிருத்தி ஆகிய விடயங்கள் தொடர்பாகவே கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துகிறதே தவிர அரசியல் தீர்வு குறித்து மூச்சும் காட்டுவதில்லை. புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு விட்டதால் இனப்பிரச்சினைக்கான தீர்வு தேவையில்லை என்று அரசு கருதுவதே இதற்குக் காரணம்.

அரசு இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதோ அதையே தான் அச்சொட்டாக ஐக்கிய தேசியக் கட்சியும் பின்பற்றுகின்றது என்பது இப்போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப் பினருமான திஸ்ஸ அத்த நாயக்க இதனைப் பகிரங்கமாக உறுதிப்படுத்தியிருக்கிறார். யுத்தத்தில் புலிகள் தோற் கடிக்கப்பட்டுவிட்டதால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேவையில்லை என்று பி.பி.சி சிங்கள சேவையான 'சந்தேஷிய'வுக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குப் பதிலாக இன்று வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே அவசர தேவையாகும் எனவும் அவர் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பேட்டியின் மூலம் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படுவதை விரும்பவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தீர்வு விடயத்தில் இரு பிரதான சிங்களக் கட்சிகளும் ஒரே கொள்கையைக் கொண்டுள்ளதால் இனப் பிரச்சினைத் தீர்வு என்பது எதிர்காலத்தில் வெறும் கனவாகவே இருக்குமெனவும், தீர்வை முன்னெடுப்பதற்கு இரண்டு கட்சிகளும் பெரும் முட்டுக்கட்டையாக செயற்படும் எனவும் அரசியல் விமர்சகர்கள் இப்போது கருத்து வெளியிட்டுள்ளனர். தீர்வு தொடர்பாக இந்த இரு கட்சிகளுடனும் பேசுவதன் மூலம் எந்தப் பயனும் கிட்டப்போவதில்லை. எனவே தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டிய கட்டாய நிலை இப்போது ஏற்பட்டுள்ளதெனவும் கருத்துக் கூறப் படுகின்றது.

**- அதிரன்**

முன்பு தமிழர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வை முன்வைக்குமாறு நாடாளுமன்றத்திலும் வெளியிலும் அரசுக்கு நெருக்கடி கொடுத்து வந்த ஐக்கிய தேசியக் கட்சி இப்போது அதற்கு முற்றிலும் எதிராக மாறி நின்று தீர்வு தேவையில்லை என்று கூறியிருப்பது தமிழர் நாட்டில் அதிர்ச்சியையும் அந்தக் கட்சி மீதான வெறுப்பையும் உண்டுபண்ணியிருக்கிறது. திஸ்ஸ அத்தநாயக்கவின் இந்தப் பேட்டி தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் மௌனம் காத்து வருகின்றமை அந்த வெறுப்பை மென் மேலும் அதிகரிக்கச் செய்திருக்கிறது.




ஐ.தே.கவின் இந்த நிலைப்பாடு தமிழ்க் கட்சிகள் மத்தியில் கடும் கொதிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். ஆயுதம்ஏந்திப் போராடினால் மட்டுமே தமிழ் மக்களுக்கு ஏதாவது தருவோம் என்ற நிலைப்பாட்டில் பெரும்பான்மைக் கட்சிகள் இருக்கின்றன என்பதையே ஐ.தே.க பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவின் கூற்று நிரூபித்திருக்கிறது - என்றார்.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வுக்கான தேவை இப்போது இல்லை என ஐதே.க தெரிவித்திருப்பது அதன் சுயரூபத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது என ஈ.பி.டி.பியும் தெரிவித்துள்ளது. ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவிக்கையில், ஐ.தே.கவின் இந்தக் கூற்று முட்டாள் தனமானது என்றார்.

மீள் குடியேற்றப் பிரதிஅமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கருத்துத் தெரிவிக்கையில்;

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு என்பதை ஜனாதிபதியே ஏற்றுக்கொண்டுள்ளார். நாங்கள் இப்போது எந்தமாதிரியான தீர்வு தேவை என்பது குறித்து ஆராய்ந்து வருகின்றோம். வெளி நாடுகளில் உள்ள தீர்வு மாதிரிகள் குறித்து அந்த நாடுகளின் தூதரங்களுடன் பேசி வருகின்றோம் - என்றார்.இதற்கிடையே தமிழர்களுடன் அதிகாரங் களைப் பகிர்ந்து கொள்வதில் பிரதான கட்சிகள் இரண்டுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் இனப்பிரச்சினைக்கான தீர்வை சாத்தியமற்றதாக்கி வருகின்றன எனஅரசியல் அவதானிகளும் கல்வியியலாளர்களும் கவலை வெளியிட்டுள்ளனர்.



சிங்களக் கட்சிகளின் இந்த அலட்சியப் போக்கு குடாநாட்டு மக்கள் மத்தியிலும் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளச் சிங்களக் கட்சிகள் தயாரில்லை என்றும் குடாநாட்டு மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

போர் முடிவுக்கு வந்து தீர்வுக்கான ஓர் அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள் ளது என சர்வதேசம் கூறிவரும் நிலையில் சிங்களத் தலைமைகளின் அலட்சியப் போக்கு ஒட்டுமொத்த தமிழ் இனத்தையும் வெறுப்படைய வைத்திருக் கிறது. இந்த இரண்டு கட்சிகளின் இரும்புப் பிடிக்குள் இருந்து இனப்பிரச்சினைக்கான தீர்வை எவ்வாறு பெறு வது என்ற திண்டாட்டம் இப்போது தமிழ்க் கட்சிக ளுக்கு ஏற்பட்டிருக்கிறது. அது ஒரு பெரும் சவாலா கவும் உருவெடுக்கும் நிலைமை எதிர் காலத்தில் ஏற்படலாம் என்பதிலும் சந்தேக மில்லை.

எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இனி வரும் காலங்களில் எவ்வாறு நகரப் போகிறது என்ற எதிர்பார்ப்பும் ஏக்கமும் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றியிருக்கிறது. சிங்களக் கட்சிகளின் இந்த அரசியல் சித்து விளையாட்டை தமிழர்தரப்பும் தமிழ் அரசியல் கட்சிக ளும் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன என்பதே அடுத்து எழுந்துள்ள கேள்வி.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் உடன் தேவை

எமது விருந்தகத்திற்கு சமையல் உதவியாளர் தேவை. 03.10.2010, 04.10.2010 ஆகிய திகதிகளில் பி.ப. 2 மணி யில் இருந்து 5 மணிவரை நேரில் வரவும். தொடர்புகளுக்கு: 021 222 0288 J.K.S கூல்பார் & ரெஸ்ரோறன் 26, பிறவுண் றோட், தொழில் நுட்பக் கல்லூரி முன்பாக.

## தவறிவிட்டது

தெய்வேந்திரக்குரு குருராஜ் என்பவரின் தேசிய அ.அ. (842403880V), மோட்டார்சைக்கிள் ஆவணம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் 30.09.2010 நுணாவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம். தொ.பே. 077 666 9025

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ்.செந்தில்கதிர் வேலாயுதசாமி கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கும்பாபிஷேகத்தை ஒட்டி நடத்தப்பட்ட மண்டலாபிஷேக பூர்த்தியும், சங்காபிஷேகமும் நடைபெறும். பின்னர் வள்ளி, தெய்வானை சமேத செந்தில் பெருமானுக்கு பரிவார மூர்த்திகளுக்கு அபிஷேகம், அலங்காரம், தீப ராதனை என்பன நடைபெறும்.

மாலை 6 மணிக்கு அலங்கார உற்சவமும் வீதி உலாவும் நடைபெறவுள்ளன. (ற)

## மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

கொழும்புத்துறை, ஒக்.3

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டிய மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பண்டத்தரிப்பு பெரியவிழான் சவாரித்திடலில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சிவமலர் அனந்த சயனன் தலைமையில் நடைபெறும் போட்டியில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும், சிறப்பு விருந்தினராக இளவாலை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியும் கலந்து கொள்வர்.

வெற்றிபெறும் போட்டியாளர்களுக்குப் பரிசாக தங்கப்பதக்கம், துவிச்சக்கரவண்டி என்பன வழங்கப்பட உள்ளதாக விழாச் சபையினர் தெரிவித்தனர். (த-135)

## தேவை

ஆங்கிலம் சரளமாக எழுதவும் பேசவும் கூடிய (PROFESSIONAL) "ASSOCIATION OF BUSINESS EXECUTIVES (U.K)" DIPLOMA IN BUSINESS ADMINISTRATION தகைமை உடைய, கொழும்பில் 10 வருடங்களுக்கு மேல் சர்வதேசப் பாடசாலை மாணவர்களுக்கு [EDEXCELL & CAMBRIDGE (O/L)] வணிகக் கல்வி, வர்த்தகம், கணக்கியல், பொருளியல் GENERAL, ENGLISH LEADING TO SPOKEN, BUSINESS ENGLISH, COMMUNICATION & PRESENTATION கற்பித்த, அனுபவமுள்ள ஆசிரியர் ஒருவர், தற்போது யாழ்ப்பாணத்தில் புதிய வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளார். அவருக்கு ATTACHED BATHROOM உடன்கூடிய பொருத்தமான அறை வகுப்புகளை நடத்துவதற்கு யாழ்ப்பாண புறநகர்ப் பகுதியில் உடன் தேவை.

**பின்வரும் பகுதிகளில் விரும்பத்தக்கது**

- கோயில் வீதி, (கைலாசபிள்ளையார்).
- நல்லூர் வைமன் வீதி.
- நல்லூர் முன், பின் வீதிகளிலும்.
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அண்டிய பகுதிகளிலும்
- கோப்பாய் ஆசிரிய கலாசாலைப் பகுதிகளிலும்
- மானிப்பாய்
- சுண்டுக்குளி
- பெருமாள் கோயிலடிச் சுற்றாடலும்

உடன் தேவை.

பொருத்தமான கவர்ச்சிகரமான வாடகை வழங்கப்படும்.

தொ.பே : 0776110802

(சி/571484)

## காணி விற்பனைக்கு

859/17ஆம் இலக்கத்தில் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கிணற்றோடு கூடிய ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு இல. 222 6179

## காணி விற்பனைக்கு

நீர்வேலி காமாட்சி அம்பாள் சங்கத்திலிருந்து கிழக்குப் பக்கமாக 100 மீற்றர் தூரத்தில் வடக்குப் பக்கமாக உள்ள ஒழுங்கையில் 200 மீற்றர் தூரத்தில் வீடு கட்டவும், தோட்டம் செய்யவும் உகந்த 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். கூடிய விலை கேட்போருக்கு உடனடியாக விற்கப்படும். தொடர்பு: 021 300 2248

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் லண்டனில் B.Sc. Computer Science கல்வி கற்ற P.R உள்ள, 36 வயது மணமகனுக்கு சிவந்த அழகிய கிரகபாவம் குறைந்த மணமகள் தேவை. நட்சத்திரம் பூசம், கிரகபாவம் $8\frac{1}{4}$ தொடர்பு: 021 321 2961, 077 4232836 (சி/571539)

## வீடு விற்பனைக்கு

ஐந்து அறைகள் Attached Bathroom, Kitchen சகல வசதிகளுடன் கொண்ட வீடு நல்லூர் செட்டித்தெரு, நாவலர் வீதி சந்தியில் 64, மருதடி வீதியில் உடன் விற்பனைக் குண்டு. (104095)

## German Swiss வகுப்பு

German Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு:

German Institute, No.10, Palaly Road, Jaffna. T.P - 077 160 4823 (104105)

## சந்தைப்படுத்தல் பயிற்சி நெறி

- சந்தைப்படுத்தல் துறையில் தொழில் வாய்ப்புப் பெற Sales Representative (Marketing Executive)
- விற்பனைப் பிரதிநிதி ஆவதற்கு சந்தைப்படுத்தலில் புதிய அணுகுமுறை
- அடிப்படை சந்தைப்படுத்தல் (Basic Marketing) அறிவுடன் கூடிய விற்பனைப் பிரதிநிதி

**பயிற்சி நெறி**

**MODERN MARKETING**

சந்தைப்படுத்தலில் டிப்ளோமா (Diploma in Marketing)

தராதரத்துடன் 20 வருட விற்பனை அனுபவத்தரின் நேரடிக் கண்காணிப்பு பயிற்சி நெறி

சிங்கள, ஆங்கில சொற்பிரயோகத்துடன் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றக்கூடிய வல்லமை.

Sales Representative/ Marketing Executive

- பயிற்சிப் பட்டறை (Work Shop) சனி, ஞாயிறு விடுமுறை நாள்களில்
- அடிப்படைத் தகைமை G.C.E. O/L சித்தி

இலவசக் கருத்தரங்கு: 10.10.2010

ஆரம்பம்: 17.10.2010 ஞாயிற்றுக்கிழமை (விஜயதசமி)

**பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்**

NEW KEEN MARKETING
K.K.S.Road, kondavil West, Kondavil.

தொடர்புகளுக்கு: 077 4710002, 072 8203371

---

British BUSINESS SCHOOL

Were Students Come First

## விஜய தசமியன்று BBS இன் அனைத்து வளாகங்களிலும் வித்தியாரம்பம்

### சர்வதேச தரம் வாய்ந்த BBS பாலர் பாடசாலையின் அனைத்து வளாகங்களிலும் புதிய அனுமதிகள்

- 10 வருடமாக சர்வதேச தரத்திலான BBS இன் ஆங்கிலக் கற்கை நெறிகளால் யாழ்குடாநாட்டில் ஆயிரக்கணக்கான சிறார்கள் பயன் பெற்றுள்ளார்கள்.
- இது வரை BBS இன் வளாகங்களில் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான சிறுவர்களில் 95 வீதமானோர் யாழ்குடாநாட்டின் அதி சிறந்த பாடசாலைகளில் கற்பதற்கு அனுமதி பெற்றிருப்பதுடன் 5ஆம் ஆண்டு புலமை பரிசிலிலும் சித்தியடைந்துள்ளார்கள்.
- யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்கென இயங்கிய ஒரே ஆங்கில மொழிமூல தனியார் பாடசாலை.
- அன்றிலிருந்து இன்று வரை அனைவரும் செலுத்தக் கூடிய ஒரே கட்டணம்.
- உங்கள் வசதி கருதி யாழ்குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் சர்வதேச தரத்திலான வளாகங்கள்.

**Dr. Maria Montessori & Canadian Early Learning Method ஆங்கில மொழிமூல பாடசாலை செயற்பாடுகள்.**

**பாலர் பிரிவுகள்**

**Play Group ( 2+ சிறார்களுக்கு)**

- Sensorial Activities
- விளையாட்டுகளுடன் கூடிய அதிநவீன கற்கை நெறிகள்.
- Song, Poems, Nursery Rhymes, Drama & Dialogue

**Montessori ( 3+ சிறார்களுக்கு)**

- மொழி அறிமுகம் – ஆங்கிலம் (Speech Skills) – தமிழ்
- எழுத்து அறிமுகம் – ஆங்கிலம் (Writing Skills) – தமிழ்
- எண் பயிற்சிகள் (Arithmetical Operations)
- Sensorial Activities
- Song, Poem, Drama, Dialogue

**Pre School ( 4+ சிறார்களுக்கு)**

- எண், எழுத்து கருதுகோள்
- ஆங்கில பேச்சுத்திறன் செயற்பாடுகள் Audio, Visual
- Sensorial Activities
- Song, Poem, Drama, Dialogue
- அடுத்த கல்வியாண்டுக்கான முழுத் தகுதி நிலை

**பாட விதானம்**

- பாடசாலை ஆரம்பம் காலை 7.30
- பாடசாலை முடிவு மதியம் 12.30
- வாரத்தின் 25 மணித்தியாலங்களுக்கான கல்விச் செயற்பாடுகள்
  - Language Skils- English - 5 Hrs
  - Language Skils- Tamil - 4 Hrs
  - Maths - 4 Hrs
  - Sensorial Activities - 2 Hrs
- Song, Poem, Drama, Dialog - 2 Hrs
- Art and Craft - 2 Hrs
- Play Activities - 3 Hrs
- Baratha Natyam - 1.5 Hrs
- Computing - 1.5 Hrs

**நல்லூரில் குழந்தைகள் பராமரிப்பு நிலையம் Day Care Centre**

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க எமது நல்லூர் வளாகத்தில் சிறார்களுக்கான மதிய, மாலை நேர சிறுவர் பராமரிப்பு நிலையம், தை 2011ல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

**BBS பாலர் பாடசாலை சிறார்களுக்கு**

FREE English Speech Skills & (ஆங்கில பேச்சுப் பயிற்சி வகுப்புகள்) Elocution on Week-Ends

**எம் அனைத்து சிறார்களும் பங்குபெற்றும் கல்விசார் நிகழ்வுகள்**

- English Day & Concert - ஆங்கில தின கலைவிழா
- Sports Day- விளையாட்டு விழா
- Bharatham Festival- பரத நாட்டிய விழா
- Art & Craft Exhibition- சித்திர கைவினைக் கண்காட்சி
- Muthamilzh Vizhla- முத்தமிழ் விழா
- Pre-School Graduation and Carol Ceremony

**BBS இன் 9வளாகங்கள்**

| | |
|---|---|
| நல்லூர்: | 140, கோயில் வீதி நல்லூர். |
| கோப்பாய்: | பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி. |
| நீர்வேலி: | 1ம் கட்டை, இராச வீதி, நீர்வேலி. |
| சாவகச்சேரி: | சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அருகாமை. |
| மானிப்பாய்-1: | 252, ஆலடி சந்தி, யாழ் வீதி, மானிப்பாய். |
| மானிப்பாய்-2: | சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். |
| சுன்னாகம்: | Lakshmi(புதிய நீதிமன்ற அருகாமை) கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். |
| புலோலி: | ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை. |
| அச்சுவேலி: | அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை. |

வெளிநாடுகளில் தேர்ச்சி பெற்ற கல்வியாளர்களால் சர்வதேச தரத்திற்கமைய நடாத்தப்படும் கல்வி நிலையம்.

# BRITISH BUSINESS SCHOOL

140, கோயில் வீதி, நல்லூர். தொலைபேசி: 021 222 ... 077 362 7055, 077 408 3656, 077 664 6357

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சேரிக்கு வரும் உள்ளூர் வாசிகள் நிலத்திலேயே அமர்ந்திருந்து எரிச்சலுடன் காத்திருப்பார்கள்!

**குறிப்பு**

யாழ்ப்பாணத்தில் தாம் கடமையாற்றிய வேளையில் யாழ்ப்பாணத்தின் சிவில் நிர்வாக நடைமுறை குறித்தும் யாழ்ப்பாணத்தவர்களது சுபாவம் குறித் தும் தாம் அவதானித்தவற்றின் அடிப்படையில் தாம் எழுதிய நூலில் லியனார்ட் வூலப் தெரிவித்திருக் கும் கருத்துக்கள் இவ்வாரமும் தொடர்கின்றன.

அரசாங்க அதிபரின் வாசஸ்தலமும் கச்சேரியும் ஒன்றாகவே இருந்தன. (தற்போதுள்ள கச்சேரிக்கு நேர் எதிராகவே முந்தைய கச்சேரி இருந்தது)

இரண்டு கட்டடங்களும் நீளமான பெரிய விறாந்தைகளைக் கொண்டிருந்தன. கட்டடங்கள் சாம்பல் நிறமாகக் காணப்பட்டன. இந்தக் கட்டடம் ஒல்லாந்தர் காலத்தில் காணப்பட்டிருக்க வேண்டும். கச்சேரி வளாகம் பூங்கா என அழைக்கப்பட்டது. இங்கு நின்ற பாரிய விருட்சங்கள் நடு மத்தியானத்திலும் குளிர்மையை வழங்கிக் கொண்டிருந்தன.

மதிய போசனத்திற்காக அல்லது வேலை முடித்து பங்களா திரும்பும் வரை நாங்கள் இங்கு அமர்ந்திருப்போம். இங்கு கடமையாற்றும் ஐரோப்பியர்கள் கீழைத்தேசத்தவர்களைப் பற்றியும் அவர்களது சாதி, அவர்கள் கூறும் பொய்கள், அவர்களது பயங்கள், துன்பங்கள் பற்றி அறிந்திருப்பார்களோ என்பதுஎனக்குச் சந்தேகம். சிங்களவர்களோ தமிழர்களோ கச்சேரிக்கு வருவது எதற்காகவென்றால் தமது வண்டிக்கு அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு அல்லது தரிசு நிலத்தைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது உடையார் விதானையார் போன்றவர்களின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியாவிட்டால். இது போன்ற காரணங்களுக்காகவே உள்ளூர்வாசிகள் கச்சேரிக்கு வருகின்றார்கள்.

கச்சேரி விறாந்தையால் போய்வரும் அதிகாரிகளை எரிச்சலுடன் பார்த்துக்கொண்டு நிலத்தில் அமர்ந்திருப்பார்கள் கச்சேரிக்கு வரும் உள்ளூர்வாசிகள்.

**ஆவணப் பெட்டகம் 13**

நான் பதவியேற்றதும் கச்சேரிக்கு வரும் உள்ளூர் வாசிகளை அழைத்து அவர்களது பிரச்சனைகளைச் செவிமடுக்கத் தொடங்கினேன். அதனால் அவர்கள் என்னை வெளிஆளாகப் பார்க்கவில்லை. யாழ்ப்பாணக் கச்சேரியில் முதலாவது வாரம் எனக்கு டல்லாகவும் போராகவுமிருந்தது. அரசாங்க அதிபரும் அலுவலக உதவியாளரும் கலந்து பேசியே முடிவுகளை எடுப்பார்கள். அரசாங்க அதிபர் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் வேளைகளில் அவருடன் தொடர்புகொள்வது சற்றுக் கடினமாக இருக்கும். இப்படியான சந்தர்ப்பங்களில் அலுவலக உதவியாளர் ஏதாவது பிரச்சனை பற்றி தீர்மானம் எடுக்க முடியாமல் திண்டாடுவார். வீதிகள், சுகாதாரம், நீர்ப்பாசனம், போன்ற விடயங்கள் தவிர்ந்த அனைத்தும் அரசாங்க அதிபரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தன. சுங்கம்,பொலிஸ்,சிறைச்சாலைகள்,உள்ளூராட்சி, சிறிய பெரிய வீதி அபிவிருத்தி போன்ற சகல விடயங்களும் அரசாங்க அதிபரின் கைகளிலேயே இருந்தன.

ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு கிராமத் தலைவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களை மேற்பார்வை செய்வதற்கு ஒரு கிராமத் தலைவர் நியமிக்கப்பட்டிருந்தார். ஒரு பரந்துபட்ட பிரதேசம் ஒரு கிராமத் தலைமை அதிகாரியின் கீழ் இருந்தது. அவருக்குக் கீழ் ஒவ்வொரு கிராமத் தலைவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அரசாங்க அதிபர் தனது மாகாணத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும்போது கிராமத்தலைமை அதிகாரியுடன் சேர்ந்தே செல்வார். அரசாங்க அதிபர் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் மக்களின் கோரிக்கைகள், முறைப்பாடுகள், அபிவிருத்தி, முன்னேற்றமடைய வேண்டிய விடயங்கள், மக்களின் தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகள் என்பன பற்றிக் கலந்துரையாடுவார்.

இந்த வகையில் அலுவலக உதவியாளரிடம் பெருமளவு பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. அரசாங்க அதிபர் ஒரு சோம்பேறி. கடேற் உத்தியோகத்தரின் நிலை சற்று வித்தியாசமாகக் காணப்பட்டது. இங்கிலாந்திலிருந்து வந்தவர் வேலைக்குப் புதிது. எனது கடமையாக (லைசென்சுகளுக்கு) அனுமதிப்பத்திரங்களுக்கு ஒப்பமிடுவதுடன் வழமையாக வரும் கடிதங்களைப் பார்வையிடுவது மற்றும் கணக்கு வழக்குகள் என்பன வழங்கப்பட்டிருந்தன.

இது ஒரு போரடிக்கும் வேலையாக இருந்தது. நான் இதைப் பற்றி அலுவலக உதவியாளர் சௌதேனிடம் கூறினேன். அவர் மிகவும் நல்லவர்,

## யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்

வேறு யாராவது என்றால் என்னை ''நீ நரகத்துக்குப் போ'' என்று ஏசியிருப்பார்கள். இந்த விடயத்தில் அவராலும் ஒன்றும் செய்ய முடியாது.

இந்த நிலையில் அரசாங்க அதிபர் முத்துக் குளிப்பைக் கண்காணிப்பதற்காக மன்னாருக்குச் சென்று விட்டார். அலுவலக உதவியாளரும் பரீட்சை ஒன்றுக்காகக் கொழும்பு சென்று விட்டார். வடமாகாணத்தில் நிர்வாகப் பொறுப்பு கனிஷ்ட குடியியல் உத்தியோகத்தரான என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. இரண்டு வாரங்களுக்கு வடமாகாண நிர்வாகம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

**தாண்டவன்**

9.4.1905 காலை 10.30 மணியளவில் 35 மைல்கள் மிதிவண்டியில் பிரயாணம் செய்துவிட்டு வந்து கடும் களைப்பில் படுத்திருந்தேன். அது இரண்டு ஐயர்மாருக்கிடையிலான பிரச்சினை. ஒரு பெரிய கோயிலுக்கருகில் நின்ற பாரிய விருட்சங்களைத் தறித்தது சம்பந்தமான பிரச்சினை. தறிக்கப்பட்ட மரங்கள் நின்ற காணி அரச காணியா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு என்னுடையது.

(வளரும்)

# நம் முன்னோர் பயன்படுத்திப் பலன்கண்ட கை மருந்துகள்

# விஷக்கடிக்கு தும்பைப் பூச்சாறு; மூட்டு வாதத்துக்கு ஊமத்தை இலை

### தும்பை

தாவரவியற்பெயர்: Leucas aspera லியூக்கஸ் அஸ்பெரா
குடும்பம் :Labiatae லேபியேற்றே
சிங்களப்பெயர் : தும்ப
சமஸ்கிருதப்பெயர் : துரோணபுஷ்பி

கொன்றைப் பூவைப் போலவே தும்பைப் பூவும் சிவனுக்கு மிகவும் பிரியமானது.

''திங்கள் தும்பை கொன்றையும் சிரத்தணிந்து கொண்டு நின்ற அங்கி அம்பகன்'' என்று சிவபொருமான் போற்றப்படுகிறார்.



தும்பையில் சிறு தும்பை, பெருந்தும்பை, முடி தும்பை, கவிழ்தும்பை என்று பலவகையுண்டு. இது சிறு செடிவகுப்புக் குரியது. தனி இலைகள் எதிரொழுங்கில் அமைந் திருக்கும். பூக்கள் பல நிறம். வெண்மை நிறப்பூவுள்ளது சிறந்தது.

தும்பைப் பூவைப் பசுப்பால் விட்டரைத்து, உள்ளுக்குக் கொடுக்க மாறா விக்கலும் மாறும்.

பூச்சாற்றில் இரண்டு துளியை நசியமாக மூக்கில் விடத் தீராத தலைவலியும் தீரும்.

பாம்புக் கடி நஞ்சினால் மூர்ச்சடைத்தவர்களுக்கும் மூர்ச்சை தெளிவிப்பதற்காகப் பூச்சாற்றினால் மூக்கில் நசியமிடப்படுகிறது. விஷக்கடிகளுக்குப் பூச்சாற்றை உள்ளுக்கும் கொடுத்து, கடித்த இடத்திலும் பூசலாம்.

தும்பை இலை, மிளகு என்பவற்றைச் சேர்த்தரைத்து விஷக்கடிகளுக்கு உள்ளுக்கும் கொடுத்து கடிபட்ட இடத்திலும் பூசலாம்.

பெருந்தும்பைச் சாற்றை மோரில் கலந்து சாப்பிட செரியாக்கழிச்சல், மந்தம் நீங்கும்.

கவிழ் தும்பை இலை, உத்தமாகாணி இலை என்பவற்றைச் சமவளவில் எடுத்து அரைத்துக் கொட்டைப் பாக்களவில் பசுப்பாலில் கொடுத்து வர பெண்களுக்கு மாதவிடாயின்போது ஏற்படும் பெரும்பாடு நீங்கும்.

ஓமத்தை அரைத்துத் தும்பை இலைச்சாற்றுடன் சேர்த்து குழந்தைகளுக்குண்டாகும் மாந்தக்கழிச்சல் வயிற்றுப் பொருமலுக்குக் கொடுக்கலாம்.

### ஊமத்தை

வேறுபெயர் - தூமத்தை, உன்மத்தம்.
தாவரவியற்பெயர்: Datura alba
(டற்றியூரா அல்பா)
குடும்பம்: Solanaceae (சொலனேசியே)
சிங்களப் பெயர்: அத்தன
சமஸ்கிருதப் பெயர்: உன்மத்த
ஆங்கிலப் பெயர்: Thorn apple.

சிவனுக்குப் பிரியமான மலர்களில் ஊமத்தம்பூவும் ஒன்று. சிவனுக்கு உன்மத்தன் என்றும் ஒரு பெயருண்டு. ஊமத்தை நச்சுத் தாவரங்களில் ஒன்று. இதன் விதை உன்மத்தம் அல்லது பைத்தியத்தை உண்டாக்கக்கூடியது.



ஊமத்தையில் வெண்ணூமத்தை கருவூமத்தை, பொன்னூமத்தை, மருளூமத்தை என்று பேதங்களுண்டு. எருக்கைப் போலவே, ஊமத்தையும் பற்றைக் காடுகளிலும், புறம்போக்கு நிலங்களிலும், மயானங்களிலும் அதிகமாகக் காணப் படுகின்றது. இதுவும் செடிவகுப் புக்குரியது. வெண்ணூமத்தை, கருவூமத்தை இரண்டுமே மருத் துவத்தில் பயன்படுகின்றன.

மூட்டுவாதநோய்களுக்கு ஊமத்தை இலையை வாட்டி மூட்டுகளில் கட்டிவர வேதனை, வலி, வீக்கம் என்பன குறையும். ஊமத்தை இலையை பொட்டணிகட்டி ஒற்றடமும் கொடுக்கலாம்.

ஊமத்தமிலைச் சாற்றை அரிசிமாவுக்குச் சேர்த்தும் களிபோலக் கிண்டி எடுத்து சுளுக்கு, அடிபட்ட வீக்கம், மூட்டு வீக்கம் என்பவற்றுக்குப் பூசிக் கட்டிவர அவை

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

மாறும். ஊமத்தம் இலைச்சாறு கொண்டு தயாரிக்கப்படும் பச்சை எண்ணெய் அல்லது மத்தன் தைலம் சதை வளர்ச்சியுற்ற புண்களுக்கு மருந்தாகும்.

ஊமத்தையிலை, நொச்சியிலை, ஆமணக்கிலை, இலுப்பை இலை, வாதமடக்கியிலை என்பவற்றைச் சம அளவில் எடுத்துக் குறுணலாக அரிந்து ஒரு துணியில் பொட்டலமாகக் கட்டி இருப்புச்சட்டியில் வைத்துச் சூடாக்கி, இலுப்பெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் தடவி பாரிசவாத நோயாளிகளுக்கு ஒற்றடம் கொடுத்துவர செயலிழந்த அவயவம் வலிமை பெறும்.

### பலாச மரம்

வேறுபெயர் - புரசு, முருக்கன், காயத்ரம், யாக்ஞவிருட்சம்.
தாவரவியற்பெயர்: Butea monosperma
பியூற்றியா மொனோஸ்பேர்மா
குடும்பம்: Papilionaceae பப்பிலியோனேசியே.
சிங்களப் பெயர்: கேல
சமஸ்கிருதப் பெயர்: பலாச, கிஞ்சுக.
ஆங்கிலப் பெயர்: Flame of the Forest.

இந்துக்களின் கிரியைகளில் ஹோமத்துக்குரிய முக்கிய சமித்தாக பலாசம் இலையும், தண்டும் பயன்படுகின்றன. பலாசம் என்றால் இலை என்று கருத்து. ஆதி காலத்தில் இலையில் இருந்து தோன்றியது என்ற பொருளில் பலாசு என்ற பெயர் இதற்கு வழங்கப்படுகிறது. இது ஒரு நடுத்தரவகுப் புக்குரிய மரம். முக்கூட்டிலைகள். நடு இலை சற்றுப் பெரியது. பூக்கள் செந்நிறம். அவரைப்பூப் போன்ற வடிவுள்ளவை. நெற்றில் ஒரேயொரு விதை மட்டும் இருக்கும்.



இதன் இலை, பட்டை, விதை, பிசின் என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

தளிரிலைகளை அரைத்துக் கட்டிகளுக்குப் பூசலாம். இலைக் குடிநீர் குடற்புளுக்களைக் கட்டுப்படுத்தும். பட்டையைக் குடிநீர் செய்து குடித்து வரத் தலைப்பாரம், இருமல், தடிமன், நீர்க்கோவை என்பன மாறும்.

விதைக்குக் குடற்புழுக்களை அழிக்கும் ஆற்றல் உள்ளது.

விதையைப் பொடி செய்து தேசிப் புளிச்சாறு கலந்து புண்கள், சிரங்கு, தேமலுக்குப் பூசலாம். தொண்டைப் புண்ணுக்கும் வாய்ப் புண்ணுக்கும் இதன் பிசினைக் குடிநீர் செய்து வாய் கொப்பளித்து வர மாறும்.



Dr.சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பாதசரம்



ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைத் துறையில் 1970களில் இணைந்து கொண்ட வல்வை ந.அனந்தராஜ் வடமராட்சி, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவரது சிறுகதைகள் ஈழத்தின் பல்வேறு பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. இவற்றுள் பல சிறுகதைகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டிகளில் பரிசில்கள் பெற்றுள்ளன.

இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள இவரது தொடர் நாவல் 'மண்ணும் மனிதனும்' 1976 இல் தினகரனில் வெளிவந்தது.

'பாதசரம்' இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி.

இவரது 'பாதசரம்' சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள 'பாதசரம்' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

வடமராட்சியின் பெரியதொரு வைத்தியசாலையாக விளங்கிக் கொண்டிருக்கும் "மந்திகை அரசினர் வைத்தியசாலையின்" முன் அன்றும் வழமைபோல் சனக்கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

இன்னும் பன்னிரண்டு மணியாகவில்லை... அதுதான் வைத்தியசாலையின் முன் எல்லோரும் மொய்த்துக் கொண்டு நிற்கின்றார்கள்.

வடமராட்சியின் மேற்கே தொண்டைமானாறு தொடக்கம் கிழக்கே வெற்றிலைக்கேணி, போக்கறுப்பு வரையுள்ள நாற்பது மைல் நீளமான ஒரு பரந்த பிரதேசத்தை உள்ளடக்கிய மக்களுக்கு உள்ள ஓரளவு வசதியுள்ள வைத்தியசாலையான "மந்திகை ஆதார வைத்தியசாலை" எந்த நேரமும் நோயாளர்களால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கும்.

வைத்தியசாலை வாட்டுகளில் உள்ள, நோயாளர்களைப் பார்க்கச் செல்வதென்றால் நண்பகல் பன்னிரண்டு மணிக்கும், பிற்பகல் ஐந்து மணிக்கும் தான் அனுமதிக்கப்படுவார்கள். அதற்கு இடையில் ஏதாவது செல்வாக்குகள் இருந்தாலன்றி எவருமே நோயாளரைப் பார்க்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நோயாளர்களைப் பார்வையிட அனுமதிப்பதற்கு இன்னும் நாற்பத்தைந்து நிமிடங்கள் இருந்தன.

"வாட்டுக்குள்" செல்வதற்காக நீண்ட நேரமாகக் காத்துக் கொண்டிருந்த சிவரூபன் பொறுமை இழந்த நிலையில் அடிக்கடி நேரத்தைப் பார்ப்பதும் நுழைவாசலில் இருந்த 'வாச்சரைப்' பார்ப்பதுமாக நின்றான்.

"அண்ணை...! குண்டு வீச்சிலை காயப்பட்ட ஒரு பிள்ளையைப் பார்க்கப்போக வேணும்..."

நீண்ட நேரம் அங்கே கால் கடுக்க நின்றதில் அவனுடைய இடுப்புக்குக் கீழ் வலித்துக் கொண்டு வந்தது. மாறிமாறிக் கால்களைத் தூக்கிச் சுவருடன் சாய்த்துக்கொண்டு நின்றதால் சிவரூபனுக்குச் சிறிது இதமாக இருந்தது. சிறிது நிம்மதியான ஒரு பெருமூச்சு விட்டான்.

வெளி நோயாளர் பகுதியில் இருந்து வாட்டுகளுக்குச் செல்லும் ஒடுங்கிய பாதைக்குக் குறுக்கே இருந்த ஒரு கதிரையில் இருந்து 'நந்தி' போல் வழியை மறித்துக் கொண்டிருந்த வாச்சர், அவனை மேலும், கீழுமாக ஒரு தடவை பார்த்துச் சிரித்துக் கொண்டான்.

"ஓ.... இஞ்சை ஒவ்வொரு நாளும் தானே குண்டு வீச்சு நடக்குது.... அது சரி... எந்தப் பிள்ளையைப் பார்க்கப்போறியள்?..... அது உங்களுக்குச் சொந்தமே?... எங்கே இருந்து வாறியள்?....

வடமராட்சிக் கிராமிய மண்வாசனை அந்த 'வாச்சரின்' ஒவ்வொரு வார்த்தையிலும் தொனித்தது. கேள்விக்கு மேல் கேள்வி கேட்டு சிவரூபனைத் துளைத் தெடுத்துக் கொண்டிருந்தான்.

"அண்ணை!..... நான் நாகர்கோயிலிலை இருந்து வாறன்... என்ரை சொந்தக்காரப் பிள்ளையைத்தான் பார்க்கப்போறன்... இப்ப பார்த்துவிட்டுப் போனால்தான் ஒன்றரை மணி பஸ் வண்டியைப் பிடிக்கலாம்... அதுதான் நாகர்கோயிலுக்குப்போற கடைசி வண்டி"

"என்ன.....?.....
நாகர்கோயிலோ...?"

அவன், ஏதோ பேயைக் கண்டவன் போல், அந்த ஊரின் பெயரைக் கூறியதும் அதிர்ந்து போய் நின்றான்.

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 167

கடந்த சில நாள்களாக நாகர்கோயிலின் பெயர் அடிபடாத பத்திரிகைகளோ, வானொலிச் செய்திகளோ இல்லை என்ற அளவுக்கு அந்தக் கடலோரக் கிராமத்தின் பெயர் உலகளாவிய ரீதியில் அடிபடத் தொடங்கிவிட்டது.

சில நாள்களுக்கு முன்னர்தான். அந்தக் கோரச் சம்பவம் நடந்து முடிந்தது...!

அன்றும், நாகர்கோயில் மகாவித்தியாலயம் தனது வழமையான பணிகளுக்காகத் தயாராகிக் கொண்டிருந்த நேரம்...

வெள்ளைச் சட்டைகளுடன், வெண்புறாக்கள் போல் அந்தப் பள்ளியை நோக்கி நூற்றுக்கணக்கான மாணவர்கள் புத்தகப் பைகளுடன் சென்று கொண்டிருந்தனர்.

பாடசாலையில் இறைவணக்கப் பாடல்கள் முடிந்து, காலைக்கூட்டம் நடந்து கொண்டிருந்த போது, நாகர் கோயில் கடல் வான்பரப்பின் வழியாக வந்து கொண்டிருந்த இரண்டு குண்டு வீச்சு விமானங்களினதும் இரைச்சல், அங்கே நின்றவர்களின், காதுகளைச் செவிடாக்கிக்கொண்டிருந்தன.... அதிர்ச்சியடைந்த மாணவர்களும், அதிபரும், ஆசிரியர்களும் என்ன செய்வதென்றே தெரியாது அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டு ஓடித்திரிந்தனர்.

அந்தப் பள்ளிக்கூடத்திற்குள் நின்ற, குழந்தைகளின் கூக்குரல் இன்னும் அச்சத்தைக் கூட்டிக் கொண்டிருந்தது!

வானத்தில் ஒரு தடவை மட்டுமே வட்டமிட்ட அந்த இணைண்டு "புக்காரா" குண்டு வீச்சு விமானங்களும் மாறி மாறிக் குண்டுகளைப் பொழியத் தொடங்கின. பள்ளிக்கூடத்தைச் சுற்றியும் அருகே இருந்த பத்தினியம்மன் கோயிலைச் சுற்றியும் புளிய மரத்திலும் குண்டுகள் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தன.

(18 ஆம் பக்கம் பார்க்க.....)

# கரும்பும் துரும்பும்

இலக்கியக் காட்சி 59

'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்று தமிழ் இலக்கியங்கள் பேசுகின்றன. நாலு என்பது நாலடியார் என்ற நூலையும் இரண்டு என்பது ஈரடியாலான திருக்குறளையும் குறிக்கின்றன. நாலடியால் அமைந்த பாடல்களையுடைய வேறு நூல்களிலிருந்து பிரித்து, அதன் சிறப்பு நோக்கி 'ஆர்' விகுதி கொடுத்து 'நாலடியார்' என சொல்லப்பெறுகின்றது. அதுபோல குறள்வெண்பா நூல்களிலிருந்து பிரித்து, அதன் சிறப்பு நோக்கி 'திரு' என்று அடைகொடுத்துத் 'திருக்குறள்' எனக் கூறப்பெறுகின்றது.

இங்கு நாம், நாலடியாரில், முக்கியமாக 'நிலையாமை' பற்றிக் கூறப்பெற்ற நீதிகள் அல்லது அறநெறிகள் பற்றிப் பார்ப்பதே எமது நோக்கமாகும்.

நாலடியார், சமணத் துறவிகளால் பாடப்பெற்ற ஏராளமான பாடல்களிலிருந்து தெரிந்தெடுத்துத் தொகுக்கப்பெற்ற நானூறு பாடல்களைக் கொண்ட ஒரு நூல் என்பது யாவரும் அறிந்த உண்மை.

சமணத்துறவிகள், செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்று நிலையாமை பற்றி வற்புறுத்தித் தொடங்கும் நீதிநூல் நாலடியார். தொடக்கத்திலே இந்த மூன்று அதிகாரங்களையும் படிப்பவர்களுக்கு, அது என்ன செல்வம் நிலையாது, இளமை நிலையாது, யாக்கை நிலையாது என எண்ணத்தோன்றும்.

ஆனால், இந்த நிலையாமை பற்றித் துறவறத்தில் இல்லாத இல்லறத்தாரும் அறிந்திருக்க வேண்டும் என்பது ஓர் உண்மை. மற்றும் நிலையாமை என்பதோடு பலவகை அறநெறிகளையும் எடுத்துக் கூறுகின்றது நாலடியார் என்பதை நாம் கவனிக்கலாம்.

செல்வம் நிலையாது என்பதோடு செல்வத்தின் இன்றியமையாமையும் கூறப்பெற்றுள்ளது. இளமை நிலையாமை எனக் கூறுவதோடு இளமையின் சிறப்பு, யாக்கையாற் பெறக்கூடிய பயன் பற்றியும் நாலடியார் கூறுகின்றது.

இந்த உலக வாழ்க்கையில் ஒரு பயனும் இல்லை; எல்லாம் நிலையில்லாதன என்று ஒரு பக்கமாக நிற்கவில்லை; நன்கு உண்டு, உடுத்து, மகிழ்ந்து வாழ்வதுதான் வாழ்க்கை என்றும் நாலடியார் கூறவில்லை.சோம்பலாக இருக்கும் இளைஞனுக்கு செல்வம் நிலையில்லாதது, இளமை நிலையில்லாதது, யாக்கை நிலையில்லாதது என்று அறிவுரை கூறுமுகத்தால் கூறப்பட்டதே இந்த மூன்று அதிகாரங்களும். அங்கே அவன் எப்படி வாழ்ந்து கொள்ள வேண்டுமென்று கூறியிருப்பது காணலாம். ஒரே சொல்லாக, இந்த உலகத்தைவிட்டுத் துறவியாகப் போய்விடு என்று கூறவில்லையே! ஏனைய அதிகாரங்களில் வாழ்க்கை நெறிக்குத் தேவையான கல்வி, நட்பு, அறிவுடமை, கற்புடை மகளிர் என நாம் அறிந்து கொள்ள வேண்டிய நீதிகள் பற்றிக் கூறப்பெற்றுள்ளது.

மேலும் இந்த நாற்பது அதிகாரங்களையும் பதுமனார் என்ற புலவர், அறம், பொருள், இன்பம் என முப்பாலாக வகுத்துள்ளமை பெரும்பாலும் திருக்குறளை ஒத்ததாக இருக்கிறது.

செல்வம் நிலையில்லாதது என்று துறவிகள் சொல்லும் போது அது சகடக்கால் போல் வரும் போகும் என அறியச் செய்து அதனால் செல்வம் கிடைத்த போது பகிர்ந்து உண்டு வாழ வேண்டும் என்று தானே கூறியிருக்கிறார்கள்.

**துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்**
**பகடுநடந்த கூழ் பல்லாரோடு உண்க;**
**அகடு உற யார் மாட்டும் நில்லாது செல்வம்**
**சகடக் கால் போல வரும்**

என்று சமணத் துறவிகள் வாழ்க்கை நெறி சொன்னது நம் சிந்தனைக்குரியதே.

அதுபோல இப்போது நாம் இளையம், வளர்ந்த பின்னர் ஏதாவது நல்லதைச் செய்வோம் என்று இருக்க வேண்டாம். இப்பொழுதிலிருந்தே நல்லறஞ் செய்யுங்கள்; எங்களுக்கு இறப்பு எப்போது வரும் என்று தெரியாது என்று உலக நிலைமையைத்தானே இளமை நிலையாமையில் கூறியிருக்கிறார்கள்.

**மற்றறிவாம் நல்வினையாம் இளையம் என்னாது**
**கைத்துண்டாம் போழ்தே கரவாது அறம் செய்மின்;**
**முற்றியிருந்த கனியொழியத் தீ வளியால்**
**நற்காய் உதிர்தலும் உண்டு**

என நாலடியார் கூறுவதும்,

**அன்றறிவாம் என்னாது அறம் செய்க மற்றது**
**பொன்றுங்காற் பொன்றாத் துணை**

எனத் திருக்குறள் சொல்வதும் நல்லறங்கள் செய்வதைப் பின்போட வேண்டாம். முதுமையில்தான் இறப்பு வரும் என்று இருக்க வேண்டாம்; இளமையிலும் இறப்பு நேரலாம் என்பதை எடுத்துக் காட்டுவதும் கவனிக்கத்தக்கது.

இது போலவே, யாக்கை நிலையாமைக்கு நாலடியார் கூறும் உவமையானது அக்கால மக்களின் வாழ்க்கையோடு இணைந்ததாக இருப்பது கற்று இன்புறத்தக்கது!

கரும்பு நமக்கு நன்கு பழக்கமான பயிர். வெல்லம் தயாரிப்பதற்குக் கருப்பஞ்சாறு எடுக்கப் பெறும். முற்றிய கரும்புத் தடிகளை வெட்டி ஆலையில் இட்டுச் சாறு பிழியப்பட்ட பின் சக்கைப் பொருளை எரித்துவிடுவார்கள்.

இயந்திரம் அதிகம் பயன்படுத்தப்படாத அக்காலத்தில் இந்தச் சக்கையை (துரும்பை) அதே சாறு காய்ச்சுவதற்கு எரிபொருளாகப் பயன்படுத்துவார்கள்.

கரும்பு பயிராக வளர்ந்து வரும் பொழுது அது வீணாக வெட்டப்படுவதையோ, அழிக்கப்படுவதையோ விரும்பமாட்டார்கள். ஆனால் சாறு பிழிந்து எடுக்கப்பெற்ற பின்னர் அதன் சக்கை எரிந்து போவதைப் பற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள். தம் கையாலேயே அதனை எரிப்பார்கள்.

பயிராக இருக்கும் கரும்பைப் பேணுபவர்கள். துரும்பு எரிவது கண்டு துயரப்படமாட்டார்கள்!

அதுபோலவே, உழைப்பால் உடம்பின் பயனைப் பெற்றவர்கள், அந்த உடம்பு இயமனால் கவரப்படும் போது வருந்துவதில்லை என நாலடியார், யாக்கை நிலையாமை பற்றிப் பட்டறிவோடு கூறும் இலக்கிய நயம் வியந்து பாராட்டத்தக்கதே!

**கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்**
**துரும்பு எழுந்து வேங்கால் துயராண்டு உழவார்;**
**வருந்தி உடம்பின் பயன் கொண்டார் கூற்றம்**
**வருங்கால் பரிவது இலர்.**

கரும்புப் பயிர் செழித்து வளரும் பருவத்தில், அதன் உரிமையாளர், அவற்றை யாரும் பறித்துக் கொண்டு போகவிடாமல் பாதுகாத்துக்கொண்டு இருப்பார். சில நாள்கள் சென்ற பின் கரும்புகள் வெட்டப்பட்டு பக்கத்திலுள்ள ஆலையில் சாறு பிழிந்து எடுத்தபின் அவை அப்பால் எறியப்படுகின்றன. அவற்றுக்கு இப்போது கரும்பு என்ற பெயரும் இல்லை, மதிப்பும் இல்லை. கரும்பைப் பேணி வளர்த்த அதே மனிதன் கருப்பஞ்சாறு காய்ச்சும் அடுப்புக்குள் கரும்பின் சக்கையைத் தள்ளி எரித்துக் கொண்டிருப்பான்.

இந்தக் காட்சி தமிழ் நாட்டில் கரும்பு விளையும் பகுதியில் ஆண்டுதோறும் காணப்படும் காட்சி ஆகும்.

நாலடியார் பாடிய சமணப் புலவர்கள் இந்தக் காட்சியைக் கண்டு அதனை உவமையாக்கி விளக்கிய தன்மை இன்றும் நாம் உணர்ந்து போற்றத்தக்கதாக உள்ளது.

இந்த உவமையும் உவமையாற்பெறப்படும் கருத்தும் மிகத்தெளிவானது. நிலையாமையை உணர்த்தவந்த புலவர், உடல் நிலைத்திடும் காலத்தில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறத்தவறவில்லை! நிலையில்லாத உடம்பு பிணமாவதற்கு முன், அதனால் பெறக்கூடிய பயனைப் பெற்றுவிடுங்கள் என்ற அறத்தினை நமக்குத் தந்துள்ளார்கள். அதனை உணர்ந்து செயற்படுவோமாக.

*குறிப்பு: திருக்குறள் எல்லாக் காலத்துக்கும் எல்லா உலகத்துக்கும் பொருந்தக் கூடிய பொதுமறையாக உயர்வு பெற்ற நூல். நாலடியார் பாடியவர்கள் நிலையாமைக் கொள்கையை வற்புறுத்தியுள்ளார்கள். ஆயினும் கற்றோர் நெஞ்சில் பதியக்கூடிய முறையில் சிறந்த உவமைகள் மூலம் பாடப்பெற்ற வகையில் நாலடியார் சிறப்பு பெறுகின்றது.*

***

மட்டுவில் நா. நல்லதம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலில் கட்சித் தாவல்கள்

## காலத்துக்குக் காலம் மாற்றமடையும் அடிப்படைக் காரணங்கள்

ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆசாத்

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரில் பங்கு கொள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமெரிக்கா சென்ற போது அவரின் அழைப்பின் பேரில் அவருடன் கூடச்சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான ஜோன் அமரதுங்க திரும்பி வந்ததும் அரசாங்கத்தில் இணையப் போகிறார் எனவும் அவருக்கு விமானப் போக்குவரத்து அமைச்சு வழங்கப்படவுள்ளது எனவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

கட்சி மாறுவது, அரசாங்கத்தில் இணைவது போன்றவை இப்போது அப்படியொன்றும் பெரும் அதிசயங்கள் இல்லாவிட்டாலும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிக நெருங்கியவர் என்ற வகையிலும் எதிர்க்கட்சிகளின் பிரதான கொறடா என்ற வகையிலும் இச் செய்தி அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தவே செய்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் மூலவேர்களையே ஆளும் தரப்பு ஆட்டம் காணவைக்கின்றதோ என்ற ஐயம் பல தரப்பிலும் - எழுந்துள்ளது.

1956ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களின் பெரும் ஆதரவைப் பெற்று அமோக வெற்றியீட்டியது தமிழரசுக் கட்சி. ஆனால், அக்கட்சி முஸ்லிம் மக்கள் தொடர்பான சரியான நிலைப்பாட்டை எடுக்கத் தவறியமையால் அதன் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரும் தலைசிறந்த பேச்சாளருமான மன்சூர் மௌலானா கட்சியை விட்டு வெளியேறினார். இதன் காரணமாகத் தமிழ் பேசும் மக்களின் கட்சியாக ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக்கட்சி தமிழ் மக்களின் கட்சியாகச் சுருங்கிக் கொண்டது. முன்னாள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராசதுரைக்குப் போட்டியாக காசி ஆனந்தனை வளர்க்க எடுக்கப்பட்ட முயற்சிகள் அவரை வெளியேற்றி அரசுடன் இணைய வைத்தன. எனினும் இந்த வெளியேற்றங்கள் உடனடியாக அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின என்று சொல்லி விட முடியாது. ஆனால் தமிழ், முஸ்லிம் மக்கள் ஓரணியில் நிற்க முடியாமல் போனமைக்கு இம்மாற்றம் தான் ஓர் அடித்தளத்தை உருவாக்கியது என்பதை மறுக்க முடியாது.

1964ஆம் ஆண்டு ஏரிக்கரைப் பத்திரிகைகளைத் தேசிய மயமாக்கும் மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது எதிர்பாராத விதமாக ஒரு பெரும் கட்சித்தாவல் இடம் பெற்றது. 101 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றத்தில் ஒரே நேரத்தில் சி.பி.டி சில்வா தலைமையில் 13 பேர் கட்சி தாவிய போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சியே கவிழ்ந்தது. இவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்ப உறுப்பினர் என்பதும் பிரதமராக வருவார் என எதிர்பார்க்கபட்டவருமாவார். இது திருமதி சிறிமாவோ மேற்கொண்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாகவும் அரசில் இடதுசாரிகளின் ஆதிக்கம் இருந்ததாலும் அரசை விழுத்த மேற்கொள்ளப்பட்ட ஒரு சர்வதேச சதி என்றே அப்போது கருதப்பட்டது. அடுத்து இடம்பெற்ற 1965ஆம் ஆண்டுத் தேர்தலில் ஐ.தே.கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெறாதபோதிலும், ஏழுகட்சிகளை இணைத்து ஒரு கூட்டரசாங்கத்தை அமைத்து ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. இவ்வகையில் சி.பி.டி சில்வா தலைமையிலான இந்தக் கட்சி தாவல் இலங்கை அரசியலில் முதல் முதலாக ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய சம்பவம் எனக் கூறமுடியும்.

அன்றைய காலகட்டத்தில் இலங்கையின் மிகப்பெரிய கட்சிகளான ஐ.தே.கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் நேரெதிரான கொள்கைகளையே கொண்டிருந்தன. ஐக்கிய தேசியக்கட்சி ஏற்றுமதி, இறக்குமதியாளர்களாக விளங்கிய சக்திகளினதும், பெருந்தோட்டத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட முதலாளித்துவ சக்திகளினதும், அந்நிய தேசங்களின் நலன்களுடன் தங்களைப் பிணைத்துக் கொண்ட நில உடைமையாளர்களினதும் அரசியல் பிரதிநிதியாக விளங்கியது. சர்வதேச அளவிலும் மேற்குலகம் சார்பான ஒரு கொள்கையையே அவர்கள் பின்பற்றி வந்தனர். ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அப்போது உள்ளூரில் உருவாகி வந்த தேசிய முதலாளிகளினதும், அந்நிய ஆதிக்கத்தினால் பாதிக்கப்பட்ட சிங்கள நில உடமையாளர்களினதும், விவசாயம் பாரம்பரிய பாவனைப் பொருள்கள் போன்றவற்றின் உற்பத்தியாளர்களினதும் பௌத்த சிங்கள தேசியவாதிகளினதும் நலன்களைப் பிரதிபலிக்கும் ஒரு கட்சியாக விளங்கியது. சர்வதேச அளவிலும் அது சீனா, சோவியத்யூனியன் போன்ற நாடுகளுடன் நெருக்கமான உறவைப் பேணியதுடன் மூன்றாம் உலக நாடுகளின் நலன்கள் தொடர்பான ஒரு நிலைப்பாட்டையும் எடுத்தது. அதாவது ஐக்கிய தேசியக்கட்சி மேற்குலகுடனான ஒரு தங்கு நிலைப் பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்தபோது, சிறிலங்கா சுதந்திரக்கட்சி இலங்கையில் ஒரு சுயதேவைப் பூர்த்தி கொண்ட தன்னிறைவும் பொருளாதாரத்தைத் தனது கொள்கையாகக் கொண்டிருந்தது.

இப்படியான நிலைமையில் ஒருவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவினால் அதன் அர்த்தம் அவர் இது காலவரை பின்பற்றி வந்த கொள்கைகளுக்கு நேரெதிரான பாதைக்குத் திரும்பிவிட்டார் என்பதாகும்.

அதன் காரணமாகவே சதி நடவடிக்கைகள் பின்புலத்தில் இருந்தாலும் கூட சி.பி.டி.சில்வாவும் குழுவினரும் அன்று கட்சி தாவியமை ஒரு பாரிய மாற்றமாகவும், அதிர்ச்சியளிக்கும் ஒரு சம்பவமாகவும் விளங்கியது.

இப்படியான அந்த மாற்றத்தின் வலிமை காரணமாக ஒன்பது ஆண்டுகளாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி கட்டி வளர்த்த தேசிய சுய ஆதாரப் பொருளாதாரக் கொள்கை அடுத்த ஐந்து ஆண்டுகள் திசைமாறிச் செல்லும் நிலை ஏற்பட்டது. எனினும் 1970 இல் மீண்டும் ஆட்சிக்கு வந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி நிலைமைகளைச் சீர்செய்து ஒரு தன்னிறைவுப் பொருளாதாரத்தை நோக்கி வேகமாக முன் சென்றதுடன், சர்வதேச அரசியலிலும் மூன்றாம் உலக நாடுகளுக்குத் தலைமை வகிக்குமளவுக்குப் பிரசித்தி பெற்றது.

ஆனால், 1977 ஆம் ஆண்டில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக் கட்சி நிலைமையைத் தலைகீழாக மாற்றியது. அந்நிய மூலதனங்களுக்கு கதவுகள் அனைத்தும் திறந்து விடப்பட்டன. சுதந்திர வர்த்தக வலயம் உருவாக்கப்பட்டது. அரச நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டன. தேசத்தின் மூல வளங்களின் உரிமைகள் கூட அந்நிய நிறுவனங்களுக்கு விற்கப்பட்டன. மீண்டும் இலங்கை தன்னிறைவுப் பொருளாதாரப் போக்கிலிருந்து வெளியேறி ஒரு ஏற்றுமதி, இறக்குமதி சார்ந்த தங்கு நிலைப் பொருளாதாரத்துக்குள் தள்ளப்பட்டது.

17 வருடங்களின் பின்பு 1995 இல் பதினொரு இலட்சம் பெரும்பான்மை வாக்குகளால் பெரும் எதிர்பார்ப்புடன் திருமதி சந்திரிகா குமாரதுங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தனர். ஆனால் மக்களின் எதிர்பார்ப்பு எதுவுமே நிறைவேறவில்லை. அவரும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வகுத்த அதே பாதையிலேயே நாட்டைக் கொண்டு செல்ல ஆரம்பித்தார்.

அதாவது 1995 இன் பின்பு சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளைத் தனதாக்கிக் கொண்டதன் மூலம் இலங்கையை உலகமயமாக்கல் வலைப்பின்னலுக்குள் மேலும் மேலும் இறுக்கிக் கொண்டது.

தற்சமயம் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சீனா, ஈரான் போன்ற நாடுகளுடன் தனது உறவை மேலும்நெருக்கிக் கொண்டுள்ளது என்பதைத் தவிர இரு கட்சி களுக்குமிடையே எவ்வித கொள்கை மாறுபாடுகளும் கிடையாது. தேசிய அளவில் பொருளாதாரப் பிரச்சினை என்றால் என்ன? இனப்பிரச்சினை என்றால் என்ன? ஒரே கொள்கைகளையும் நடைமுறையையும் கொண்டுள்ளன.

2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது பொதுசன ஐக்கிய முன்னணி கூடுதல் ஆசனங்களைக் கைப்பற்றி, ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால், நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை இல்லாத காரணத்தால் அரசு நாடாளுமன்றக் கூட்டத் தொடரையே ஒத்திவைக்க வேண்டிய அளவுக்குத் திண்டாடியது. இக் காலப் பகுதியிலேயே ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ஒரு குழுவினர் அரசு தரப்புப் பக்கம் தாவி அரசாங்கத்தைக் காப்பாற்றினர்.

1964 இல் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சியைக் கவிழ்க்க அதிலிருந்து ஒரு குழுவினர் ஐ.தே.கட்சிக்குத் தாவினர். பின்பு 2005 இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தாங்க ஒரு குழுவினர் ஐ.தே.கட்சியிலிருந்து கட்சி தாவினர். இலங்கையும் 103 அமைச்சர்கள் கொண்ட பெரும் அமைச்சரவையை உருவாக்கிப் பெருமை பெற்றது.

அன்று பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியைக் காத்த ஒரு சிலர் ஐ.தே.கட்சியிலிருந்து கட்சி தாவ், இன்று 18 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற இன்னும் ஒரு சிலர் கட்சி தாவியுள்ளனர். இன்னும் ஒருவர் தாவவுள்ளதாகவும் செய்திகள் வெளிவருகின்றன.

ஏற்கனவே கரு ஜெயசூரியா ஐ.தே.கட்சியிலிருந்து அரசாங்கத் தரப்புக்குத் தாவி பின் வெளியேறி வந்து மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

1964 இல் சி.பி.டி.சில்வா குழுவினரின் கட்சித்தாவல் நேரெதிரான ஒரு கொள்கையுடைய ஒரு கட்சிக்கு ஆதரவு கொடுத்தமையாகும். அன்று அவர்கள் ஆட்சியைக் கவிழ்த்த அதே வேளையில் தங்களையும் தங்கள் சொந்தக் கொள்கைகளையும் விற்றவர்களாகவே கருதப்பட்டனர்.


இன்று கட்சி தாவுகின்றவர்களுக்குக் கொள்கை பற்றிப் பிரச்சினை இல்லை. ஒரே கொள்கையுடைய இரு கட்சிகளுக்கிடையே வாரோட்டம் நடத்துகிறார்கள். இவர்கள் விற்பவர்களல்ல. பதவி, அதிகாரம், பணம் எனப்பலவற்றை வாங்குபவர்களாகவே கருதவேண்டியுள்ளது.

எப்படியிருப்பினும் விகிதாசாரத் தேர்தல் முறையில் பிரதானமான கட்சிகளுக்கே வாக்களிக்கப்படுகிறது. விருப்புவாக்குகள் என்பன இரண்டாம் பட்சம்தான். எனவே ஒருவர் ஒரு கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்று விட்டு இன்னொரு கட்சியில் இணைவது தன்னைத் தெரிவு செய்யும் மக்களுக்கு இழைக்கும் துரோகம் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கையில் ஜனநாயக மரபுகள் அவமதிக்கப் படுவதுஒரு தொடர்கதையல்லவா? ❋❋❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 132



அனுப்புபவர் பெயர்:.......................................................

விலாசம்:.......................................................

.......................................................

கையொப்பம்:.......................................................

### இடமிருந்து வலம்

1. பிரதிக்ஞை.
4. எங்களுடையது.
7. பிறப்பால் கிட்டும்.
8. பிரயாணம்/ பல இடங்களுக்கும் பயணம் செய்தல்.
9. கீர்த்தி கூறல்.
11. பிணக்குப்படல்/ சர்ச்சையிடல்.
14. மஜ்னு மனம் கவர்ந்தவள்.
15. நோவு.
16. பிழை அல்ல.
17. இறத்தல்.
19. நவீன/ பழைய அல்ல.
20. அறுசுவைகளுள் ஒன்று. உறைப்புத் தருவது.
21. சினேகிதன்.
22. யானைக்கு விசேட உறுப்பு.
23. ஒருதானியம்.

### மேலிருந்து கீழ்

1. மேனகைக்கும் விசுவாமித்திரனுக்கும் பிறந்தவள்
2. பன்மைத் தன்மையைக் குறிப்பது.
3. இது ஒரு வாத்தியக் கருவி. நாண் (இழை) கொண்டது.
4. ஏமாற்றுபவன்.
5. சுவர்.
6. பெரியவன்/ எஜமான்/ தலைவன்.
8. இதுவும் ஒரு இழைக் கருவியே.
10. கருமை நிறமுடையதைக் குறிப்பது.
12. பண்பாடு/ நாகரீகம்.
13. தாய்க்கு மூத்தவள்.
16. கணவன்/ மனைவி.
18. இளைய சகோதரன்.
19. காயம்.
20. கேட்கும் உறுப்பு.
21. ஆபரணம்.

### போட்டி விதிகள்

1. *வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
2. *ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
3. *உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
4. *போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.*
5. *வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
6. *பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 132**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 13.10.2010 ஆம் திக திக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*

7. *சொற்சிலம்பம்போட்டி இல.132இல் வெற்றிபெறுவோர் களது விவரம் 17.10.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படு வதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத் துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலா னோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவ தால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 130 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)மகத்துவம்.(6)துணி.(7) ருசி.(8)கல.(9)சாதனம். (10)மடம். (11)ரம். (12)புதன்.(15) கனிதல். (17)நடிகர்.(19)தகனம்.(20)தமது.(22)கரும்பு.(23)திரு.

### மேலிருந்து கீழ்

(1)மதுசாரம். (2) கனிதம் (3) துரும்பு. (4) வசி. (5)புலம்பல்.(8)கட. (10) மன்னி. (13) தகர். (14)கடினம். (16) தருமதி. (18)கம்பு. (19)தக. (21)துரு.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 130 இற்கான சரி யான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **பி. சாந்தரூபன்,** கரைச்சி வ.ப.சு. சங்கம், பரந்தன், கிளிநொச்சி.

2 ஆம் பரிசு — **ச. கேமாயினி,** கந்தன் அருள், இருபாலை வீதி, இருபாலை கிழக்கு.

3 ஆம் பரிசு — **க. சாந்தசோதி,** சோதி வீதி, தையிட்டி, காங்கேசன்துறை.

4 ஆம் பரிசு — **திருமதி து. சிவலிங்கம்,** இல:78, கலட்டி அம்மன் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

5 ஆம் பரிசு — **மு. ஜெயமுராரி,** மடத்தடி, பலாலிவீதி, உரும்பிராய்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **செல்வராசா ராகுல்,** புலோப்பளை கிழக்கு, பளை, கிளிநொச்சி.

2) **வி. அரிசன்,** செம்பாடு வீதி, துன்னாலை, கரவெட்டி.

(3) **பிலோமினா அமிர்தநாதன்,** 76/2 கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத் தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# பாதசரம்

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*அந்த ஒரு கணப்பொழுதிற்குள் அங்கே எழுந்த மரண ஓலம் அந்தக் கிராமத்தின் பொங்கும் கடலலைகளின் இரைச்சலையும் மேவி எதிரொலித்துக் கொண்டிருந்தது. கண்மூடி விழிப்பதற்குள் எல்லாமே நடந்து முடிந்து விட்டன.*

*மரங்களில் தொங்கிக் கொண்டிருந்த மாணவர்களின் சடலங்கள்... சிதறி எறியப்பட்டு உருக்குலைந்துபோன புத்தகப்பைகள்... செங்குருதி ஊறிச் சிவந்த வெண்ணிற ஆடைகள்... பத்தினி அம்மன் கோயில் சுவரில் ஒட்டியிருந்த தசைத்துண்டங்கள்... கோயில் சுவரில் சிதறப்பட்டிருந்த இரத்தக் கறைகள்...! என்று ஒரு போர்க்களத்தையே அந்தப் பிரதேசம் நினைவூட்டியது.*

*தமது வீடுகளில் இருந்து பெரும் ஆவலுடன் பள்ளிக்குப் புறப்பட்டு வந்த பிள்ளைகளின் சாக்காடாக அன்று நாகர் கோயில் மண் காட்சி அளித்துக் கொண்டிருந்தது.*

*இருபத்திநான்கு மாணவர்களைப் பலிகொண்ட அந்தக் கோரச் சம்பவத்தில், காயப்பட்டவர்களையும், குற்றுயிராய்த் துடித்துக் கொண்டிருந்தவர்களையும் மீன் லொறிகளிலும், தனியார் தட்டிவான்களிலும் ஏற்றி அம்பன் வைத்தியசாலைக் கும், மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கும் கொண்டு வந்து சேர்த்தனர்.*

*அந்தக் கிராமத்து இளைஞர்கள் துரிதமாகவும், புத்தி சாலித்தனமாகவும் செயற்பட்டதால் தான் நூற்றுக்கணக் கான உயிர்களைக் காப்பாற்றக்கூடியதாக இருந்தது.*

*"அண்ணை....! என்னை ஒருக்கால் விட்டியள் எண்டால் உடனே பார்த்துவிட்டு வந்துவிடுவேன்... பிந்திப் போனால், பஸ்சைப் பிடிக்க முடியாது...."*

*சிவரூபன் அழாக் குறையாகக் கெஞ்சிக் கொண்டு நின்றது அந்த 'வாச்சரின்' மனதை இளக வைத்திருக்க வேண்டும்.*

*"சரி .... சரி... கெதியாப் போயிற்று வாங்க... டீஎம்ஓ ஐயா கண்டால், எனக்குத்தான் பேசுவார்..."*

*"வாச்சர்' விடை கொடுத்ததும் 'விறு விறு' என்று நடந்து சென்ற சிவரூபனின் கண்கள், ஆறாம் வாட்டில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த சுதர்சினியைத் தேடிக் கொண்டிருந்தன.*

*"அண்ணன்... இங்கை வாங்க... பிள்ளை இந்தக் கட்டில்லைதான் படுத்திருக்குது..."*

*சுதர்சினியின் கட்டிலுக்கு அருகில் நின்ற தாய் பார்வதி யின், குரலைக் கேட்டதும், அந்தக் கட்டிலை நோக்கிச் சென்றான்.*

*கண்களை மூடியபடி, முகம் மட்டும் திறந்த நிலையில், வெள்ளை பெட்சீற்றினால் போர்த்துக்கொண்டு படுத்திருந்த சுதர்சினியைக் கண்டதும், சிவரூபனின் கண்கள் கலங்கிக் கொண்டு வந்தன!*

*அந்தச் சிறுமியின் முகம், அன்றலர்ந்த தாமரைபோல், வெள்ளைத் துணிக்குள் புதைந்து கிடந்தது!*

*'பிள்ளைக்கு எங்கை காயம்?.... கொழும்பாலை வந்ததும், கேள்விப்பட்டு உடனை வாறன்..... இப்ப என்ன மாதிரி.... சுகமே....?"*

*வந்து சேர்ந்த அவசரத்தில் அடுத்தடுத்துக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தான்.*

*கட்டிலில் படுத்திருந்த சுதர்சினியைப் போர்த்தியிருந்த வெள்ளைத் துணியை பார்வதி மெதுவாக எடுத்தாள். அதைப்பார்த்து அதிர்ந்து போன சிவரூபனின் கண்கள், சுதர்சினியின் இடுப்புக்குக் கீழ் நிலைகுத்தி நின்றன.*

*"ஐயோ!..... கடவுளே!....... என்ன கொடுமை இது? இந்தப் பிள்ளை என்ன பாவம் செய்தது?" அவன், வைத்தியசாலைச் சூழலையும் மறந்து 'ஓவென்று' கதறியழத் தொடங்கிவிட்டான்.*

*கட்டிலுக்கு அருகில் நின்ற பார்வதி, சேலைத் தலைப்பி னால் வாயை மூடிக்கொண்டுவிக்கி விக்கி அழுது கொண்டி ருந்தாள்... சுதர்சினியை வார்ட்டில் சேர்த்த நாளில் இருந்து, பார்வதி சரியான தூக்கமோ, உணவோ இன்றி, அழுதழுதே அவளுடைய முகம் வீங்கிப்போய் இருந்தது.*

*"வெறும் முண்டம்" என்று சொல்வார்களே? அதுபோல், அந்தச் சிறுமியின் இரண்டு கால்களும்,முழங்காலுடன் துண்டிக்கப்பட்ட நிலையில் படுத்திருந்ததைக் கண்டதும் சிவரூபன் பேயறைந்தவன் போல் நின்றான்.*

*நாகர் கோயிலின் வெண்மணற் பரப்புகளில் ஆடிப்பாடித் திரிந்த அந்த அழகான இளங்குருத்து, இன்று இரண்டு கால்களையும் இழந்து ஒரு புழுவைப் போலக் கட்டிலில் படுத்திருந்தது.*

*அங்கே ஏற்பட்ட சலசலப்பில், சுதர்சினி விழித்துக் கொண்டு விட்டாள்!*

*'ஹாய்!..... அங்கிள்!....எப்ப வந்தீங்க? இண்டைக்குத் தான் என்னைப் பார்க்கவாறீங்க என்ன....?"*

*சிவரூபனைக் கண்டதும் ஆவலுடன் எழுந்திருக்க முயன்ற சுதர்சினியால் எழுந்திருக்க முடியவில்லை!*

*"சுதா! என்னம்மா? இப்ப எப்படி சுகமா? அங்கிள் வெளியூர் போயிருந்ததாலை உடனே வரமுடியாது போய்விட் டது"மனதில் எழுந்த துயரத்தை அடக்கியபடி சம்பிரதாயத் துக்காக அவளுடன் சில வார்த்தைகளைப் பேசினான். துயரத் தினால் அவனுடைய தொண்டை அடைத்துக் கொண்டது.*

*"ஓம்..... அங்கிள்! எனக்கு இப்ப நல்ல சுகம். எப்போ வீட்டை போகப்போறனோ தெரியவில்லை... கெதியா பள்ளிக்கூடத்திற்குப் போக வேணும் போலக்கிடக்கு....."*

*தண்ணீர் குவளைக்குள் மாபிள் குண்டைப்போட்டுக் குலுக்கியது போல் 'கலகல' என்று கதைத்துக் கொண்டிருந்தாள். தன்னுடைய எதிர்காலத்தில், அவள் சந்திக்கப் போகின்ற அந்தத் துயர வாழ்வையும் மறந்து சிரித்துக் கொண்டிருந்தாள்!.....*

*"பிள்ளை!... சுதர்சினி!.... இந்தாங்க இந்தக் குளிசையை போடுங்க....!"*

*மத்தியான வேளைக்கான மருந்துகளைக் கொடுத்துக் கொண்டு வந்த தாதி, சுதர்சினிக்கு அருகில் வந்து உடல் வெப்பநிலையைப் பரிசோதித்துக் குறித்துக் கொண்டபின், மருந்து மாத்திரைகளைக் கொடுத்தாள்.*

*அந்த வைத்தியசாலையில் வேலைசெய்கின்ற டொக்டர்கள், [illegible] எல்லோருக்கும் அவள் மீது ஒரு அலாதியான அன்பு. அங்கே எவர் வந்தாலும் ஏதாவது கதைத்துக்கொண்டு, நின்று விட்டுத்தான் போவார்கள். அந்த அளவுக்கு அவளுடைய கதையும், பாட்டும், சிரிப்பும் எல்லோரையும் கவர்ந்திழுக்கும்.*

*"என்ன சுதர்சினி!..... இண்டைக்கு உங்கடை பாட்டைக் கேட்க முடியவில்லை..."*

*சுதர்சினிக்கு அருகில் நின்ற தாதி, அவளுடைய தலையை வாஞ்சையுடன் தடவிக்கொண்டு நின்றாள். அதற்கு அவள், தன்தலையைச் சாய்த்து ஒரு மெல்லிய சிரிப்பை மட்டும் உதிர்த்து விட்டு, அங்கே நின்றவர்களை மாறிமாறிப் பார்த்தாள்.*

*"அம்மா!.... கனடாவிலிருந்து மாமாவின்ரை கடிதம் வந்ததோ?....." எதையோ நினைத்துக் கொண்டவள் போல், திடீரெனத் தாயைப் பார்த்துக் கேட்டாள்.*

*"ஓம்..... பிள்ளை!... முந்தநாள்தான் வந்தது. உன்னைப் பற்றித் தான் சுகம் விசாரித்து எழுதியிருக்கிறார்...." தாயின் பதிலைக் கேட்டதும் அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது.*

*"அது சரி அம்மா!.... மாமா எனக்கு வெள்ளிக் கால்சரம் செய்விக்கிறதுக்குக் காசு அனுப்புறன் என்று போனமுறை கடிதத்தில் எழுதியிருந்தவர்...அதை இன்னும் அனுப்ப வில்லையோ?......."*

*அமைதியாகப் படுத்திருந்த சுதர்சினியின் அந்தத் திடீர்த் தாக்குதலால் அங்கே நின்ற மூவரும் ஒரு கணம் அதிர்ந்து போய் நின்றனர்.*

*வெள்ளிப்பாதசரம்"...... அந்த அழகான கால் அணி கலனை அவளால் எந்தப் பாதத்திற்குத்தான் போட்டு அழகு பார்க்க முடியும்?*

*"ஏன் பிள்ளை!...... இப்ப அதைக் கேட்கிறாய்?...... நீ சுகப்பட்டு, வீட்டை போன பிறகு பார்ப்பம்.... உனக்கு நிறையக் காப்பு, அட்டியல், சிமிக்கி எல்லாம் செய்து தருவான்....."*

*பாதசரத்தை மட்டும் அவனால் எப்படிச் செய்து கொடுக்க முடியும்.*

*மௌனமாக நின்று அழுது கொண்டிருந்த பார்வதியின் நெஞ்சு வெடித்துக் குமுறியது.*

*"ஏனம்மா?..... எனக்கு இரண்டு காலும் இல்லையென்று யோசிக்கிறியளோ? மாமா எழுதின மாதிரி அந்தக் காசை அனுப்பினால் கால்சரங்களைச் செய்வித்துத் தாருங்கோ...."*

*அந்தச் சிறுமியின் ஒவ்வொரு வார்த்தைகளும் அங்கே நின்றவர்களையும், அருகே உள்ள கட்டில்களில் படுத்திருந் தவர்களையும் சம்மட்டியால் அடிப்பது போல் இருந்தது.*

*"அம்மா!..... எனக்குச் கால்சரம் செய்து தந்தால் போடேலாது என்று நினைக்கிறியளோ?.... ஊரில அண் ணாக்கள் பொய்க்கால் போட்டுத் திரியிற மாதிரி நானும் போட்டதுக்கு பிறகு. அதுக்குப் போட்டால் நல்ல வடிவாய் இருக்கும் தானே?.........ஹி.........ஹி.........."*

*சுதர்சினி எல்லோரையும் பார்த்துக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்துக் கொண்டு இருந்தாள்.*

*அந்தக் கணப் பொழுதில் அங்கே நிலவிய மயான அமைதி யில், அந்த வார்ட்டில் இருந்தவர்களின் இதயங்கள் குருதிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தன.*

*ஆம்!....அந்தச் சின்னஞ் சிறு பெண்ணின் நெஞ்சுறுதியும், தன்னம்பிக்கையும் அவளுடைய சிரிப்பின் ஊடாகக் காற்றிலே பரவிக்கொண்டிருந்தன.* ★★★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கப்பல்சேவை இடைநிறுத்தம்: மூதூர் - திருமலை மக்கள் சிரமம்

திருகோணமலை, ஒக்.03

மூதூர் - திருகோணமலை கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகின்றனர். இந்தக் கடல் வழிப்பாதையில் சேருவில 11 கப்பலும், மாதுமைப் படகும் சேவையில் ஈடுபட்டு வந்தன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மாதுமைப் படகு பழுதடைந்தமையால் அதன் சேவை இடைநிறுத்தப்பட்டது. இதையடுத்து ஒகஸ்ட் 7ஆம் திகதி சேருவில 11 கப்பலும் பழுதடைந்து விட்டது. எனவே இரு சேவைகளும் நிறுத் தப்பட்டமையால் கடல்வழிப் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டு விட்டது.

இதனால் பொதுமக்கள், அரச ஊழியர்கள், வர்த்தகர்கள் ஆகியோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடல்வழிப் பயணத்தை மேற்கொண்ட மூதூர் - திருகோணமலை மக்கள் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாகத் தரைவழிப் பயணத்தை சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொள்கின்றனர்.

சேருவில 11 கப்பல் மூலமாக சுமார் 200 இற்கும் அதிகமான பயணிகளும், மாதுமைப் படகு மூலமாக சுமார் 80இற்கும் அதிகமான பயணிகளும் பயணத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

மூதூரிலிருந்து சிரமங்களுக்கு மத்தியில் மூன்று துறைகளான இறால்குழி, கங்கை,உப்பாறு ஆகிய இடங்களில் சேவை யிலீடுபடும் மிதவைப் படகுகள் மூலம் மக்கள் போக்கு வரத்துச் செய்துள்ளனர்.

எனவே, குறித்த கப்பலை மிக விரைவில் சீர் செய்து சேவையில் ஈடுபடுத்துமாறு மூதூர் - திருகோணமலை மக்கள் சம்பந்தப்பட்டவர்களை வலியுறுத்துகிறார்கள். (ளி)

# கிழக்கு சுகாதார திணைக்களத்துக்கு தேசிய உற்பத்தித்திறன் விருது



பன்குளம், ஒக்.03

2009ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கல் விழா கடந்த புதன்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

தொழில் கூட்டுறவு உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் விருது வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகப் பிரதமர் டி.எம். ஜயரத்ன கலந்துகொண்டார்.

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கான விருதை கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அதிகாரி எம்.தேவராஜன், தொழில் உற்பத்தி அமைச்சர் காமினி லொக்குஹேயிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

இதன்போது கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஈ.ஜி.ஞானகுணாளன் பாராட்டுச் சான்றிதழை அமைச்சரிடமிருந்து பெற்றுக்கொண்டார். (ளி)

# நீதிவானை அவமதித்த கான்ஸ்டபிள் சேவையிலிருந்து இடைநிறுத்தம்

கொழும்பு,ஒக். 03

நீதிவானை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்துக் கூறப்பட்டவை வரு மாறு:-

ஹற்றன் நகரில் மீன் விற்பனை செய்த வாகனமொன்றுக்கு அருகில் சென்ற கான்ஸ்ட பிள் மோசமான வார்த்தைப் பிர யோகத்தினை மேற்கொண்டுள் ளார்.

அவ்விடத்தில் நீதிவான் ஒருவர் இருப் பது குறித்து பொது மகன் ஒருவர் குறிப்பிட்ட கான்ஸ்டபிளுக்கு அறிவித்துள்ளார்.

எனினும் குறித்த பொலிஸ் கான்ஸ்ட பிளோ நீதிவானை அவமதிக்கும் வகையில் வார்த்தைகளைப் பிரயோகித்துள்ளார்.

இது தொடர்பாக நீதிவான் பொலிஸ் உயரதிகாரிக்கு அறிவித்தார். இதையடுத்து குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் தற்காலிகமாக சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டார் - எனத் தெரிவிக்கப்பட்டது. நீதிவான் நுவரெலியா, பகுதியைச் சேர்ந்தவர். (ளி)

# ஏற்பூசியால் உடலில் அரிப்பு 5மாணவர் வைத்தியசாலையில்

கொழும்பு, ஒக்.3

உடுநுவர - பம்பரதெனிய பிரதேச வைத்திய நிலையமொன்றில் ஏற்பூசி ஏற்றப்பட்ட பின்னர் உடலில் அரிப்பு ஏற்பட்டதன் காரணமாக ஐந்து மாணவர்கள் பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என மத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் திருமதி சாந்தி சமரசிங்க தெரிவித்தார். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கும் மாணவர்கள் ஐவரும் 12 - 15 வயதுக்கு உட்பட்டவர்கள் - என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.




# திருமலை வைத்தியசாலை குறைபாடுகளுக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் சுபைர் உறுதி

திருகோணமலை, ஒக்.03

திருகோணமலை பொது வைத்தியசாலை யில் நிலவும் குறைபாடுகள் விரைவில் தீர்த்து வைக்கப்படும் என கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர், தம்மைச் சந்தித்த மேற்படி வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவிடம் வாக்குறுதி அளித்துள்ளார்.

இச்சந்திப்பு கடந்த வியாழக்கிழமை இடம்பெற் றது. இக்குழுவால் பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன:

* பொதுவைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்றையாவது பெற்றுத்தரல்.
* அத்தியாவசியமான மருந்துகளின் தட்டுப்பாட்டை நீக்குதல்.
* விசேட வைத்தியசேவைகள் (கிளினிக்) நடைபெறும் நாள்களில் சிற்றூழியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
* வைத்திய உத்தியோகத்தர்களுக்கும், தாதிய உத்தியோகத்தர்களுக்கும் விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பனவே அக்கோரிக்கைகளாகும்.

இக் கோரிக்கைகளுக்குத் தீர்வு காணத் தாம் துரித நடவடிக்கையை எடுப்பார் என இதில் அமைச்சர் குழுவினரிடம் உறுதிய ளித்துள்ளார். (ளி)

# ஹப்புஹஸ்தன்னை தோட்டத் தொழிலாளர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு தீர்மானம்

மஸ்கெலியா, ஒக்.3

மஸ்கெலியா பிளாண் டேஷனுக்குச் சொந்தமான ஹப்புகஸ்தன்னை தோட்டத் தைச் சேர்ந்த தொழிலாளர்கள் எதிர்வரும் 15 ஆம்திகதி முதல் பாரிய பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போகின்றனர் என அறிவித்துள்ளனர்.

மேற்படி தோட்டத்தின் மூன்று பிரிவுகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் கடந்த மே மாதம் தொடர்ச்சியாக 25 நாள்கள் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டிருந்தனர்.

தோட்ட முகாமையாளரின் இனவாதப் போக்கு, தொழிலாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாமை, நாளொன்றுக்கு 19 கிலோ தேயிலைக் கொழுந்து பறிக்கவேண்டும் என தொழிலாளர்களை நிர்ப்பந்தித்தமை போன்ற விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே போராட்டம் நடத்தப்பட்டது.

தொழிலாளர்களின் போராட்டத்தை முகாமையாளர் அலட்சியப்படுத்தினார். தொழிற்சங்கங்களும் தொழிலாளர் பக்கம் நிற்கவில்லை. தொழிற்சங்கங்களின் செயற் பாட்டால் விசனமடைந்த தொழிலாளர்கள் குறிப்பிட்ட தொழிற்சங்கங்களிலிருந்து தமது அங்கத்துவத்தை விலக்கிக் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் தொழிலாளர் விவகாரம் ஹட்டன் தொழில் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. தொழிலாளர்கள் சார்பாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் மத்திய மாகாணசபை உறுப்பி னர் முரளிரகுநாதன் முன்னின்று செயற்பட் டார்.

இதையடுத்து ஜூன் 10 ஆம் திகதி ஹற்றன் தொழில் ஆணையாளர் காரியாலயத்திற்கு வருகைதந்த தோட்ட முகாமையாளர், தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு அதே மாதம் 25 ஆம் திகதி தீர்வுகாணப்படும் என தொழில் ஆணையாளரிடம் உறுதியளித்தார். இதையடுத்து தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியிருந்தனர்.

அதேமாதம் 25 ஆம்திகதி தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற பேச்சுக்கு முகாமையாளர் வருகை தரவில்லை. இதனால் பேச்சு ஜூன் மாதத்திற்கு பிற்போடப்பட்டது. ஜூன் மாதமும் முகாமை யாளர் வரவில்லை. பேச்சு மீண்டும் செப்ரெம்பர் 29ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டது.

தொடரும் இந்நிலை குறித்து முரளிரகு நாதன் தெரிவித்தவை வருமாறு:-

இவ்விடயத்தில் ஹட்டன் தொழில் ஆணையாளர் முகாமையாளர் மீது முறையான நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறில்லாதுவிடின் ஆணையாளரும் முகாமையாளருக்குச் சார்பாக நடக்கின்றார் எனக் கருதப்பட்டு அவ்விருவர் மீதும் மனித உரிமைமீறல் என்ற பேரில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்படி தோட்டத்தில் இயங்கிவந்த தொழிற்சாலை சுமார் பத்து வருடங்களாக மூடிக்கிடக் கிறது. தேயிலைத் தோட்டமும் உரிய பராமரிப்பின்றி காடாகக் காட்சியளிக்கின்றது. எனவே, மேற்படி சகல பிரச்சி னைகளுக் கும் இம்மாதம் 15 ஆம் திகதி தீர்வுகாணப் படாவிட்டால் தொழிலாளர்கள் பாரிய போராட் டத்தில் குதிப்பதைத் தவிர்க்க முடியாது - இப்படி முரளி தெரிவித்தார். (ளி)




# உட்கட்டமைப்பு வசதிகளின்றி தெனியாய நகரவாசிகள் சிரமம்

## கவனிக்குமா கொட்டப்பொல பிரதேசசபை?

தெனியாய, ஒக். 03

கொட்டப்பொல பிரதேசசபைக்கு உட் பட்ட தெனியாய நகரில் நீண்ட காலமாக உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப் படாததால் நகரவாசிகளும், நகருக்கு வந்து செல்லும் பொதுமக்களும் பல்வேறு அசௌ கரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என விசனிக்கின்றனர்.

தெனியாய நகர வர்த்தகர்களிடமிருந்து கொட்டப்பொல பிரதேசசபை பல்வேறு வரிகளை அறவிடுகின்றது. எனினும், அது திருப்திகரமான சேவையை வழங்குவ தில்லை என வர்த்தகர்கள் சுட்டிக் காட்டுகின் றனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப் பட்டவை வருமாறு:-

தெனியாய நகரில் வடிகால் கட்டமைப்பு சீரற்ற நிலையில் உள்ளது. மழைகாலங்களில் நகரம் வெள்ளத்தில் மூழ்கிவிடுகிறது. நகரில் பொது மலசல கூடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. நகருக்கு வரும் பொது மக்களுக்கு குடிதண்ணீரைப் பெறும் வசதியும் இல்லை.

நகரிலிருந்து தெனியாய மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்லும் வீதி மற்றும் தெனியாய பௌத்த விகாரைக்குச் செல்லும் வீதி என்பன நீண்ட காலமாக செப்பனிடப் படவில்லை.

பஸ் நிலையம் அண்மித்த பகுதியில் வடிகான் இல்லாமையால் கழிவுநீர் தேங்கி விடுகின்றது. இதனால் அப்பகுதி துர்நாற்றம் வீசுகிறது.

அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் தரும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படு வதில்லை. எனவே கொட்டப்புலா பிரதேச சபை இது குறித்து நடவடிக்கை எடுக்கவேண் டும் - இப்படி வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. (ளி)

# மின் விநியோகத்திற்காக பெரும் மரங்கள் தறிப்பு

உக்குவளை நீர்மின் உற்பத்தி நிலையத் திலிருந்து குண்டசாலை பகுதிக்கு மின்விநி யோகம் இடம் பெறவுள்ளது.

இதனால் அதிசக்திவாய்ந்த மின் கம்பிகளும், தூண்களும் நடப்பட்டு வேலைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன

இந்த மின்கம்பங்களும், கம்பிகளும் வத்துகாமம், பஹல யட்டவர, இஹ லயட் டார பகுதிகளூடாகவே செல்கின்றன. இதற் கென அப்பகுதியிலுள்ள மிகப் பெறுமதி வாய்ந் தவையும், பயன்தரக் கூடியதுமான மரங்கள் தறிக்கப்படுகின்றன. இதற்கு பிரதேச மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். (ளி)

# கண்டி நகரத்தில் வாழும் மக்கள் சுவாசநோய்க்கு ஆளாகும் அபாயம்

கொழும்பு, ஒக்.03

கண்டியில் அதிகரித்து வரும் வாகனப் புகையால் மக்கள் பல்வேறு சுவாச நோய் களுக்கு இலக்காகும் அபாயம் தோன்றியுள்ளது என பேராதனைப் பல்கலைக்கழக இரசாயனவியல் பேராசிரியர் ஓ.ஏ. இளையப்பெரும எச்சரித்துள்ளார்.

கண்டி நகரில் நெருக்கமான இடங்களில் வாகனங்கள் வெளியேற்றும் புகையால் சூழல் பெரிதும் மாசடைகின்றது.

இதனால் "பாதுகாப்பான சுற்றாடலை உருவாக்க வழி வகுப்போம்" என்ற திட்டத்தின் கீழ் மத்திய மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயம், மாநகரசபை, பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் 'ஹைபிரைட்' தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவை ஒன்றி ணைந்து நடத்திய நிகழ்வொன்றில் உரை யாற்றியபோதே பேராசிரியர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கண்டி நகரில் சூழல் மாசடைவது பற்றி நான் பல வருடங்களாக ஆராய்ந்து வந்துள்ளேன். வாகனங்களிலிருந்து வெளியேறும் நச்சுக் புகையைச் சுவாசிப்பவர்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகிறார்கள்.

நச்சுவாயுவை தவிர்ப்பதற்காக பொதுமக்கள் மூக்குக்கவசங்களை அணிவது உசிதமென எனக்குத் தோன்றுகிறது. எனி னும், அது சாத்திய மற்றது - இப்படி பேராசிரியர் குறிப்பிட் டார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## ஒக்ரோபர் 03 முதல் ஒக்ரோபர் 09 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

இந்த வாரம் உற்சாகமாகச் செயல்படுவீர்கள். திட்டமிட்ட வேலைகளை சரியான நேரத்திற்கு முடித்துக் கொள்வீர்கள். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். அதே நேரத்தில், குடும்ப உறுப்பினர்கள் சிலரின் செயல்பாடுகளால் எரிச்சல் அடைவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். சிலரிடம் கடனுதவி பெறலாம். கொடுத்த வாக்கை காப்பாற்ற கடும் பிரயத்தனம் மேற்கொள்வீர்கள். கட்டண மீதிகளைச் செலுத்துவீர்கள். நீதிமன்றம் தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். அரசாங்கம், அதிகாரிகள், அரசியல்வாதிகள், மருத்துவம் தொடர்பான அனுகூலமும் உண்டு. இருந்தாலும், பணிபுரிவோர் சிறு, சிறு பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம். அடிக்கடி பொறுமை இழந்து மற்றவர்களிடம் சண்டை போடும் சூழ்நிலை உருவாகும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும். சகோதர, சகோதரிகள் வழியில் செலவு, அலைச்சல் நேரலாம். அவர்களுக்காக நீங்கள் உதவி செய்யும் சூழ்நிலை உருவாகும். விவசாயம், நிலம், பூமி விவகாரங்கள், பொலிஸ் தொடர்பான விடயங்கள், கடன் பிரச்சினைகள் போன்றவற்றால் மன அமைதி பாதிக்கப்படலாம். இடையூறுகளையும் சந்திக்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். பணவரவுகளைப் பெறலாம். காரிய வெற்றி உண்டு. அலைச்சல்களுக்கு ஆள்படலாம்.

### இடபம்

இந்த வாரம் சில காரியங்களுக்கோ, பொருட்கள் வாங்கவோ எதிர்பார்த்ததை விட பல மடங்கு செலவிடலாம். தேவையற்ற அலைக்கழிப்புக்கு ஆள்படலாம். குடும்பத்திற்கு தேவையானதை வாங்கிக் கொடுக்கலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். சிலர் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். மனதை குடைந்து கொண்டிருந்த சில பிரச்சினைகள் முடிவுக்கு வரும். பெண்கள் வழியில் உதவிகள் கிடைத்து பெருமை அடைவீர்கள். குழப்பம், சஞ்சலம், நிம்மதி குறைவு போன்றவற்றுக்கு அடிக்கடி ஆளாகலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அலைக்கழிப்புக்கு ஆள்படலாம். எதிர்பாராத குறுக்கீடுகள், இடையூறுகள், செலவுகளால் சிரமப்படலாம். அரசாங்கம், அரசியல்வாதிகள், அதிகாரிகள், வேலையாள்கள், தகப்பனார் தொடர்பான வகையில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனங்கள் வழியிலும், திடீர் பயணங்கள் செல்வதாலும் செலவுகள் ஏற்படலாம். கணவன் மனைவி உறவிலும் சிறு மனஸ்தாபம் ஏற்படலாம். மனைவி, குழந்தைகள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பணவரவைப் பெறலாம்.

### மிதுனம்

இந்த வாரம் ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். புதிய பொருட்கள் வாங்கலாம். அடகு வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். நண்பர்களுடன் சந்தோஷமாக பொழுதுபோக்குவதில் நாட்டம் செல்லும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். திட்டமிட்ட வேலை ஒன்றை முடிக்க முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்கு படிக்காத சில காரியங்களைச் செய்து அதிருப்திக்கு ஆளாவீர்கள். வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். கடின உழைப்பால் அடிக்கடி வெறுப்பு, விரக்தி ஆட்கொள்ளும். அரசாங்கம், அரசியல், மருத்துவம் தொடர்பான விடயங்களில் தடுமாற்றங்கள், சிரமங்கள் நேரும். உத்தியோகம், தொழில், விவசாயம் போன்ற விடயங்களில் உழைப்புக்கேற்ற பலன் கிடைப்பது கடினம். இருந்தாலும், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். தரகு, தொழில் புரிவோர் கூடுதல் ஆதாயம் பெறும் சூழ்நிலை உருவாகும். சுக்கிரன் ஆட்சிப் பலத்துடன் சாதகமாக இருப்பதால், உறவுப் பெண்கள் வழியிலும், இதர பெண்கள் வழியிலும் உதவிகள் கிடைக்கலாம். பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்களால் கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். விரும்பிய ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். சகோதரர்கள் விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும்., உற்சாகமாகச் செயல்படுவீர்கள். நீண்ட நாள்களாக மனதில் நினைத்த திட்டம் நிறைவேறும். செலவு, அலைச்சல் உண்டு.

### கடகம்

இந்த வாரம் அலைச்சல்கள், சிரமங்கள் இருந்தாலும் உருப்படியான வகையில் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். கடன் மீதிகளைச் செலுத்துவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். சந்தோஷமான அனுபவங்களால் சங்கடங்களை மறப்பீர்கள். மற்றவர்கள் செலவில் உங்களின் தேவைகள் நிறைவேறலாம். திட்டமிட்ட வேலைகளைத் தடங்கலின்றி சரியான நேரத்திற்கு முடித்துக் கொள்வீர்கள். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் முன்னேற்றம் காணப்படும். அரசாங்கம், அரசியல், மருத்துவம், அதிகாரிகள், தகப்பனார் தொடர்பான வகையில் அனுகூலம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் அகன்று பாசம் அதிகரிக்கும். அரசு அதிகாரிகள் மூலம் மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பொழுது போக்கு விடயங்களாலும், கேளிக்கை கொண்டாட்டங்களாலும் சந்தோஷம் அடைவீர்கள். பெண்கள் வகையில் உதவிகள் கிடைக்கலாம். நிலம் தொடர்பான விடயங்கள், கட்டடப் பணிகள், விவசாயப் பணிகள் போன்றவற்றில் அலைச்சல், உண்டாகும். மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும்.

### சிங்கம்

இந்த வாரம் எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். சில பிரச்சினைகளால் கோபம் அதிகரிக்கலாம். உடல் உபாதைகளால் உற்சாகம், குறையும். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். விருந்து, விசேஷங்களால் சந்தோஷம் உண்டு. நல்ல பல காரியங்கள் நடக்கலாம். சில வேலைகளுக்காக முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். பணவரவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. விருந்தினர்கள் வருகை உண்டு. பணம் கொடுக்கல் வாங்கல்களில் குளறுபடிகள் நேரலாம். குடும்ப உறுப்பினர்கள் இடையே கோபதாபங்கள் ஏற்படலாம். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவதைத் தள்ளி வைக்கலாம். தகப்பனார் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் வீண் பேச்சுக்களைத் தவிர்ப்பது நன்மை தரும். போட்டிகள் விலகும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். வேலைப்பளு குறையும். உங்களின் சில வேலைகளை மற்றவர்கள் மூலம் முடித்துக் கொள்வீர்கள். சகோதர, சகோதரிகள் உதவி கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். பொழுதுபோக்கு விடயங் கள், விருந்து உபசரிப்புகள் போன்றவற்றாலும் நிம்மதி பெறலாம். பெண்கள் பிறந்த வீட்டின், உடன் பிறப்புக்களின் உதவிகளைப் பெறலாம். ஆதாயகரமான பணவரவு, பொருள் வரவு களைப் பெறலாம். அலைச்சல் உண்டு.

### கன்னி

இந்த வாரம் எதிலும் பொறுமை, நிதானமாக செயல்பட வேண்டும். திட்டமிட்ட காரியங்களில் தடை ஏற்பட்டு எரிச்சல் அடையலாம். உறவினர்கள், குடும்ப உறுப்பினர்களுடன் கோபதாபங்கள் ஏற்படலாம். புதிய அனுபவங்களைப் பெறலாம். சில விடயங்கள் பற்றி பெரிய அளவில் மனக்கோட்டை கட்டுவீர்கள். ஒரு வகையில் வந்த வரவுகளை மற்றொரு வகையில் செலவாகும். உடல் நலத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டும். தேவையற்ற அலைச்சல்கள், இடையூறுகளால் மன அமைதி பாதிக்கப்படலாம். மற்றவர்களின் குறைகள், விமர்சனங்களுக்கு ஆள்படலாம். தந்தை - மகன் உறவில் சில பிரச்சினைகள் உருவாகலாம். அரசியல்வாதிகள் முன்னேற்றத் தடைகளைச் சந்திக்கலாம். இருந்தாலும் பிரச்சினைகளை சமாளிக்கும் வல்லமை கூடும். கணிசமாக பணம் வரும். பணத்தை எதிர்பார்த்து செய்யும் காரியங்களும் அனுகூலமாக முடியும். கடன் வசூலிப்பு முயற்சிகள் பலன் தரும். குடும்ப உறுப்பினர்கள், மனைவி, குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். உறவுப் பெண்கள் உதவிகரமாக இருப்பர். இருந்தாலும், சூடான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். மற்றவர்களை நம்பி யாருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். காரிய வெற்றி உண்டு. பணவரவுகளைப் பெறலாம். [illegible]

### துலாம்

இந்த வாரம் புதியவர்களின் சந்திப்பு, இனிய பயணங்கள், இன்பமான அனுபவங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். குடும்பத்தினரைத் திருப்திப்படுத்த கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். எந்த விடயத்திலும் தீர்மானமான முடிவு எடுக்க முடியாமல் தடுமாற்றம், திட்டமிட்ட காரியங்களில் தடை, உடல் உபாதைகளால் உற்சாகம் குறைதல், கடும் வேலை நெருக்கடி, தண்டச் செலவு போன்றவற்றைச் சந்திக்கலாம். தகப்பனார், அரசியல்வாதிகள், அதிகாரிகள், வேலையாள்கள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், தொழில் ரீதியான நடவடிக்கைகள், இரும்பு இயந்திரங்களைப் பழுது பார்த்தால், பத்திரங்கள் முடித்தல், சிலர் மூலம் காரியங்களை முடித்து அவர்களுக்கு கமிஷன் கொடுத்தல், அரசாங்கத்திற்கு கட்டணம் கட்டுவது, வரி கட்டுவது, உடல் நலத்தை சீர்படுத்த மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்வது போன்ற வழிகளில் செலவுகள் ஏற்படலாம். மனதில் தெம்பு, தன்னம்பிக்கை அதிகரிக்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும். இனிய சுற்றுப் பயணங்கள், விருந்து உபசரிப்புகள், பெண்களால் சந்தோஷம் போன்ற நல்ல அனுபவங்களைப் பெறலாம்.வரும் சில விடயங்களுக்கு எதிர்பார்த்ததை விட அதிகமாகச் செலவாகலாம். சிலரிடம் கேட்ட உதவி கிடைக்கலாம்.காரிய வெற்றி உண்டு.

### விருச்சிகம்

இந்த வாரம் எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உங்களுக்குப் பிடித்தமான பொருள்களைச் சிலர் கொடுக்கலாம். சிரமம் இல்லாமல் எளிதாக சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். வாகன யோகம் கிடைக்கும். உற்சாகமாகச் செயல்படுவீர்கள். நண்பர்கள், பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங் களில் முன்னேற்றமான நிலைமை காணப்படும். சட்டம், நீதிமன்றம் தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். வேலையாள்கள் உதவிகரமாக இருப்பர். இரும்பு இயந்திரங்களை வைத்துத் தொழில் புரிவோர் கூடுதல் ஆதாயம் பெறுவர். அரசு ஒப்பந்தம் பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற் றம் உண்டு. அரசியல்வாதிகள் மேலிடத்தின் செல்வாக்கைப் பெறுவர். தகப்பனாருடன் நல்லி ணக்கம் அதிகரிக்கும். அவர் உங்களிடம் அதிக பாசமாக நடந்து கொள்ளலாம்.மாமன், மைத்து னர்கள், உறவினர்கள், நண்பர்களாலும் ஆதாயம் பெறலாம். அவர்களுக்காக சில நல்ல காரியங் களைச் செய்வீர்கள். சகோதரிகள், நிலம், வீடு பராமரிப்பு, விலை உயர்ந்த பொருள்கள் வாங்குதல், நீண்ட தூரப் பயணங்களால் செலவுகள் ஏற்படலாம். சொந்த விவகாரங்களில் மாற்று மதத் தினரைத் தலையிட அனுமதிக்க வேண்டாம். எதிலும் பொறுமை நிதானம் அவசியம். ஆன்மிக நாட்டம் உண்டாகும்.

### தனுசு

இந்த வாரம் எதிர்பாராத சில செய்திகளைக் கேட்கலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல் அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். உற்சாகமாகச் செயல்படுவீர்கள். திட்டமிட்ட காரியங்கள் தங்கு தடையின்றி நடக்கும். சக ஊழியர்கள், நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். மனதை வாட்டிய கவலைகள் நீங்கி, சந்தோஷம் அடைவீர்கள். கடுமையான வேலை நெருக்கடிகளைக் கொடுக்கலாம். குறித்த நேரத்திற்கு எதையும் செய்ய முடியாமல் தவிக்கலாம். வேலையாள்கள் ஏட்டிக்குப் போட்டியாக செயல்பட்டு எரிச்சல் உண்டாக்குவர். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். கல்வி முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். பொன், பொருட்கள், ஆடை, ஆபரணங்கள் சேரும். வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நிலம் வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. வங்கிகளில் கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். சகோதரர்கள் வகையில் உருவான அலைக்கழிப்புகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். உற்சாகம் கூடும். மறதி, கவனக்குறைவு ஏற்படும்.

### மகரம்

இந்த வாரம் மற்றவர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலையலாம். நடக்காத சில காரியங்களை நினைத்து வெறுப்படைவீர்கள். மற்றவர்களுக்காக செலவு செய்யலாம். குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். பிள்ளைகள் வழியில் திடீர் செலவு உருவாகும். மற்றவர்களின் பேச்சைக்கேட்டு சில காரியங்களில் இறங்குவீர்கள். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். உத்தியோக ரீதியாக பரபரப்பாகச் செயல்படலாம். மற்றவர்களின் வேலைகளையும் சில நேரங்களில் சேர்த்துச் செய்யலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளாலும் அவதிப்படலாம். நிலம், வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் காணப்படும். கடன் பிரச்சினைகளால் ஏற்பட்ட கவலைகள் நீங்கும். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். ஆடம்பரச் செலவுகளை, கேளிக்கை கொண்டாட்டங்களை தவிர்க்க வேண்டும். பழைய வாகனங்களை மாற்றி சிலர் புதிய வாகனங்கள் வாங்கலாம். தகப்பனார் தொடர்பான விடயங்களிலும், அவரின் உடல் நலத்திலும் அதிக கவனம் தேவை. வியாபாரிகள் அதிகாரிகளின் தொல்லைகளுக்கு ஆளாகலாம். மற்றவர்களின் வேலைகளுக்காக அலைவதால் அலுப்பு, ஆட்கொள்ளும். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். பணவரவு உண்டு. உற்சாகம் கூடும்.

### கும்பம்

இந்த வாரம் அலுப்பு, சலிப்பு இல்லாமல் எந்த வேலையையும் சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பீர்கள். கடன் மீதிகள் வரலாம். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளையும் பெறலாம். கலகலப்பான அனுபவங்களால் கவலைகளை மறப்பீர்கள். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். உறவினர்களால் உங்களின் சில காரியங்களில் தடை ஏற்படலாம். வேலை நிலவரம், வருமான நிலவரம் போன்றவற்றில் குறைகள்,பிரச்சினைகள் அடிக்கடி ஊடுருவிக் கொண்டிருக்கும். கால நேரம் பார்க்காமல் கூடுதல் நேரம் வேலை பார்த்தும் அதற்குரிய பலன் கிடைக்காமல் குறைவாக கிடைக்கலாம். உங்களை விமர்சிப்பதையே தொழிலாக கொண்டிருப்பதைப் போல, உறவினர்கள், குடும்பத்தினர் செயல்படலாம். தொழில் ரீதியாக தவறுகள் வராமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம். சொல்வாக்கை காப்பாற்ற முடியாத சூழ்நிலையே பெரும்பாலும் காணப்படும்.அரசாங்கம், அரசியல்வாதிகள், அதிகாரிகள், தகப்பனார், மருத்துவம் போன்ற வழிகளில் சிரமங்கள், உருவாகலாம். இருந்தாலும், மாமன், மைத்துனர்கள், நண்பர்களால் ஓரளவுக்கு அனுகூலம் உண்டு. மனைவி வழி உறவுகள் மூலம் சில காரியங்கள் நடக்கலாம். எதிர்பாராத திடீர் செலவுகள் நேரும். பணவரவு உண்டு

### மீனம்

இந்த வாரம் சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். குடும்பத்திற்கு தேவையான பொருள்கள் வாங்கிக் கொடுப்பீர்கள். நீண்ட நாட்களாக செல்ல நினைத்த உறவினர்கள் சிலரின் வீட்டிற்கு செல்லலாம். பணவரவுகளைப் பெறலாம். பெரிய மனிதர்களின், நண்பர்களின் உதவி கிடைக்கலாம். சில பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். வெளிவட்டார அனுகூலம் உண்டு., அரசாங்கம், தொழில்துறை, உத்தியோகம் போன்றவற்றில் சிரமங்கள், தொல்லைகள் தொடரும். கணவன் அல்லது மனைவி உடல் நிலை பற்றிய கவலைகள் அடிக்கடி ஆட்கொள்ளும். என்ன வாழ்க்கை, ஒரு நிம்மதி இல்லையே என்று மற்றவர்களிடம் புலம்பும் சூழ்நிலை உருவாகும். மற்றவர்களின் செயல்பாடுகளைப் பார்த்து அடிக்கடி ஆதங்கம் அடைவீர்கள். தொழில் புரிவோர் சரியான வேலையாள்கள் கிடைக்காமல் அவதிப்படலாம். பணிபுரிவோர் விரும்பத்தகாத இடமாற்றங்களைச் சந்திக்கலாம். சகோதரர்கள், பங்காளிகள் செயல்பாடுகளால் எரிச்சல் அடையலாம். நில விவகாரங்களும் திருப்தி தருவதாக இருக்காது. கடன் பிரச்சினைகளை நினைத்துக் கலக்கம் அடைவீர்கள். பயணங்கள், பொழுது போக்கு விடயங்களில் அவ்வப்போது ஆறுதல் அடையலாம். தேவையான பணத்தை எந்த வகையிலாவது புரட்டிக் கொள்வீர்கள். வசதி படைத்தவர்கள் பக்கபலமாக இருப்பர். உறவால் செலவு, சிரமம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவமழை ஆரம்பித்ததால் கரைச்சியில் அவலத்தை எதிர்கொள்ளும் குடும்பங்கள்

வட்டக்கச்சி,ஒக்.3

பருவமழை ஆரம்பித்து விட்ட நிலையில் மீள் குடியேற்றப்பட்ட வன்னி மக்கள் நிரந்தர வீடுகள் இன்றி பெரும் அவல நிலையில் வசித்து வருகின்றனர்.

குறிப்பாக கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில் உள்ள கிழக்குப் பிரதேச மக்களே மிகவும் பாதிப்படைந்த நிலையில் எந்த விதமான உதவிகளும் இன்றி வசித்து வருகின்றனர். இவர்கள் தற்காலிக வீடுகள் அமைப்பதற்கு கூரைத் தகரமோ, சீமேந்தோ இதுவரை வழங்கப்படவில்லை. கிளிநொச்சி அரசாங்க அலுவலகத்திற்குட்பட்ட கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி, கரைச்சி செயலகத்தின் மேற்குப் பகுதி ஆகிய பிரதேசங்களுக்கு சீமெந்து கூரைத்தகரம் என்பன வழங்கப்பட்டு வீட்டுத்திட்டமும் வந்துள்ளது. ஆனால் கிழக்குப் பகுதி மட்டும் ஒதுக்கப்பட்ட பிரதேசமாக உள்ளது.

கிழக்குப் பிரதேசத்தில் பன்னங்கண்டி, மருதநகர், மாயவனூர், புதுக்காடு ஆகிய கிராமங்களில் மிகவும் வறிய குடும்பங்களே வசித்து வருகின்றனர். இவர்கள் கூலி வேலை செய்தே தமது குடும்ப வாழ்க்கையை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

மாயவனூர் கிராமசேவை அலுவலர் பிரிவில் இரு கிராம முன்னேற்றச்சங்கங்கள் உள்ளன. அதில் இரண்டாவது பிரிவில் 450 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இங்கு தரம் 1 முதல் தரம் 5 வரையான பாடசாலை ஒன்றும், இரு முன்பள்ளிகளும், ஒரு பொது நோக்கு மண்டபமும் உண்டு. இவைகள் யாவும் கூரைகள் இன்றியே காணப்படுகின்றன.

பாடசாலைக்கு இராணுவத்தினரால் தற்காலிக கூரைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது. அதுவும் தற்போதைய மழையைத் தாக்குப் பிடிக்குமா என்ற ஐயம் எழுந்துள்ளது. இதனால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிப்படையும் நிலையில் உள்ளதாக பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர். இதே போன்றுதான் முன்பள்ளியின் நிலையும் இருப்பதாகவும் சிறார்களை முன்பள்ளிக்கு அனுப்பமுடியாது உள்ளதெனவும் பெற்றோர்கள் பெரும் வேதனையுடன் தெரிவித்தனர்.

கிராம முன்னேற்றச் சங்க தலைவர் நேசராஜா இதுபற்றித் தெரிவிக்கையில்:- இப்பகுதியில் இதுவரை 450 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இதுவரை இரு கூரை விரிப்புக்களும் ஐந்து மரங்கள் என்பன மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டே சிறு கொட்டகையினை அமைத்து இவர்கள் வசித்து வருகின்றனர். ஏனைய பகுதிகளில் வழங்கப்பட்ட கூரைத் தகரமோ சிமெந்தோ இந்தப் பகுதிக்கு வழங்கப்படவில்லை எனவும் தொண்டர் அமைப்புக்கள் மக்கள் படும் அவலத்தைப் பார்வையிட வருவது இல்லை எனவும் தெரிவித்தார்.

இங்கு வசித்து வரும் நாகராசா (வயது 26) கூறுகையில் நானும் மனைவியும் ஒரு மாதக்குழந்தை ஆகியோர் இதில் வசித்து வருகின்றோம். நாம் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின் இரு கூரை விரிப்புகளும், 5 மரமும் தரப்பட்டன. அதனைக் கொண்டு சிறு கொட்டகை அமைத்து வசித்து வருகின்றோம். தற்போது மழை ஆரம்பித்துள்ளது. பணம் கொடுத்து கூரைத்தகரமோ அல்லது கிடுகுகளோ வேண்டி வீடு அமைக்க என்னிடம் நிதி வசதி இல்லை. வீட்டுத்திட்டம் வந்து வீடு கட்டித் தருவார்கள் என இங்கு வசித்து வரும் அனைவருமே எதிர்பார்த்திருக்கின்றனர். ஆனால் இது சாத்தியமா என யோசிக்க வேண்டியுள்ளது.

எமக்கு பணமாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட உடன் கடந்த ஜூன் மாதம் ஒன்பதாம் திகதி 5 ஆயிரம் ரூபா தந்தார்கள். இரு மாதங்களுக்குப் பின் 20 ஆயிரம் ரூபா தந்தார்கள். எமக்குப் பின் வந்தவர்களுக்கு இம்மாதமே இது வழங்கப்பட்டுள்ளது. மிகுதி 25 ஆயிரம் எமக்கு கிடைக்குமா? இதனைத் தந்தால் கூட விலை குறைந்த கூரைத் தகரங்களை வாங்கி சிறு வீடாவது அமைக்கலாம், என்று குடும்பத்தைப் போல் பலகுடும்பங்கள் கைக்குழந்தைகளுடன் தறப்பாலில் கீழ் வசித்து வருவதால் பாம்பு போன்றவற்றிற்குப் பயந்து இரவுப் பொழுதைக் கழித்து வருகின்றோம். எமது நிலைகளை நேரில் வந்து பார்வையிட வேண்டும் என அரச அதிகாரிகளையும் தொண்டர் நிறுவனங்களையும் குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இடம்பெயர்வுக்கு முன் மாயவனூர் பொது மண்டபத்தில் சோளர் பொருத்தப்பட்டு அதில் மிகவும் வறிய மாணவர்களுக்கு மனிதாபிமான முறையில் ஆசிரியர்களினால் இலவசமாக மாலை நேர வகுப்புக்கள் நடத்தப்பட்டன. தற்போது இந்த வகுப்புக்களை நடாத்துவதற்கு மண்டபத்தில் கூரை இன்றி இருப்பதாகவும் மக்கள் தெரிவித்தனர். (க-450)

## மீள்குடியேறிய மக்களுக்கு விவசாய உபகரணங்கள்

மன்னார்,ஒக்.3

மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கருங்கண்டல் கிராமத்தில் மீள்குடியேறி வாழ்ந்து வரும் 40 குடும்பங்களுக்குத் தேவையான விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு (சி.எச்.ஏ.யின்) தலைமையகத்தின் அனுசரணையில் இவர்களுக்கான 40 நீர் இறைக்கும் இயந்திரங்களும், விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்த வைபவத்தில் சி.எச்.ஏ.யின் தலைமையக அதிகாரி சந்திரகுமார், 542 ஆவது படைப்பிரிவின் சிவில் நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் நலிந்தமஹா வித்தாரண, மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பணிமனையின் பிரதம அதிகாரி உட்படப் பெருந்தொகையாக கிராம மக்களும் கலந்து கொண்டனர். (க-80)

## காந்தியின் 141 ஆவது பிறந்த தினத்தில் உருத்திரபுரம் நிலையத்தில் முப்பெரும் விழா

கிளிநொச்சி,ஒக்.3

மகாத்மா காந்தியின் 141 ஆவது பிறந்த தினத்தையொட்டி காந்தி பிறந்த தின விழாவும், சர்வதேச அகிம்சை தினவிழாவும், காந்தி நூலகத் திறப்பு விழா ஆகிய முப்பெரும் விழா உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நடைபெற்றன.

உருத்திரபுரம் எட்டாம் வாய்க்காலில் அமைந்துள்ள காந்தி நிலையத்தில் நேற்று மு.ப. 10மணிக்கு கரைச்சிப் பிரதேச சபை யின் விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம் தலைமையில் இந்த விழா நடைபெற்றது. இதில் காந்தி நூல் நிலையத்தை முன்னாள் கிளிநொச்சி அரச அதிபரும் வடமாகாண ஆளுநரின் செயலாளருமான தி.இராசநாயகம் திறந்து வைத்தார். சிறப்புரையை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பொதுச் செயலாளரான வி.ஜி. தங்கவேல் ''உலகம் அமைதிபெற அகிம்சைக் கோட்பாடு வழிகாட்டுமா?'' என்ற தலைப்பில் ஆற்றினார்.

காந்தியின் 141 ஆவது பிறந்த தினத்தையொட்டி காந்தி நிலையத்தின் சுற்றாடலில் 141 பனம் விதைகள் நடப்பட்டன. அத்துடன் போரினால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு நலன்புரித் திட்டமொன்றும் இந்த விழாவின் போது சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. (க-405)




# கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் ஆங்கில தினப்போட்டி முடிவுகள்

கிளிநொச்சி,ஒக்.3

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே வலய மட்டத்தில் நடத்தப்பட்ட இந்த ஆண்டுக்கான ஆங்கில தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியரின் விவரங்கள்.

**மனனம் செய்து ஒப்பித்தல்**

தரம்-3

ரி.சந்துஷா (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), எஸ்.நிதுசிகா (முல்லைத்தீவு மகாவித்தியாலயம்), வி.கஜதிபா (முல்லைத்தீவு மகாவித்தியாலயம்).

தரம் - 4

ரி.கேதாராகன் (வட்டக்கச்சி மகாவித்தியாலயம்), பி.அபானுஷா (கிளிநொச்சி மகாவித்தியாலயம்), எஸ்.பானுஷா (ஜெயபுரம் மகாவித்தியாலயம்).

தரம்-5

கே.பாலச்சந்திரன் (ஸ்கந்தபுரம் இல. 01, தமிழ் கலவன் பாடசாலை), ரி.தேவபாலன் (வட்டக்கச்சி மகாவித்தியாலயம்), ரி. அனோஜா (பளை மத்திய கல்லூரி).

தரம் -6

ஜே.கஜானி (வட்டக்கச்சி மகாவித்தியாலயம்), எஸ்.அக்ஷனா (கிளிநொச்சி இந்துக்கல்லூரி), ஜீ.அபித் (பிரமந்தனாறு மகாவித்தியாலயம்).

தரம் -7

வி.பிரியா (கிளிநொச்சி மகாவித்தியாலயம்), இ.தனுசோபா (கனகபுரம் மகாவித்தியாலயம்), எஸ்.தேனுஷா (ஜெயபுரம் மகாவித்தியாலயம்), ரி.தகுமினா (நாச்சிக்குடா மகாவித்தியாலயம்).

தரம் - 8

ந.காயத்திரி (இராமநாதபுரம் தெற்கு தமிழ் கலவன் பாடசாலை),ஜோ.கலக்ஷி (இராமநாதபுரம் தெற்கு தமிழ் கலவன் பாடசாலை), எஸ்.மேனகா (முழங்காவில் மகாவித்தியாலயம்).

தரம்-9

எம்.லக்ஷி (வட்டக்கச்சி மகாவித்தியாலயம்), பி.கிந்துஷா (அக்கராயன் மகாவித்தியாலயம்), ரி. கார்திகா (பரந்தன் இந்து மகாவித்தியாலயம்).

தரம் - 10

எஸ்.நிதர்சனா (கிளிநொச்சி மகாவித்தியாலயம்), எஸ்.மேதினா (அக்கிராயன் மகாவித்தியாலயம்), வி.குஷேந்தினி (ஜெயபுரம் மகாவித்தியாலயம்).

தரம் -11

ஆர்.சர்மினி (புனித திரேசா பெண்கள் கல்லூரி), பி.நிரோஜினி (நாச்சிக்குடா மகாவித்தியாலயம்), எம்.மிதுஷா (இராமநாதபுரம் வடக்கு தமிழ் கலவன் பாடசாலை).

# வட்டக்கச்சியில் நீர் புகுமென்ற அச்சத்தில் மக்கள்; இரணைமடு வாய்க்கால்களின் சிதைவே காரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதேசத்தில் குறுக்கு வாய்க்கால்கள் பல சேதமடைந்து காணப்படுவதால் அருகிலுள்ள குடிமனைவாசிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

இரணைமடுக்குளத்திலிருந்து குறுக்கு வாய்க்கால்கள் மூலம் இப்பிரதேசத்துக்கு நீர் வழங்கப்படுகிறது. தற்போது போர்ச் சூழ்நிலையின் பின்னர் மீளக் குடியமர்ந்து கூடாரங்களிலும் தகரக் கொட்டில்களிலும் வசிக்கும் இப்பகுதி மக்கள் வாய்க்கால் நீரினையே தமது தேவைகளுக்குப்பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் வாய்க்கால்கள் பல சிதவடைந்த நிலையில் காணப்படுவதால் மழை நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் இந்த நீரினைத் தொடர்ந்து தமது பாவனைக்கு பயன்படுத்த முடியாது உள்ளதாகவும் இந்த மக்கள் கூறுகின்றனர்.

இரணைமடுக் குளப் புனரமைப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதனால் சேதமடைந்து கிடக்கும் இந்த வாய்க்கால்களினால் நீர் பாய்ந்து ஓடும் போது குடிமனைகளுக்குள் நீர் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (க-313)

# மீள்குடியேறிய பரந்தன் பிரதேச மக்கள் அடிப்படை வசதிகளின்றி அவல நிலையில்

யாழ்ப்பாணம்,ஒக்.3

மீள்குடியேறியுள்ள பரந்தன் பிரதேச மக்கள் போதிய அடிப்படை வசதிகளின்றி சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மக்கள் யுத்தத்திற்கு முன்னர் தமக்குரிய வீடுகளையும், ஏனைய வசதிகளையும் கொண்டிருந்தனர். ஆனால் இவையாவும் போரின்போது அழிக்கப்பட்டு விட்டன. இவர்களும் இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். தற்போது மீள்குடியேறிய இவர்களுக்கு வசிப்பதற்கு வீடுகளும் இல்லை. அடிப்படை வசதிகளான குடிநீர், மலசல கூட வசதிகள், மின்சாரம் என்பனவும் இல்லை. வெறும் தறப்பாள் கொட்டகைகளிலும், தகரப் பந்தல்களிலும் வாழும் இவர்கள் வரப்போகும் மழைக் காலத்தைப் பற்றிய அச்ச உணர்வுடன் காணப்படுகின்றனர்.

இவர்களுக்கான தொழில் வசதிகள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையால் தமது அன்றாட சீவியப்பாட்டுக்கே அல்லாட வேண்டிய நிலையில் இவர்கள் உள்ளனர்.

உரியவர்கள் இவர்களது அவல நிலையை உணர்ந்து உதவ மாட்டார்களா என்பதே இந்த மக்களின் வேண்டுகோளாகும். (க-313,315)

# வட்டக்கச்சிப் பிரதேசம் முழுவதும் சிறப்பான சிறுவர் தின நிகழ்வுகள்

வட்டக்கச்சி,ஒக்.3

சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வட்டக்கச்சிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள், முன்பள்ளிகள் போன்றவற்றில் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டன.

வட்டக்கச்சி சில்வா வீதியில் உள்ள தூய மணி முன்பள்ளியில் இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்வில் முதலில் மாணவச் செல்வங்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டன. பின்னர் இவர்கள் விழாவிற்கு வருகை தந்த விருந்தினர்கள் பெற்றோர்கள் சகிதம் சில்வா வீதி, ஐயப்பன் ஆலயத்தில் இருந்து முன்பள்ளி வளாகத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இங்கே வரவேற்புரையும், ஆசியுரைகளும் இடம்பெற்றன. தொடர்ந்து சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இறுதியாக சிறார்களை கௌரவிக்கும் முகமாக அவர்களுக்கு பரிசுப் பொருள்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதேபோன்று புதுக்காடு கயல்விழி முன்பள்ளியிலும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

வட்டக்கச்சி கட்சன் வீதி சூசையப்பர் முன்பள்ளியிலும் மாணவர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

(க-450)

— ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் —

# கிளிநொச்சியில் 2 ஆயிரம் பேர் சிறுவர் தின நிகழ்வில் பங்கேற்பு

கிளிநொச்சி,ஒக்.3

ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் சிறுவர் தினவிழா கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை 9 மணியளவில் வெகுசிறப்பாக இடம்பெற்றது.

ஜனாதிபதி செயலகத்தின் சமூக அபிவிருத்திப் பணிப்பாளர் நந்தன விஜயதிலக தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக விவசாய பிரதியமைச்சர் சந்திரசேனவும், சிறப்புவிருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில், சித்திரக்கண்காட்சி, கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

அத்துடன் மரதன் ஓட்டப் போட்டிகள், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளும் இடம்பெற்றன. (ஒ-9)

# 30 ஆண்டுகளுக்குப் பிறகு அரங்கம் நிறைந்த காட்சிகள்

மன்னார்,ஒக்.3

சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு மன்னார் அயின் திரையரங்கில் கொட்டகை நிறைந்த படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை உலகம் முழுவதிலும் ஏககாலத்தில் திரையிடப்பட்டுள்ள சுப்பர் ஸ்ரார் ரஜினியின் எந்திரன் திரைப்படம் மன்னார் அயின் தியேட்டரிலும் திரையிடப்பட்டது. முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகும் காட்சியைப் பார்ப்பதற்காக ரசிகர்கள் 8 மணிக்கு முன்பதாகவே திரையரங்கை மொய்த்துக் காணப்பட்டனர். குறிப்பாக இளைஞர்கள், யுவதிகள், பாடசாலை மாணவர்கள் என்போர் அதிக அளவில் குழுமுகின்றனர் - மாலை நேரக் காட்சிகளுக்கு முதியவர்களும், குடும்பத்தினரும் செல்வதைக் காணமுடிகின்றது.

30 ஆண்டுகளுக்குப் பிறகு தான் கொட்டகை நிறைந்த காட்சிகள் திரையரங்கில் காட்டப்படுவதாக மக்கள் பேசிக்கொள்கின்றனர். இந்த அயின் திரையரங்கு 1952 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமரான டட்லி சேனநாயக்காவினால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-80)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SPS போக்குவரத்துச் சேவை விசேட கட்டணம்

23.09.2010 முதல் எதிர்வரும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு எமது போக்குவரத்து சேவையின் கட்டணங்கள் அனைத்தும் குறைக்கப்பட்டுள்ளன என்பதை எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

| | முன்னைய கட்டணம் | தற்போதைய கட்டணம் |
|---|---|---|
| ★ பஜிரன் சொகுசு போக்குவரத்து குளிரூட்டியது | 1400/= | 1200/= |
| ★ பஜிரன் அரைச் சொகுசு குளிரூட்டியது | 1200/= | 1100/= |
| ★ இருக்கை சீர் செய்யப்பட்டது சாதாரணம் | 1000/= | 700/= |

**Note:**
போக்குவரத்துச் சேவைக்கான பதிவுகள் தொலைபேசி மூலம் ஏற்றுக்கொள்ளப்படும். பிரயாணச் சீட்டுக்ள் தங்கள் வதிவிடங்களுக்கு நேரடியாக வழங்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்......

* கொழும்பு:- 0112336953, 0114377852
* No. 118, Dam Street, Hot line, 0777 306049 - 0777 349142, Colombo- 12
* யாழ்ப்பாணம்:- 021 222 4558

No.61, Arasadi Road,
Kandarmadam, Jaffna. Hot line 0771544210

நிர்வாகம் SPS போக்குவரத்து.

## விண்ணக வாழ்வில் 31 ஆம் நாள் நினைவலைகள்

உதயம் 22 ★ 09 ★ 1933



உதிர்வு 03 ★ 09 ★ 2010

### திருமதி மரியம்மா அந்தோனிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற பொன்னம்மா ஆசிரியர்)

**"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள்"**

*மண்ணில் நல்லமுறையில் வாழ்ந்து - என்*
*எண்ணம் தனில் இடம் பிடித்து*
*விண்ணிலே வாழ்வதற்கு விரைந்து சென்ற - என்*
*அன்பு அம்மா!*
*உன் முகம் காணாது பதறுகின்றேன்*
*இன்முகம் காட்டி என் மனம் ஆற்றிடுவாய்*
*இறைவனிடம் இறைஞ்சுகின்றேன்.*

*எனது அன்புத் தாயின் இறுதி அஞ்சலி நிகழ்வில் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் என் மனப்பூர்வமான நன்றிகள். விசேடமாக இறுதி இரங்கல் திருப்பலியை நிறைவேற்றிய நெடுந்தீவு பங்குத்தந்தைக்கும் அன்பு கலந்த நன்றிகள். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (04.10.2010) திங்கட்கிழமை நெடுந்தீவு தோமையார் ஆலயத்திலும் யாழ். அருள் ஆச்சிரமத்திலும் காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.*

| தகவல்: | பிரிவால் துயருறும்: |
|---|---|
| ஜோசப் கமலநாதன் | மகன் - றெமி (ஜேர்மனி) |
| மருமகன் (போணா)நெடுந்தீவு மத்தி. | மருமக்கள், பேரப்பிள்ளைகள். |

## மணமகள் தேவை

1985 ஆம் ஆண்டு 8 செவ்வாய் அவிட்ட நட்சத்திரம், 4 ஆம் பாதம், 74 பாவக்கிரகம் கொண்ட இந்து கௌரவ குடும்ப மணமகளிற்கு உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள மணமகன் தேவை.
தொடர்பு: விளம்பர இல: 4079
C/O உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

HP Branded Computers 3.2 GHz (HT), 1 GB DDR II RAM, Combo Drive 80 GB SATA HD, Laser mouse, Keyboard, 17" CRT Monitors Rs. 25,000/=
தொடர்பு: 0217394470

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு, விளையாட்டரங்க வீதியில், G.P.S. வாசிகசாலைக்கும் விளையாட்டரங்கிற்கும் இடையில் 3 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0711276747, 0212228203

## விற்பனைக்குண்டு

கடைக்குத் தேவையான கண்ணாடி ஷோகேஸ் வகைகள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0770711390

## வேலை வாய்ப்பு

யாழ்.மாவட்டத்தில் சிமெந்து விநியோகத்தில் ஈடுபடும் நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை பிரதிநிதி தேவை.
தகைமை: க.பொ.த.உயர்தரம் - 3 சித்தி.
அனுபவம்: ஆகக்குறைந்தது ஒரு வருடம்
வயது எல்லை: 30 வயதுக்குட்பட்டவர்
தொடர்பு: 0773028411

## ஆள் தேவை

பண்டத்தரிப்பில் அமைந்துள்ள கோழிப் பண்ணை ஒன்றில் வேலை புரிவதற்கு ஆள்கள் தேவை.
தொடர்பு: 0779413068

**கோழிக்குஞ்சு விநியோகம்:** தரமான No.1 புறொயிலர் குஞ்சுகள் விநியோகம் செய்யப்படும். முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
**சிற்றியாம் ரேடேர்ஸ்**
ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. 0777238573 (103951)

## வீடும் காணியும் விற்பனைக்கு

இல. 10, தாவடி வீதி, மானிப்பாயில், (IDM கணனி நிறுவனத்துக்கு எதிராக) அமைந்துள்ள 05 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
விவரங்களுக்கு தொ.பே. 0772389864

## வீடு காணி விற்பனைக்கு

கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்துக்கு அண்மையில் கூரை மாத்திரமற்ற வீடு அனைத்து வளங்களுடன் விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு - 077 2105373

## வீடு வாடகைக்கு

நல்லூர் குறுக்கு வீதியில் 4 அறைகள் சகல வசதிகளும் கொண்ட விசாலமான வீடு வாட கைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- றஞ்சித்,44, மாட்டின் லேன், யாழ்ப்பாணம். 0212229562
(103951)

## மீண்டும் யாழ் நகரில்

இலங்கை முழுவதும் பல நூற்றுக் கணக்கான Phone திருத்துனர்களை உருவாக்கிய பிரபல ஆசிரியரின்

**Diploma in Mobile Phone Repairing**

**Hardware**
- அறிமுகம் (Spares / ICs / Tools / Faults / Web sites)
- தவறுகளை கண்டுபிடிக்க Trouble Shooting ஒழுங்கு முறைகள்
- Ic/Ribbon/Spares மாற்றுதல் / ஒட்டுதல் போன்ற பயிற்சி (All brand)
- Phone கழற்றும் முறை (சகலவிதமான), Ribbon/Slide / Touch....Etc
- Hotgun / Multumeter / Power supply / U S cleaner. உபயோகம்
- விசேட Hardware குறிப்புகள்
- Forum மூலம் தீர்வுகாணல் (Jumper System)

**Free!** Study Packs (Faults Solutions) Schematics Diagram Cd's Applications Software codes Special Web Site

**Rs.8750/=**

**Software** Setup Installation, Unlocking, Flashing
Jaf, P-Key, SE tool, NSpro, Infinity, Pin Finder, Spiderman, MX-Key.

**COLOMBO (SDC)** No: 1, Perera Lane, Wellawathe — Monday-Thursday 4 Days (10:00am-3.00pm) — Sat or Sun 2 months (10:00am-1.00pm)

**JAFFNA** No: 102-2/2, Navalar Road, (Luxman Plaza Bulding) — OCT 04, OCT 05, OCT 06, OCT 07

உங்கள் பதிவுகளுக்கு 071 4241873

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் உயர்தர விதிமுறைகளுக்கு அமைந்த கோயில் கலசங்கள், தீபங்கள், குத்துவிளக்குகள், சரவிளக்குகள், கெண்டிவகை, பட்டுக் குடைகள், ஆலவட்டக் குடைகள், கும்பக் குடைகள், திருவாசிகள், வெண்சாமரை, சோட உபசார செற்றுகள், கும்பதீபங்கள், பஞ்சாலாத்திகள், அடுக்குத் தீபங்கள் இன்னும் பல தீபங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**பிள்ளையார் மெட்டல்**
இல.64, வைரவர் கோயில் வீதி, வைரவப் புளியங்குளம், வவுனியா.
தொ.பே: 024 222 2097, 024 222 0129

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- **சுப்பிரமணியம் சரவணபவன்**
சிற்ப ஆசாரி, 14BA, தம்பி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-021 490 0085
077 411 2049

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை மற்றும் கோயில் பொருள்கள், தீப வகைகள், பட்டுக் குடை, திருவாசிகள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- **சி.சிவானந்தம்**
கந்தசாமி கோயில் முன்பாக
சுபாஜினி ரேட்டேர்ஸ்
A-9 வீதி, கிளிநொச்சி.
தொ.பே:- 0779779726

## பதவி வெற்றிடம் FOSDOO

FOSDOO நிறுவனமானது வவுனியா மாவட்டத்தில் அபிவிருத்தி வாழ்வாதாரம், நிவாரணப் பணிகள், மற்றும் கால்நடை அபிவிருத்தி, பால்பொருள்கள் உற்பத்தி, சந்தைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி வரும் ஓர் லாப நோக்கற்ற அரச சார்பற்ற நிறுவனமாகும். இது பால் உற்பத்தி அபிவிருத்தித் திட்டத்தின் (OXFAM/EDP) கீழ் வவுனியா மாவட்ட கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் பால் பதனிடல் தொழிற்சாலைக்கு (DAIRY PROCESSING UNIT) பின்வரும் பதவிக்கான விண்ணப்பத்தினைப் பொருத்தமானவர்களிடமிருந்து கோருகின்றது.

*உற்பத்தி உத்தியோகத்தர் - பயிலுநர்* (Production Officer.- Trainee)

**கல்வித் தகைமைகள்:**
* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் உணவில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் அல்லது உணவு மற்றும் ஊட்டம் ஆகிய துறைகளில் பட்டப்படிப்பு

அல்லது

* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் உணவு தயாரிக்கும் துறையில் டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.
* உணவுஉற்பத்தித்துறையில்ஆகக்குறைந்தது ஒருவருட அனுபவம்இருத்தல்வேண்டும்.

**பொதுத் தகைமைகள்:**
* கணணி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
* நிர்வாகம், தலைமைத்துவம் மற்றும் கண்காணிக்கும் திறன்கள் உடையவராக இருத்தல் வேண்டும்.
* தமிழ் சிங்களத்துடன் ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடியவராகவும் தொடர்பாடல் செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
* சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.
* வயதெல்லை 35 இற்கு மேற்படல் ஆகாது.

**வேதனம்:** அடிப்படை வேதனம்: 16,100.00 - 185x3 - 245x7 = 18370.00 அத்துடன் கூட்டுறவுத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைப்படிச் செலவு 5250.00 ரூபாவும் வழங்கப்படும்.
இப்பதவி நிரந்தரமானது.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு ஆர்வமுள்ள தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்களுடைய சுயவிவரக் கோவையுடன் கீழ்வரும் தபால் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

மனிதவள அபிவிருத்தி இணைப்பாளர், பொஸ்டோ,
இல: 42/7, 6 ஆம் ஒழுங்கை, வேப்பங்குளம், வவுனியா.
மின்னஞ்சல்: fosdoovavuniya@gmail.com

விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி 20.10.2010

## கார் விற்பனைக்கு

12 - XXXX NISSAN நல்ல நிலையில் உள்ள அழகிய கார் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: வினோத்
தொ.பே. 0213002274, 0789144881
திருசுழி இல்லம், பழைய தபாற்கந்தோர் வீதி, கிட்ஸ்பார்க் லேன், உரும்பிராய் தெற்கு.

## பெட்ஸ் ஆன்ட் பிளாண்ட்ஸ்

ஜேர்மன் செப்பேட்-8மாதம், 45நாள் பெண் நாய்கள், பொக்சர் பெண் - 1வயது, 2வயது பொக்சர் குட்டிகள் (Boxer) தேவையானவர்கள் முற்கூட்டியே பதிவுகளைச் செய்யவும் தொடர்பு - இல - 80 ஆடியபாதம்வீதி, கொக்குவில் கிழக்கு, 0779485703
(104087)

## வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியிலும், நாவலர் வீதியிலும் வீடும் கடையும் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 222 3479, 021 5670313
(104888)

## யாழ் - கொழும்பு சொகுசு பஸ்சேவை

**சுன்னாகம் - யாழ், கொழும்பு, வெள்ளவத்தை**
**வெள்ளவத்தை - கொழும்பு - யாழ் - சுன்னாகம்**
**பயணிகளின் நன்மை கருதி**
**விசேட கட்டணக் குறைப்பு**

**1000/= ரூபா மட்டுமே**

## அம்பாள் எக்ஸ்பிரஸ்

271, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2531,
077 7872322

*248/97 ஆட்டுப்பட்டித் தெரு,*
*கொழும்பு - 13.*
*011 2452468, 077 5141146,*
*077 3222934*

Hot Line - 0777880209

(வி/571459)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விசுவமடு – 01

# மரணங்கள் மலியத் தொடங்கிய நிலம்

அவலக் குரல்கள் அந்த வீதியில் இன்னும் கேட்டுக் கொண்டிருக்கின்றன. யுத்தம் பின்னால் துரத்திக் கொண்டிருக்க இந்த வீதியால் மக்கள் எப்படி அந்தரித்து ஓடியிருப்பார்கள்? பரந்தன் முல்லை வீதி என்கிற அந்தத் தெருவே கனவுக்தூாய் அந்தரித்து ஓடிய சனங்களின் கால் தடங்கள் நிறைந்திருப்பதைப்போல இருக்கிறது. குண்டும் குழிகளுமாக இருக்கிற இந்தத் தெருவைப் பார்க்கிற பொழுது அந்தச் சனங்கள் இந்த வீதியால் எப்படிச் சென்றிருப்பார்கள் என்று கேள்வி எழுகிறது. தெருவின் கரைகளில் பக்கங்களில் உள்ள காணிகளில் எல்லாம் கைவிடப்பட்ட நிலையில் பொருள்கள் சிதறிக் கிடக்கின்றன. வாகனங்கள், சக்கரங்கள் கழற்றப்பட்ட வாகனங்கள், வெறும் சக்கரங்கள், பலகைப் பட்டடிகள், கூரைத்தகரங்கள் என்று கைவிடப்பட்ட பொருட்கள் அழிந்த நிலையில் இருக்கின்றன. மீண்டும் விசுவமடு நகரம் இயங்கிக் கொண்டிருக்கிறது. போர் தொடங்கி தீவிரம் பெறத் தொடங்கிய முதலாவது இடம் விசுவமடு என்று கூறப்படுகிறது. உயிர்கள் கொட்டத் தொடங்கிய அந்த நிலம் தனக்கேயுரிய வளத்தின் முகத்தை அணிந்திருக்கிறது.

நம்பிக்கையுடன் தன் சனங்களை மீளப் பெற்றுக் கொண்டிருக்கிறது. முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலில் மல்லாவி, துணுக்காய் போன்ற இடங்கள் பின்னர் முல்லைத்தீவு நகரத்தை அண்டிய இடங்கள், ஒலுமடு, ஒட்டிசுட்டான், முள்ளியவளை போன்ற இடங்களில் மக்கள் குடியேற்றப்பட்டார்கள். யுத்தம் கடுமையாக நடந்த புதுக்குடியிருப்பு நகரம், விசுவமடு, உடையார்கட்டு போன்ற இடங்களில் மீளக்குடியமர்வு நடைபெறாதிருந்த நிலையில் அண்மையில் (16.09.2010) விசுவமடு மேற்குப் பகுதியில் மீள் குடியேற்றம் நடைபெற்றது. குறித்த மக்கள் முதல் நாள் (15.09.2010) முல்லை விசுவமடு மகா வித்தியாலத்திற்கு கொண்டு வரப்பட்டார்கள். முகாம் வாழ்வு என்கிற தண்டனை காலத்தை முடித்துக் கொண்டு திரும்பிய மக்கள் வளமான மண்ணை நம்பியே மீண்டும் நிலம் திரும்பியிருக்கிறார்கள். அந்தப் பாடசாலைக்குச் செல்லும் பொழுது டிரக்டர்களில் மக்கள் ஏற்றி நிரப்பி காணிகளுக்கு கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்ததை பார்த்தேன். வெயில் ஓங்கிப் பெய்து கொண்டிருக்கிறது. துவாயையோ அல்லது சிறிய துணித்துண்டையையோ தலையில் போட்டு மூடியபடி அவர்கள் சென்று கொண்டிருந்தார்கள். எல்லாவற்றையும் இழந்த பிறகும் புன்னகையை மட்டும் திரும்பி எடுத்துச் செல்கிறார்கள் அந்தச் சனங்கள்.

பாடசாலை வளாகம் கிளிநொச்சி மத்திய கல்லூரியைப் மாதிரி ஒரு இடைத்தங்கல் முகாம் போலிருந்தது. பாடசாலை மண்டபம் ஒன்றில் பதிவுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. படிக்கட்டுக்களில் மக்கள் குந்தியிருந்தார்கள். களைத்துப்போன முகங்களில் ஊருக்கு வந்து விட்டோம் என்ற மகிழ்வு தெரிந்தது. ஒரு பக்கத்தில் மிதிவெடிகள் போன்ற வெடிபொருள்களைக் கண்டால் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற விளக்கங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அபாயமான பொருள்களை கண்டால் யாரும் தொட வேண்டாம் என்பது தொடர்ந்து அறிவுறுத்தப்படுகிறது. சிறுவர்கள் பெரியவர்கள் என்று எல்லோரும் தங்கள் பொதிகளை சரிபார்த்து தயார் செய்து கொண்டிருந்தார்கள்.

தனமணியம்மாள் என்ற தாய் வலயம் ஒன்று என்கிற கதிர்காமர் தடுப்புமுகாமிலிருந்து வந்திருந்தார். யுத்தம் எங்களை மேலும் வறுமையாக்கி விட்டது என்று குறிப்பிடும் அவர், தான் விசுவமடுச் சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்துதான் பிழைத்து வந்ததாக என்னிடம் குறிப்பிட்டார். காணியில் வெறுந் தென்னைகள்தான் இப்பொழுது நிற்கின்றன. இரண்டு பெண் பிள்ளைகளை கரை சேர்க்க வேண்டும் என்ற என் கடமையை நினைக்கும் பொழுது நான் எப்படி வாழப்போகிறேன் என்று கேள்வி எழுப்பினார். அரசாங்கம் என்னைப்

*கைவிடப்பட்ட பொருள்கள் தெருவெங்கும் கிடக்கின்றன. குன்றும் குழிகளுமான வீதியியைப் பார்க்கும் பொழுது மாபெரும் சனங்கள் இந்த வீதியால் எப்படிச் சென்றிருப்பார்கள்? என்று கேள்வி எழுகிறது. மீண்டும் இயக்கிக் கொண்டிருக்கிறது விசுவமடு நகரம். போர் தீவிரமடைந்து உயிர்கள் கொட்டத் தொடங்கிய நிலம் விவசாயத்தின் நம்பிக்கை மிக்க பூமியாக மீண்டும் தன் மக்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிடும் கட்டுரையாளர் தீபச்செல்வன் அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனுடன் முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு மேற்கில் மக்கள் மீளக் குடியேற்றப்பட்ட பகுதிக்கு சென்று வந்தார். போர் உக்கிரம் கொண்டழிந்த பொழுதும் வீழ்ச்சி இல்லாத நம்பிக்கையை அந்த நிலம் தருவதாக இந்தக் கட்டுரையில் எழுதுகிறார்.*

போன்றவர்களுக்கு தொழிலுக்கான முதல் தந்து உதவ வேண்டும் என்று சொல்கிற தனமணியம்மாள் தனது தொழிலில் மாத்திரம் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான வளம் அழிந்து விட்டதாக சொல்கிறார்.

பாடசாலையின் மேல்மாடி கட்டடத்தில் இருந்து சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அன்று குடியேற்றப்பட்ட மக்களுக்கு வாளிகளை வழங்கி அந்த மக்களுடன் சரவணபவன் எம்.பி பேசிக் கொண்டிருந்தார். யுத்தம் அதிகம் இழப்புக்களை ஏற்படுத்தத் தொடங்கிய அந்தப் பிரதேச மக்கள் வாழ்வில் புத்துயிர் பெறும் நம்பிக்கையுடன் மீளவும் குடியேற வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார். பாடசாலை வாயிலில் மதியநேர உணவு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. சிலர் வாங்கிய உணவைசொப்பிங் பைகளிலும், இறப்பர் பாத்திரங்களிலும் வைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த உணவில் எங்களுக்கும் சாப்பிடத்தந்தார்கள்.

இந்தப் பாடசாலைக்கு செஞ்சோலை மாணவர்கள் பற்றிய ஆவணப்படத்தை எடுப்பதற்காக முதன்முதலில் சென்ற ஞாபகம் வந்தது. பாடசாலையில் முக்கியமான இடத்தில் செஞ்சோலை மாணவிகளது நினைவாலயம் அமைக்கப்பட்டிருந்தது. இந்தப் பாடசாலையைச் சேர்ந்த 14 பேர் இதில் இறந்திருந்தார்கள். செஞ்சோலைப் படுகொலையால் இந்தப் பாடசாலை ஆறாத துயரத்திற்கு முகம் கொடுத்தது. காயங்களோடிருந்த மாணவிகளின் அதிர்ச்சி மிக்க வார்த்தைகளை கேட்டிருந்தேன். இன்று செஞ்சோலை மாணவிகளது நினைவு ஆலயம் அழிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாணவிகளது முகங்கள் சுழல்வதைப்போலிருக்கிறது. மாணவிகளது புகைப்படங்கள் பொருத்தப்பட்டிருந்த கட்டடம் வெறுமையாக ஒரு மித்தைப்போலிருக்கிறது.

பாடசாலைக் கட்டடத்தில் இருந்த ஐங்கரநேசன் ஜெகதீஸ்வரி தனது 11 வயதான பெண்பிள்ளையை யுத்தம் தின்று விட்டதாக சொல்லி அழுதார். இராமசாமி சிவபாக்கியம் என்கிற தாய் விசுவமடு பாடசாலை வளாகத்தில் வைத்தியசாலையாக இயங்கிய கட்டடத்தை பார்த்துக் கொண்டிருந்தார். யுத்தம் தீவிரம் அடையத் தொடங்கிய நாள்களில் கிளிநொச்சி வைத்தியசாலை அந்த மண்டபத்தில்தான் இயங்கியிருக்கிறது. முள்ளிவாய்க்கால கொலைகளின் மரணங்கள் அங்கிருந்துதான் தொடங்கியிருக்கின்றன. யுத்தகால இடர் முகம் படிந்த அந்தக் கட்டடம் வரலாற்றின் ஒரு துயர்ச் சின்னமாக பாதுகாக்க வேண்டியது. இன்னும் அழும் குரல்கள் கேட்கும் அடங்காத நெருக்கடி மிக்க மண்ட பத்தைப் போல தன் முகத்தை வைத்திருக்கிறது. அந்தக் கட்டடத்தின் மேற்ப் பக்கத்தில் வைத்தியசாலை என்பதற்காக பாதுகாப்புக் குறியீடாக செஞ்சிலுவைக் குறியீடு வரையப்பட்டிருந்தது.

விசுவமடு என்கிற கிராமம் 1960களில் படித்த மக்கள் குடியேற்றப்பட்டு உருவாக்கப்பட்ட விவசாயக் குடியிருப்புத் திட்டம். 'வெளிக்கிடு விசுவமடுவுக்கு' என்கிற அளவில் நம்பிக்கையுடன் சனங்களை அழைத்த கிராமம். 'படித்து அரசசேவையில் ஈடுபடுவதைவிட வாழ்வில் முன்னேற வேண்டுமாக இருந்தால் விசுவமடு போகலாம்' என்கிற அளவில் இந்தக் கிராமம் வாழ்வில் முன்னேறும் வளத்தை வைத்திருந்தது.

குடியேற்றத்தின் பொழுது ஒவ்வொரு நபருக்கும் மூன்று ஏக்கர் காணிகள் படி வழங்கப்பட்டன். 19 கிராசேவையாளர் பிரிவுகள் இருக்கின்றன. 1400 குடும்பங்கள் வசித்து வந்திருக்கின்றனர். பிரதானமாக விசுவமடு மேற்கு 1968 இல் 220 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. பாவல் பாசனம் விவசாயத்தை மேற்கொள்ள விசுவமடுக்குளத்தை நம்பி இந்த மக்கள் குடியமர்ந்தார்கள். அதன் பின்னர் 1972 இல் ஏற்று நீர்பாசனத் திட்டத்தில் 210 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் 309 குடும்பங்கள் குடியேற்றப்படும் இந்த மிள்குடியமர்வு அந்தப் பிரதேசத்தில் நடைபெறுகிற முதலாவது மீள்குடியமர்வு என்று உதவி அரசாங்க அதிபர் செ. தயானந்தா என்னிடம் குறிப்பிட்டார்.

மிதிவெடிகள் அகற்றப்பட்டதை தனக்கு படைத்தரப்பு உறுதி செய்தாக குறிப்பிடும் தயானந்தா ஏனைய பகுதிகளில் விரைவில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவார்கள் என்று தான் நம்புவதாகவும் சொல்கிறார். மக்களின் நிலைமைகள் குறித்து நான் கேட்ட பொழுது இந்த மக்கள் வீட்டுக்கு வீடு இழப்புடன் திரும்பியிருக்கிறார்கள் என்று ஒற்றை வார்த்தையில் பதில் அளித்தார். குளத்தில் தண்ணீரில்லை. கிணற்றில் தண்ணீர் இல்லை. மேட்டு நில விவசாயம் எப்பொழுது சாத்தியமாகப் போகிறது என்று தெரியவில்லை எனவும் தெரிவித்தார். எதிர்வரும் நாள்களில் இந்தப் பாடசாலையும் (முல்லை விசுவமடு மகா வித்தியாலயம்) நெத்திலியாறு தமிழ் வித்தியாலயமும் ஆரம்பிககப்படும் என்று அவர் குறிப்பிட்டார். தறப்பாள்கள் கயிறு, மரம் போன்ற இந்திய மக்களது உதவிகளும், ஐ.ஓ.எம் நிறுவன உதவிகளும் கிடைத்திருப்பதாகத் தயானந்தா குறிப்பிட்டார்.

மக்கள் கிராமம் முழுக்க கொண்டு சென்று விடப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெரிய கிராமத்தைச் சுற்றிச் சுற்றி உழவு இயந்திரச் சத்தங்கள் கேட்டபடியிருந்தன. போனதும் தறப்பாலை விரித்துப் போர்த்துக் கொண்டு முதல் நாளை மக்கள் எதிர்கொள்ளத் தொடங்கினார்கள்.

**தீபச்செல்வன்**

மறுநாள் (17.09.2010) மக்களை அவர்களின் காணிகளில் பார்க்க முடிந்தது. எல்லோருமே பெரும் வேலைகளுடன் நின்றார்கள். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருமே கைகளில் எதையாவது வைத்துக் கொண்டு காணிகளை துப்புரவாக்கத் தொடங்கினார்கள். நீண்ட தென்னை மரங்களும் பெரும் சிமெந்து வீடுகளும் பெரும் வீதிகளும் செழித்த சிவப்பான மண்ணுமே விசுவமடு என்கிற அடையாளத்தை இன்னும் காட்டுகின்றன. விவசாயத்தில் ஒரு பிரமாண்டமான நிலமாக விசுவமடு முக்கியம் பெறுகிறது. திரும்பும் இடமெல்லாம் பெருந்தென்னைத் தோட்டங்கள்தான் தெரிகின்றன. ஓட்டு வீடுகளைத் தவிர ஏனைய 'சீட்' என்கிற கூரைத்தகடு போடப்பட்ட வீடுகளின் கூரைகள் எதுவுமில்லை. கைவிடப்பட்ட பொருட்கள் நிறைந்து கிடப்பதைப் பார்க்கும்பொழுது சனங்களின் வாழ்வு எப்படி சீரழிந்தது என்பது மிகவும் தெளிவாக புலப்படுகிறது.

*(கதை தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரவுண்ஸ் வழங்கும் பிரமாதமான சலுகை

SHARP
AR 5516 கொப்பியர் இனை
ரூபா.99,000/-
+VAT 12% இற்கு வாங்கி

இலவசமாக
SHARP
GQ72 தொலைநகல்



அல்லது
இலவசமாக
20,000
பிரதிகளை
பெற்றுக்
கொள்ளவும்



இச்சலுகை 2010 அக்ரோபர் 15 ஆம் திகதி வரை மட்டுமே!

SHARP Air Conditoners
* Compressor இற்கு 05 வருட உத்தரவாதம்.
* இலவச பொருத்தல் சேவை



Available : Sharp Multimedia Projectors.
Sharp Fax Machines



எப்போதும் தரமான உதிரிப்பாகங்கள் மற்றும்
உள்வீடுகளையே (Toners & Spares) நாடுங்கள்.

Brown & Co. Plc - IBS இன்
அங்கீகரிக்கப்பட்ட ஏக விநியோகஸ்தர்கள்.

டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ்
இல. 62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4040, Fax : 021 222 4040
( ஸ்ரான்லி வீதி சம்பத் வங்கி முன்பாக)


# மரண அறிவித்தல்



## கந்தையா குணலிங்கம் (விதானை)

(பிரபல லொறிச் சாரதி, யாழ். - கொழும்பு)

உடுவில் தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குணலிங்கம் (விதானை) 29.09.2010 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையா -சின்னக்கிளி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துமாலை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் தர்மலிங்கம், காலஞ்சென்ற அழகம்மா மற்றும் கமலராணி (சுவிஸ்), ந.செல்வராணி (ஜேர்மனி), காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் க.யோகராணி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும் ரஜிக்குமார் (ரஜீவன் - உரிமையாளர், சாரு போறிங் வேக்ஸ்), வசந்தகுமார், சுபோஜினி (இத்தாலி), சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் றோசி, கேசலா, ரகுநாதன், (இத்தாலி), ஜெகநாதன் (கண்ணன் -உரிமையாளர், சிறிநாகபூஷணி அம்பாள் ரயர் வேக்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் சாருஜன், சதுர்ஷா, சதுர்ஷன், டிசோத், நிசாந், நிசானா, ஜெஸ்மியா, துர்சிகா, தமிழினி (இத்தாலி), தானியன் (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.10.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ரஜீவன்*
*(சாரு போறிங் வேக்ஸ்)*
*உடுவில் தெற்கு, மானிப்பாய்.* (104120)

தகவல்:
குடும்பத்தினர்.


# நாம் பெருமைப்படுகிறோம்

October 17வரை பதிவுகள்
மேற்கொள்ளப்படுகின்றன.

* சங்கானைச் சந்தை
* டச்சுக் கோட்டை
* வெல்வில் முருகன்
* ஏழாங்கட்டை
* கூடத்து அம்மன்

போன்ற பாரம்பரியங்களுடன்

IDM
City Campus # 3

முதல் பதிவு செய்யும்
50 மாணவர்களுக்கு விசேட
புலமைப்பரிசில்கள்

3 தசாப்த கால
உயர்கல்வி
நம்பிக்கையின்
சின்னம்

# இப்பொழுது சங்கானையிலும்

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தின் நுழைவாயிலாகவும் தலைநகராகவும்
விளங்குகின்ற சங்கானை பிரதேசமானது விவசாய வர்த்தக
நடவடிக்கைகளின்கேந்திர நிலையாக ஒல்லாந்தர் காலத்திலிருந்தே
விளங்கி வருகின்றது. யானை வர்த்தகம் முதலாய பெரும் கொடுக்கல்
வாங்கல்கள் நடந்த இடமாகவும்
சங்கானை திகழ்ந்திருக்கின்றது.

IDM
City Campus # 3

IDM Computer Studies(Chankanai) Pvt.Ltd
No: 30 Main Street Chankanai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன் முதலாக வேலைக்குச் செல்லும்போது...

எல்லோரும் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் இன்றைய காலகட்டத்தில் தோன்றியுள்ளது. ஒவ்வொரு மனிதனும் தமது கல்லூரி வாழ்க்கையை முடித்துவிட்டு அடுத்த படியாக ஒரு வேலையை தேட முயல்கின்றார்கள். ஆனால் அவ்வளவு சுலபமாக வேலை கிடைத்து விடுவதில்லை. அவ்வாறு கிடைத்தாலும் தான் கண்ட கனவுகளுக்கு எதிர்மாறாக குறைந்த சம்பளம், குறைந்த சலுகை குறைவான வசதியுடன் தான் ஒரு வேலை கிடைகிறது. அதனால் அவனது கனவுகள் தகர்கின்றன.எவ்வாறாயினும் உங்களது கடின உழைப்பையும் முழுத்திறமையையும் காட்ட முயற்சி செய்தால் உங்கள் எதிர்காலம் நிச்சயம் பிரகாசமாக இருக்கும். தமது கல்வியை முடித்து விட்டு முதன் முதலாக வேலைக்குச் செல்லும் போது இருக்கவேண்டிய முதல் தகுதி அது எப்படிப்பட்ட கடினமான வேலையாக இருந்தாலும் சரி அவ்வேலையை திறமையாகச் செய்ய முடியுமென்ற நல்லதொரு மனோபலம்.

வேலை கொடுக்கும் நிறுவனங்கள் புதிதாக வேலைக்குச் சேர்பவர்களின் எதிர்பார்ப்புகளை உணர்ந்து மதித்தாலும் பெரும்பாலும் அந்நிறுவனங்கள் அவர்களது விருப்பங்களை முற்று முழுதாக நிறைவேற்றுவதில்லை. முதன் முதலில் வேலையில் சேர்பவர்களிடம் நிறுவனம் எதிர்பார்ப்பது என்னவென்றால் நேரம் பார்க்காமல் கொடுத்த வேலையை முடிக்க விரும்பமுள்ளவரா, தேவைப்படும் போது அதிக வேலை செய்யத் தயாராக உள்ளவரா என்பதுதான். இதனால் ஆரம்பகட்ட வேலைகளில் சேருபவர்கள் பரந்த மனப்பான்மையுள்ளவராக இருத்தல் அவசியம். இம் மனப்பாங்கு நீங்கள் வேலை செய்யவுள்ள கம்பனி பற்றியும் அதில் வேலையை பளுவாகக் கருதாமல் அதை உங்கள் திறமையை வெளிப்படுத்தக் கிடைத்தவொரு சந்தர்பமாக கருதுங்கள்.முதல் வேலையே ஒருவர் எந்த வேலைகளையும் சிறப்பாகச் செய்ய பயிற்சியளிக்கிறது. எனவே அதில் உண்மையாகவும் திறமையாகவும் உழைத்தால் பின் எந்த நிறுவனத்திலும் எளிதாக வேலை கிடைக்கும். ஆரம்ப கட்ட வேலையிலேயே நீங்கள் மற்றவரின் மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்றால், முன்னேறுவது எளிதாகவிருக்கும்.

வேலையில் சேர்ந்த பின் அலுவலகம் உங்களுக்கு எல்லா வேலைகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்காமல் நீங்களே உங்களுக்குப் பயிற்சி கொடுப்பவராக எண்ணி வேலை நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ளுங்கள் பிரச்சினை என வரும்போது அதை அமைதியுடன் எதிர்கொள்ளுங்கள்.

எமது முயற்சியே எம்மை உயர்த்தும் படிக்கற்கள். எவ்வளவு தடைகள் எம் முயற்சிகளுக்கு இடையூறாக இருந்தாலும் அதையும் தாண்டி நாம் பாதம் பதித்தால் வெற்றி எமக்கு கிடைப்பது நிச்சயம்!

# தெரிந்து கொள்ளுங்கள்

**காடை இனம்**
கருங்காடை
புதர்க்காடை
வர்ணக்காடை
காடை
மஞ்சல் கால்காடை
குறுங்காடை

**கௌதாரி இனம்**
வர்ணக் கௌதாரி
கௌதாரி

**வல்லூறு இனம்**
சிவப்பு வல்லூறு
பெரிய வல்லூறு
வல்லூறு
சிறிய வல்லூறு

**உப்புக் கொத்தி இனம்**
கல்பொறுக்கி உப்புக்கொத்தி
பட்டாணி உப்புக்கொத்தி
மணல் நிற உப்புக்கொத்தி

**குருவி இனம்**
தூக்கணாங்குருவி
சோளக்குருவி
கல்குருவி
கறுப்பு வெள்ளைக்குருவி

**குயில் இனம்**
செங்குயில்
சங்களத்திக்குயில்
களச்சான்குயில்

**பசையெடுப்பான் இனம்**
செம்பழுப்பு வயிற்றுப் பசையெடுப்பான்
ஷெல்வெட் நெற்றிப்பசையெடுப்பான்

**சிலம்பன் இனம்**
காட்டுச் சிலம்பன்
வெண்தலைச் சிலம்பன்
கலகலப்பான் சிலம்பன்
கருஞ்சிவப்புச் சிலம்பன்
பெரிய சாம்பல் சிலம்பன்
தவிட்டுச் சிலம்பன்
மஞ்சள் கண் சிலம்பன்
கருந்தலைச் சிலம்பன்
வெண்தொண்டைச் சிலம்பன்
வளைந்த அலகுச்சிலம்பன்
புள்ளிச்சிலம்பன்

**சிரிப்பான் இனம்**
வெண்மார்புச் சிரிப்பான்
நீலகிரிச் சிரிப்பான்
வய நாட்டுட்டுச் சிரிப்பான்

**பூங்குருவி இனம்**
நீலத்தலை பூங்குருவி
நீலப் பூங்குருவி
சிகாரப் பூங்குருவி
செந்தலைப் பூங்குருவி
நீலகிரிப் பூங்குருவி

**பஞ்சுருட்டான் இனம்**
காட்டுப்பஞ்சுருட்டான்
பச்சைப் பஞ்சுருட்டான்
நீலவால் பஞ்சுருட்டான்
செந்தலைப் பஞ்சுருட்டான்

**மீன் கொத்தி இனம்**
விரால் மீன் கொத்தி
சிறு மீன் கொத்தி
பெரிய அலகு மீன் கொத்தி
வெண்மார்பு மீன் கொத்தி
கருந்தலை மீன் கொத்தி
கறுப்பு வெள்ளை மீன் கொத்தி

**ஆந்தை இனம்**
உகை ஆந்தை
பட்டைக்கழுத்து சின்ன ஆந்தை
கொம்பன் ஆந்தை
பெரிய காட்டு ஆந்தை
பூமன் ஆந்தை
பெரிய புள்ளி ஆந்தை
சிறிய காட்டு ஆந்தை
புள்ளி ஆந்தை
வேட்டைக்கார ஆந்தை
குட்டைக்காது ஆந்தை

**காக்கை இனம்**
வால் காக்கை
வெள்ளை வயிற்று வரல் காக்கை
அண்டங்காக்கை
காக்கை
தீக்காக்கை

**கரிச்சான் இனம்**
கருங்கரிச்சான்
வெள்ளை வயிற்றுக் கரிச்சான்
கரும்பச்சைக் கரிச்சான்
கொண்டைக் கரிச்சான்
துடுப்புவால் கரிச்சான்
கரிச்சான்

**தோல்க்குருவி இனம்**
கருவளையத் தோல்க்குருவி
சின்னத் தோல்க்குருவி

**ஆலா இனம்**
பருத்த அலகு ஆலா
ஆற்று ஆலா
கறுப்பு வயிற்று ஆலா
மீசை ஆலா

**ஆள்க்காட்டி இனம்**
மஞ்சல் மூக்கு ஆள்க்காட்டி
சிவப்பு ஆள்க்காட்டி

**கிளி இனம்**
குட்டைக்கிளி
பெரிய பச்சைக்கிளி
செந்தார்ப்பைங்கிளி
செந்தலைக்கிளி
நீல இறக்கைக்கிளி

**புறா இனம்**
மந்திப் புறா
பெரியபச்சைப் புறா
பச்சைப் புறா
சாம்பல் நெற்றிப் புறா
பஞ்சவர்ணப் புறா
கன்னிப் புறா, தவிட்டுப் புறா
மாடப் புறா, புள்ளிப் புறா
நீலகிரிகாட்டுப் புறா,
சிறிய தவிட்டுப்புறா

**கழுகு இனம்**
மஞ்சல் திருடிக் கழுகு
வெண் முதுகுக் கழுகு
செந்தலைக் கழுகு
ஒனான் கொத்திக் கழுகு

**கோட்டான் இனம்**
பெரிய கோட்டான்
கோட்டான்

**காலி இனம்**
பவளக்காலி
சின்னப்பச்சைக் காலி

**கோழி இனம்**
தாமரைப் பாலைக் கோழி
நீளலால் இலைக் கோழி
சுண்டலீக் கோழி
வர்ணச் அண்டலீக் கோழி
காட்டுக் கோழி
காணாங்கோழி
நீல மார்புச் சாம்பல் கோழி
கம்புன் கோழி
சிவப்புக் காளாங் கோழி
தண்ணீர்க் கோழி
நீலத்தாழைக் கோழி
தாழைக் கோழி
தாமக் கோழி
வரகுக் கோழி

# வீட்டு மருத்துவக் குறிப்புகள்

**செரியாமை**

01) இலந்தைப் பழத்தின் விதையை நீக்கி விட்டு தசையுடன் மிளகாயும் உப்பும் சேர்த்தரைத்து உலர்த்தி வைத்துக் கொண்டு கடுக்காயளவு காலையில் கொடுத்து வரலாம்.

02) ஒரு அவுன்ஸ் நெல்லிக்காய் சாறும் 1/4 அவுன்ஸ் தேனும் கலந்து நாள் தோறும் அதிகாலையில் வெறும் வயிற்றில் பருகலாம்.

03) 2 அவுன்ஸ் தேனை தண்ணீரில் கலந்து பருகி வந்தால் நாள் பட்ட அஜீரணம் அகன்று விடும்.

04) புளியந் தளிரையும், புளியம்பூவையும் சேர்த்து துவையல் செய்து சாப்பிடுவது நன்று.

05) தோடம்பழத்தோலை சிறு சிறு துண்டுகளாக நறுக்கித் தண்ணீரில் ஊறவைத்துப் பிசைந்து வடிகட்டி அந்தச் சாறுடன் தோடம்பழச் சாற்றையும் கலந்து வெறும் வயிற்றில் பருக நல்ல ஜீரண சக்தி உண்டாகும்.

06) கொய்யா மரத்தின் கொழுந்தை பறித்து அதை வெறும் வயிற்றில் மென்று தின்ன வேண்டும்.

07) காலையும் மாலையும் புதிதாக கறந்த பசுவின் பாலைக்காய்ச்சி 2 அவுன்ஸ் தேன் கலந்து வெறும் வயிற்றில் பருகி வரலாம்.

08) நற்சீரகத்தை இலேசாக வறுத்து பொடி செய்து அதனுடன் பனை வெல்லம் சேர்த்து சாப்பிடலாம்.

09) பலாப்பழத்தினால் ஏற்பட்ட அஜீரணம் குணமாக நன்கு கனிந்த ஒரு வாழைப்பழத்தைச் சாப்பிட்டால் குணமாகும்.

10) வாழைப்பழத்தினால் ஏற்பட்ட அஜீரணத்திற்கு ஏலக்காய் அல்லது சிறிது நெய்யினை சாப்பிட்டால் குணமடையும்.

11) வெந்தயக் கீரையுடன் பருப்பு சேர்த்துக் கடைந்து சாப்பிட்டால் அஜீரணக் கோளாறுகள் தீரும்.

12) அரைக் கீரையுடன் பூண்டு, மிளகு, சீரகம் சேர்த்து புளி சேர்க்காமல் கடைந்து பக்குவப்படுத்தி உண்ணலாம்.

13) சுக்குத்தூளை கரும்பு இரசத்தில் சேர்த்து காலையில் சாப்பிட்டால் வயிறு இரைச்சல் இல்லாமல் போகும்.

14) சுக்கு தூள் 1 கிராமும், உடன் கறந்த பசுப்பால் 100 மி.லீ சேர்த்து சாப்பிட்டால் பசி உண்டாகும்.

# மூலிகைகளும் நோய்களும்

**துளசி:**
மார்புச்சளி, மூக்கடைப்பு, வயிற்றுப்போக்கு, காதுவலி போன்ற நோய்களுக்கு இதன் இலைகளின் சாறு சிறந்த நிவாரணி ஆகும்.

**கொய்யா:**
வயிற்றுப்போக்கு இது பயன்தரும். மலமிளக்கியாகவும் பயன்படுத்தலாம்.

**மாதுளை:**
கண்நோய்க்கு இதன் இலைகள் பயன்படுத்தப்படுகின்றது. வயிற்றுப் போக்கு, வயிற்றுவலி போன்ற நோய்களுக்கு இதன் பழம் சிறந்தது.

**வெற்றிலை:**
மூச்சுக்குழல் நோய்களுக்குச் சிறந்தது. இதன் வேர்ப்பகுதி மலட்டுத் தன்மையை ஏற்படுத்தவல்லது.

**மிளகு:**
பசியின்மை, மலச்சிக்கல், பக்கவாதம், மூட்டுவலி, மூலநோய் போன்றவற்றுக்கு இதன் கசாயம் செய்து பருகிவரக் குணமாகும்.

**ரோஜாப்பூ:**
இதயத்துக்கு நன்மருந்தாகவும் கபத்தை வெளியேற்றவும் பயன்படுத்தலாம்.

**ஆமணக்கு:**
இதன் எண்ணெயைப் பூசினால் தோல் வியாதிக்கும், தாய்ப்பால் சுரப்பு அதிகரிப்புக்கும் சிறந்தது.

**கத்தரிக்காய்:**
மூச்சுக்குழல் நோய், சிறுநீர்க் கழிப்பின்போது ஏற்படும் வலி, கல்லீரல் நோய் போன்றவற்றுக்கு நன்மை தரும்.

**தூதுவளை:**
நுரையீரல் நோய், இருமல், காய்ச்சல், மூச்சுக்குழல் அழற்ச்சி போன்ற நோய்களுக்கு இதன் இலைகள் சிறந்தது.

**அகத்தி:**
மூக்கடைப்பு, தலைவலி, காயங்களுக்கும் இதன் இலைகளை அரைத்துப் பயன்படுத்தலாம். கபத்தை வெளியேற்றவும் பயன்படுத்தப்படுகிறது.

**பசளைக்கீரை:**
சிறுநீர்க்கல், நுரையீரல் வீக்கம் போன்றவற்றுக்கு குளிர்ச்சி தரும். மலமிளக்கி, மூச்சுத் தொல்லை, கல்லீரல் வீக்கம் போன்ற நோய்களுக்கும் பயன்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Purview of JOBSNET
Ministry of Labour Relations and Productivity Promotion

20 வருட அனுபவம்

- தபால் மூலம் -

தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Sep 2010 to Feb 2011

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம் மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology. M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

**விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2010**


## நாடக விழா

டெங்கு நோய் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வலி.தெற்குப் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் உடுவில் மல்வம் டொன்பொஸ்கோ இளைஞர் ஒன்றியத்தினால் நடத் தப்படும் நாடக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிக்கு நடைபெறவுள்ளது. (ற)


**சேவை**

அக்டோபர் 13ந் திகதி தமிழ் நாடு (இந்தியா) ற்கான 14 நாள் Tour முன்பதிவு தற்போது நடைபெறுகிறது. ரூபா 65,000/=(விசா+விமானபயண சீட்டு + Transport +Hotel) மற்றும் மலிவான விலையில் அனைத்து நாடுகளிற்குமான விமான பயணசீட்டுகள், UKற்கான Student, Dependent Visa ஒழுங்குகள்.
Racas Travels & Tours Pvt Ltd.
No. 7 /1, W.A. Silwa Mawatha, Wellawatta.
T.P - 077 3152327, 011 2583575

**வீடு வாடகைக்கு தேவை**

நெல்லியடி, பருத்தித்துறைப் பகுதியில் 3 அங்கத்தவர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. முற்பணம் வழங்கப்படும்.
தொடர்பு:- 0217914866, 0773845252

**தேவை**

Isuzu வாகனங்கள் உதிரிப்பாகங்களை விற்பனை செய்வதற்கு அனுபவம் வாய்ந்த விற்பனையாளர் தேவை.
T.P.NO:0777863024

**BANK SPONSORSHIP**
செய்து தரப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும்.
Hotline:
0713 588 266

**அமெரிக்க வீஸா லொத்தர்**

மணமுடிக்காதவர் விண்ணப்பிக்க. GCE O/L (பூரண சித்தி) தேவை, (*conditions apply)
1. அமெரிக்க வீஸாவிற்கென ஸ்ருடியோவில் எடுத்த கலர் படம் ஒன்றுடன் ஆங்கிலத்தில்: 2. FULL NAME, 3. DATE OF BIRTH, 4.PLACE OF BIRTH, ADDRESS, PHONE, EMAIL (தேவைப்படின் செய்து தரப்படும்.)
BBS Netting, A/C 7244197 Bank of Ceylon வங்கியில் பணம் இட்ட ரசீது. அல்லது மணிஓடர் Director, BBS Netting, Dehiwala Post office ல் பெறுவதற்கு.
கட்டணம் 475/- (Closing Date 03/11/2010)
30/10/2010 முன் கிடைக்கும் வண்ணம் தபாலில் அனுப்பவும்.
Director, BBS Netting, 3/14, PINWATTA ROAD, DEHIWALA.

அமெரிக்க வீஸாவை லொத்தர் மூலம் பெற்றுச் செல்லவிருப்பவர்களுக்கு! அதிமுக்கிய விபரங்களுடன் ஆங்கிலப் புத்தகம் ஒன்று எம்மிடமுண்டு.
Call 0775811106 WWW.BBSNETTING.COM


## பொதுமக்களுக்கான முக்கிய அறிவித்தல்
## அற்றோனித் தத்துவத்தை ரத்து செய்தல்

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் கொழும்பு 06, வெள்ளவத்தை இல.39 விவேகானந்த வீதியில் வசித்த குமாரசாமி பாலசுப்பிரமணியம் 15.09.2010 அன்று கொழும்பில் காலமானார்.

இதனால் திரு.வரதராசா ஞானகணேசன், பிரதான வீதி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை என்பவருக்கு 30ஆம் திகதி தை மாதம் 2010ஆம் ஆண்டு 2742 என்ற இலக்கத்தில் வழங்கப்பட்ட அற்றோனி தத்துவம் செல்லுபடியற்று விட்டது.

மேற்படி 2742 இலக்க அற்றோனி தத்துவம் வரதராசா ஞானகணேசனுக்கு யாழ்ப்பாணம் C.பொன்னம்பலம் வீதியில் உள்ள கீழ்க் கண்ட வரி மதிப்பு இலக்கங்களை

(33, 141, 141 1/1, 141½, 143, 145, 151, 153, 155, 157, 159, 161) கொண்ட ஆதனங்களை பராமரிப்பதற்கு 1)Dr.சிவானந்தி நாகேந்திரன், 2) ஜயந்தா நாகேந்திரன், 3) குமாரசாமி பாலசுப்பிரமணியம் என்பவர்களால் இந்த அற்றோனித் தத்துவம் வழங்கப்பட்டதாகும்.

இந்த அற்றோனி தத்துவம் 15.09.2010இல் இருந்து செல்லுபடியற்று ரத்துசெய்யப்படுகிறது என அறியத் தருகிறேன்.

Dr.சிவானந்தி நாகேந்திரன்
39,விவேகானந்த வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு - 06.

(சி/571262)


**STUDY IN UK**

* விசா பெற்றுக்கொண்ட பின்பே சகலவிதமான கட்டணங்களும் அறவிடப்படும். இலண்டன், மலேசியா, சைப்பிரஸ், பெலாரஸ், அயர்லாந்து ஆகிய நாடுகளில் தொழில் வாய்ப்புடன் கூடிய வேலைவாய்ப்பு.
* சைப்பிரஸ் இல் கல்வி 100% விசா உத்தரவாதம் விசா பெற்ற பின் கல்லூரிக் கட்டணம் செலுத்தும் வசதி.
* பகுதிநேர வேலை ஒழுங்குகள்
* Sponsor Arrangement

(104121)

* O/L ஆங்கிலத்தில் தேர்ச்சி இல்லாதவர்களுக்கு நேரடி நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்பட்டு U.K செல்லக்கூடிய வசதி
* Sponsor ஆல் விசா நிராகரிக்கப்பட்டவர்களுக்கு 100% உத்தரவாதத்துடன் Sponsor ஏற்பாடுகள்.
* மத்திய கிழக்கு நாடுகள் உட்பட சகல நாடுகளுக்குமான ஆவணங்கள் தகுந்த முறையில் செய்து Visa பெற்றுத் தரப்படும்.

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*
இல.533, ஸ்ரான்லி றோட், இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
(ஆரிய குளம் சந்திக்கருகாமை)
T.P. 021 4910436 Office, 077 3462811, 077 8098592

**English**
- English for Higher Studies
- Communicative English

**IT & Computing**
- ACS(Australian Computer Society Diploma of IT)
- BCS(The Charted Institute for IT)-(UK) Programme
- ICDL, GIT, Java Programming.

**Vocational Training**
- Certificate in Welding Technology
- Certificate in Aluminium Fabrication
- Certificate in Domestic Electrical Technology
- Certificate in Electrical & Electronics

**Engineering**
- BEng Electronics and Communications Engineering
- BEng Mechatronics
- BEng Mechanical Engineering
- BEng Engineering Design Management
- BEng Automotive Systems Engineering
- BEng Naval Architecture
- BEng Ocean Engineering
- BEng Marine and Offshore Systems

- International Technology Foundation Programme

**Management**
- BSc. International Transportation Mangement & Logistics
- Management Foundation Programme

Win a Scholarship by registering before 15th October 2010

Programme commencement 18th October 2010

**OL, AL பிறகு அடுத்தது என்ன ?**

பாடசாலை கல்வியின் பின் உங்கள் எதிர்காலத்தை பற்றி சிந்தித்தீர்களா ?



**Higher Education or a job or job+Education or go overseas?**

*Explore Choices, Options and Opportunities available and take the right decision at the right time.*

**FREE SEMINARS**

| | | |
|---|---|---|
| October 9, 2010 | 9.30 am | Jaffna |
| October 9, 2010 | 3.00 pm | Manipay |
| October 10, 2010 | 9.30 am | Point Petro |
| October 10, 2010 | 3.00 pm | Chawakacheri |

**Reserve Your Seat NOW**
for more information
077 9 710 339

**CINEC**
Jaffna Campus
BRANCH OF CINEC MARITIME CAMPUS

CINEC Jaffna Campus, KKS Road, Maruthanamadam.
Tel: 021 4 925 925
infojaffna@cinec.edu


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

25 ஆவது வருடம்
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



வெள்ளிவிழாவை
முன்னிட்டு

# எழுத்தாக்கப் போட்டிகள்

உதயன் நாளிதழ் தனது 25 ஆண்டுகள் நிறைவுநாள் நிகழ்வைச் சிறப்புடன் கொண்டாடும் நோக்குடன் எழுத்தாக்க ஆர்வமுடைய உதயன் வாசகர்களிடையே பின்வரும் திறனறியும் போட்டிகளை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

1. சிறுகதை
2. புதுக் கவிதை
3. மரபுக் கவிதை
4. கட்டுரை

### பரிசுகள்

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவாகும் ஆக்கங்களுக்குப் பின்வரும் வகையில் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூன்று இடங்களுக்கும் முறையே:-

முதலாம் இடம் ரூபா 25,000/-
இரண்டாம் இடம் ரூபா 15,000/-
மூன்றாம் இடம் ரூபா 10,000/-

தெரிவு செய்யப்படும் மேலும் 08 ஆக்கங்களுக்குச் சான்றிதழ் வழங்குவதுடன் தெரிவாகும் அனைத்து ஆக்கங்களும் உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும்.

### சிறுகதை ஆக்கம் - நிபந்தனைகள்

- சிறுகதை ஒவ்வொன்றும் சமகால சமூகப்பண்பியல் உணர்வுகளை வெளிப்படுத்துவனவாய் மானிட மேன்மையை அவாவுவனவாய் அமைதல்வேண்டும்.
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட எத்தனை சிறுகதைகளையும் எழுதலாம். சிறுகதை எழுதப் பட்ட தாளில் பெயர், முகவரி என்பவற்றை எழுதுவதைத் தவிர்க்கவும். தனியான தாளில் பெயர், முகவரி என்பவற்றை எழுதி இணைக்கவும்.

### கவிதை ஆக்கம் - நிபந்தனைகள்

- கவிதைகள் யாப்பமைதி பேணுபவையாகவோ, புதுக்கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக்கவிதை, புதுக்கவிதை இரண்டும் தனித்தனிப் பிரிவாகத் தெரிவு செய்யப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும்.
- கவிதைகள் சமூகப் பிரஞ்ஞை உடையனவாய் மானிடத்தின் மேன்மையை அவாவுவன வாய் அமையவேண்டும்.
- இலக்கண வழுக்கள் சொல் / எழுத்துப் பிழைகளுக்குப் புள்ளிகள் கழிக்கப்படும்.
- கவிதைகள் 40 அடி / 60 வரிகளுக்கு மேற்படாதவனவாய் அமையவேண்டும்.

### கட்டுரை ஆக்கம் - நிபந்தனைகள்

பின்வரும் விடயப் பரப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து கட்டுரை ஆக்கப்படுதல் வேண்டும்.

1. மூன்றாம் உலகநாடுகள் எதிர்நோக்கும் பிரச்சனைகளும் தீர்வுகளும்
2. புலம் பெயர்தல் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வாகுமா?
3. எதிர்கால நோக்கில் தமிழர் விஞ்ஞானம்
4. ஈழத்தில் மெல்லத்தமிழ் இனி ..... !
5. தமிழ்ப் பெண்கள் உண்மையில் விடுதலை பெற்றுள்ளார்களா?

எழுதப்படும் கட்டுரைகள் A4 தாளில் அச்சிடப்பட்டதெனின் 06 பக்கங்களுக்கு மேற்படா திருத்தல் வேண்டும். கையெழுத்தெனின் A4 தாளில் 06 பக்கங்களுக்குள் உள்ளடக் கத்தக்கவாறு அச்சிட்டுப்பெறும் வகையில் எழுதப்படுதல் வேண்டும்.

### பொது நிபந்தனைகள்

- ஆக்கங்கள் தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.
- ஆக்கம் ஒவ்வொன்றும் தனது சொந்த ஆக்கம் என்பதையும் முன்னர் எப்பொழுதும் வெளியிடப்படாததும், வேறெவரது ஆக்கமும் அல்ல என்பதையும் உறுதி செய்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்பிவைக்கும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் சிறுகதை / புதுக்கவிதை / மரபுக்கவிதை / கட்டுரை என்பதைக் குறிப்பிடவும். (தேவையற்றதை நீக்கிவிடவும்)
- இத்துடன் இணைத்துள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி அனுப்பும் ஆக்கங்களே பரிசீல னைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
- ஆக்கங்கள் யாவும் 15.10.2010ந் திகதிக்கு முன்னர் உதயன் பணிமனைக்குக் கிடைக்கக் கூடியதாக அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். உதயன் விண்ணப்பப் படிவம் இணைக்கப்படாதவையும் குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் ஆக்கங்களும் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- ஆக்கங்கள் கையெழுத்தாகவோ அச்சிடப்பட்டனவாகவோ அமையலாம்.
- உதயன் நிறுவனத்தினர் மற்றும் சகோதர நிறுவனங்களில் பணிபுரிவோர் இப் போட்டிகளில் பங்கு கொள்ளமுடியாது.

**உதயன் வெள்ளிவிழா – 2010**
**எழுத்தாக்கப் போட்டிகள் விண்ணப்பப்படிவம**
சிறுகதை/ புதுக்கவிதை/ மரபுக்கவிதை/ கட்டுரை
(தேவையற்றதை கீறிட்டு நீக்குக)

1. எழுத்தாளர் பெயர் : ..........................................
2. புனைபெயர் இருப்பின் : ..........................................
3. முகவரி : ..........................................
4. ஆக்கத்தின் தலைப்பு: ..........................................

இது எனது சொந்த ஆக்கம் என்பதையும் இதற்கு முன்னர் எவ்வழியிலும் இது வெளியிடப்படவில்லை என்பதையும் இது வேறு எவரது ஆக்கமும் அல்ல என்பதையும் இதன்மூலம் உறுதி செய்கிறேன்.

உறுதிப்படுத்துபவர். கையொப்பம்

# ஒற்றையா? இரட்டையா? (ஜோக்)

ஒருவர் நிறை போதையில் பிறப்பு இறப்பு பதிவு அலுவலகத்துக்கு வந்தார். வந்தவர் சொன்னார்... இங்கே இருக் கும் இருவருக்கும் வணக்கம் - எனக்கு இரட்டைக் குழந்தைகள் சற்று நேரத்துக்கு முன்னர் பிறந்திருக்கின்றன. அந்த இரண்டு குழந்தைகளினதும் பிறப்பை பதிவு செய்து, பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் எடுக்கவேண்டும் எனவே பதிவாளர் இருக்கிறாரா என்று கேட்டார். அதற்கு அங்கே இருந்த ஊழியர் சொன்னார்!

"பதிவாளர் உள்ளே இருக்கிறார். தாராளமாக உங்கள் பிள்ளைகளின் பிறப்பை பதிவு செய்து கொள்வலாம். அதற்கு முன்னர் உங்களுக்கு ஒரு விட யத்தை நான் தெளிவுபடுத்த வேண்டும். நீங்கள் இங்கே இருவர் இருப்பதாக நினைத்து இருவருக்கும் வணக்கம் என்றீர்கள். அது தவறு. இங்கே நான் ஒருவன் தான் இருக்கிறேன் என்றார்.

வந்தவர் ஆச்சரியமாக "என்ன உண்மையாகவே ஒரே ஆள் தானா இங்கே இருக்கிறீர்கள்" என்று கேட்டார். ஊழியர் உறுதியாகச் சொன்னார். "ஆம் நான் ஒருவன் மட்டும் தான் இங்கேயிருக்கிறேன்."

வந்தவர் சொன்னார்:- அப்படி என்றால் நான் வீட்டுக்குப் போய் நன்றாகப் பார்த்து விட்டு வருகிறேன். எனக்கு பிறந்திருப்பது ஒரு குழந்தையா? அல்லது இரட்டை குழந்தைகளா?என்பது சந்தேகமாக இருக்கிறது!"

தமிழ்.

# அழகான சாப்பாட்டறை

பண்டிகைக் காலம் ஆரம்பித்து விட்டது. நத்தார், தைப்பொங்கல், சித்திரைப் புத்தாண்டு முடிந்து விட்டாலும் தீபாவளி இனி வரப்போகிறது. இந்தப் பண்டிகை காலங்களின்போது வீட்டிற்கு வரும் விருந்தினரை வரவேற்பதும் உபசரிப்பதும் தனியான வேலையாகி விடும்.

விருந்தினர்கள் வரும் போது வரவேற்பறை மட்டுமல்ல சாப்பாட்டறையும் நேர்த் தியாக இருப்பது அவசியம். சாப்பாட்டறை என்பது சாப்பிடுவதற்கு உரிய இடம் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் அது சாப்பிடுவதற்கு மட்டுமல்ல அனைவரும் நன்றாகக் கூடிக்குலாவி இருந்து மகிழும் இடமாகும்.

அதன் அலங்காரம் உங்களது விருந்தினரையும் குடும்பத்தினரையும் மகிழ்விக்க வேண்டும். அது தான் முக்கியம். மேசையின் அளவு, வடிவம், நாற்காலிகளைப் போடும் முறை ஆகியவற்றில் நிறைய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. பாரம்பரிய வடிவங்கள் மாறி இப்பொழுது வீடுகளில் நவீன வடிவ மேசைகளும் கதிரை களும் பயன்படுத்தப்படுகின்றன.

சாப்பாட்டறை உங்கள் சமயலறைக்கு உள்ளே அல்லது வரவேற்பறையுடன் இருந்தாலும் அதன் தனித்துவத்தைப் பேணுங்கள். அழகான படங்கள், மேசை விரிப்பு என்பன அவ்வறையை மேலும் மெருகூட்டக் கூடியன. மேசை மீது வைக்கும் பூச்சாடிக்குப் பதிலாகப் பழக்கூடையை வைக்கலாம்.

அழகான சாப்பாட்டறை உணவுக்கு மேலும் சுவையைச் சேர்க்கும்.

தமிழரசி.

# இரண்டு சாதிகள்



ஒரு சமயம் விவேகானந்தார் ஊரில் தங்கி இருக்கும்போது அவரைச் சந்திக்க இரவு பகலாகக் கூட்டம் கூட்டமாக பெரிய மனிதர்கள் உட்பட பலர் வந்தார்கள்.

அவர் ஓய்வில்லாமல் இப்படி பேசிக்கொண்டே இருக்கிறார் என்று யாரும் யோசிக்கவில்லை.

ஓர் இரவு சாதாரண மனிதன் ஒருவர் கேட்டார் சுவாமி நீங்கள் சாப்பிடாமல் தூங்காமல் இருப்பது எனக்கு வேதனையாக இருக்கிறது என்றார்.

இதைக்கேட்டதும் அவன் பயந்து விட்டான். ஊர் வழக்கத்தை எப்படி மீறி நடப்பது. ஆனால் அவர் தைரியம் சொன்னார். உனக்கு எந்தத் தண்டனையும் கிடைக்காமல் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று.

சுவாமிக்கு சப்பாத்தி தயார் பண்ணிக்கொண்டு வந்து சாப்பிடக் கொடுத்தார்.

இதைக் கேள்விப்பட்ட ஊர்க்காரர்களுக்குக் கோபம். சுவாமியிடம் நியாயம் கேட்டார்கள்.

என்னதான் இருந்தாலும் பசியும் இளைப்பும் உங்களுக்கும் இருக்கும் தானே என்றார்.

இந்த ஏழையின் அன்பு அவரை நெகிழச் செய்தது. நான் சாப்பிட நீ ஏதாவது தரமுடியுமா என்று கேட்டார். சுவாமி நான் உங்களுக்கு தர ஆசைப்படுகிறேன். ஆனால் நான் செருப்புத் தைக்கும் தொழிலாளி. சமைத்த உணவு தரமுடியாது. ஊர் வழக்கப்படி உணவு தயாரிப்பதற்கான பொருள்களை மட்டும் தரலாம் என்றார்.

பரவாயில்லை நீயே உணவு தயாரித்துக்கொண்டு வா நான் சாப்பிடுகிறேன்.

ஒரு மனிதநேய அடிப்படையில் என்மீது இரக்கப்பட்டு சாப்பாடு கொண்டுவந்து தந்தான். இவனைப்போய் தாழ்ந்த சாதிக்காரன் என்கிறீர்களே உங்களுக்கு வெட்கமில்லையா என்றார் விவேகானந்தர்.

கோ.சுவாமிநாதன்.

# புண்படுத்தாதே! பண்படுத்து

நபிகள் தனது நண்பர்களுடன் வீற்றிருக்கிறார். அவரைக் காணவந்த முதிய பெண்மணி ஒருவர் ஒரு திராட்சைப் பழக்குலையை நபிகளுக்கு வழங்கினார்.

அப்பொழுது நபிகள் தோழர்களுடன், முதியவருடனும் கதைத்துக் கொண்டே ஒவ்வொரு பழமாகத் தானே அப்பழங்களை உண்டார்.

மூதாட்டிக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. தனது பழங்களை நபிகள் உண்கிறார் என்று அந்த மகிழ்ச்சியுடன் அங்கிருந்து புறப்பட்டார்.

ஆனால் தோழர்களுக்கு ஆச்சரியம். ஒரு ஈச்சம்பழமானாலும் எம்முடன் பகிர்ந்து உண்ணும் நபி. ஏன் இவ்வாறு பழக்கத்தை மாற்றிக்கொண்டார் என்று வாய்விட்டு நபியிடம் கேட்டார்கள்.

நபி சிரித்தபடியே சொன்னார். இந்தப் பழங்கள் சரியான புளிப்புடையவை. எளிதில் உண்ண முடியாதவை. வழக்கம்போல் உங்களுக்கு வழங்கும்போது நீங்கள் முகம் சுளித்து சீ...சீ... பழம் புளிக்கிறது என்று கூறி விட்டால் இந்த அன்னையின் மனம் வேதனை அடைந்துவிடும் என யோசித்தேன்.



எனவே அந்த விபரீதம் வேண்டாம் என்று அவரை மகிழ்விக்கும்படி முழுவதையும் முகம் சுளிக்காமல் நானே உண்டு விட்டேன் என்று பதிலளித்தார்.

இக்கருணை உள்ளம் தான் நபிகளின் புகழுக்கும் காரணம்.

சு.கி.சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்போடியா இனப்படுகொலை விவகாரம்:

## 30 வருடங்களின் பின் போர்க் குற்ற விசாரணைக்கு வழிவகுத்த புலம் பெயர்ந்தவர்களின் போராட்டம்

தெற்கு ஆசியாவின் மிகக் கொடிய கொலைகாரன் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட பொல்பொட் கம்போடியா நாட்டை 1975 - 1979 வரையான காலத்தில் ஆட்சி செய்தான். இக்காலப்பகுதியில் முற்றிலும் வித்தியாசமான மார்க்சிஸ ஆட்சி முறையை பொல் பொட் புகுத்தினான். இவனுடைய ஆட்சியில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 20 லட்சம் என்று மதிப்பிடப்படுகிறது.

கெமர் ரூஜ் என்று பெயரிடப்பட்ட பொல் பொட்டின் இராணுவம் 17.04.1975ஆம் திகதி கம்போடியத் தலைநகர் நொம்பென்னைக் கைப்பற்றித் தனது ஆட்சியைத் தொடங்கியது. ஆட்சியைக் கைப்பற்றிய சில மணி நேரத்தில் நாட்டின் பெயரைக் கம்பூச்சியா என்று பொல்பொட் பெயர் மாற்றம் செய்தான்

அதே நேரத்தில் நாட்டின் பெருநகரங்கள், சிறு நகரங்கள் அனைத்தையும் வெறுமையாக்கும் படி தனது இராணுவத்துக்குப் பொல் பொட் உத்தரவு பிறப்பித்தான். நகரங்கள், கிராமங்கள் அனைத்திலும் வாழ்ந்த மக்கள் அடித்து விரட்டப்பட்டனர். நாட்டின் விவசாயப் பகுதிக்கு அவர்கள் கொண்டு செல்லப்பட்டனர்.

கம்பூச்சியாவில் பணப் புழக்கம் முற்றாகத் தடை செய்யப்பட்டது. பணக் கொடுக்கல், வாங்கல்கள் நிறுத்தப்பட்டன. பணத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. சந்தைகள் யாவும் அழிக்கப்பட்டன. வங்கிகள் மூடப்பட்டன.

ஒரு வியப்பூட்டும் மனித சமுதாயத்தை மிகவும் பிற்போக்கான கொள்கைகள் மூலம் உருவாக்க பொல்பொட் முயற்சி செய்தான். பாரிஸ் நகரில் படித்துப் பட்டம் பெற்றாலும் பொல் பொட் கல்வியையும் கல்விச் சமுதாயத்தையும் அறவே வெறுத்தான். பணக் கொடுக்கல் வாங்கல் அற்ற விவசாயச் சமுதாயத்தை உருவாக்கும் திட்டத்தை பொல் பொட் நடைமுறைப் படுத்தினான்.

நாட்டின் விவசாய நிலங்களுக்கு விரட்டப்பட்ட மக்கள் கமச் செய்கையிலும் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட ஆயுத முனையில் வற்புறுத்தப்பட்டனர். குடும்பங்கள் ஒன்றாக வாழ அனுமதிக்கப்படவில்லை. கணவன்மனைவியர் பிரிக்கப்பட்டு வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

இளம் வயதினரை அவனது அரசு பொறுப்பேற்றுக் கொண்டது. அவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட மார்க்சிஸ லெனினிஸக் கோட்பாடுகளுக்கு அமைவாக வளர்க்கப்பட்டனர். நாட்டில் வாழ்ந்த புத்த பிக்குகளும் கிறிஸ்தவப் பாதிரிமாரும் கொல்லப்பட்டனர். முன்னாள் அரசியல்வாதிகள் இராணுவ அதிகாரிகள் ஆகியோரும் கொன்றொழிக்கப்பட்டனர்.

பொல்பொட் ஆட்சிக்கு வர முன்பு கம்போடியாவில் 60,000 புத்த பிக்குகள் இருந்தனர் எனவும் ஜனவரி 1979இல் அந்த ஆட்சி முடிவுக்கு வந்த போது 3,000 பிக்குகள் மாத்திரம் உயிருடன் இருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் சிறுபான்மை மக்கள் என்றொருவரும் இல்லை என்று பொல் பொட் பிரகடனம் செய்தான். வியட்நாம், சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து கம்போடியா வந்து குடியேறிய சிறு பான்மையினரின் தாய் மொழிப் பாவனை தடை செய்யப்பட்டது. தடையை மீறித் தாய்மொழியைப் பயன்படுத்துவோருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

இஸ்லாமிய மதத்தை பின்பற்றும் சம்பா என்ற இனத்தவர்கள் பொல்பொட் அரசின் முக்கிய இலக்காக இருந்தனர். இவர்கள் 18ஆம் நூற்றாண்டில் வியட்நாமில் இருந்து வந்து கம்போடியாவில் குடியேறியவர்கள். இவர்கள் தமது மதம், மொழி, பண்பாட்டு அடையாளங்களை விட்டுக் கொடுக்க மறுத்தனர்.

பொல் பொட்டின் கெமர் ரூஜ் இயக்கம் சம்பா இனத்தவர்களைப் படுகொலை செய்வதில் தீவிரமாக ஈடுபட்டது. இரண்டு லட்சம் பேரைக் கொண்ட சம்பா மக்களின் எண்ணிக்கை சில ஆயிரங்களாக குறைக்கப்பட்டது. விவசாயப் பகுதிகளுக்கு விரட்டப்பட்ட பல்லாயிரக் கணக்கான முன்னாள் அரச அதிகாரிகள், வர்த்தகர்கள், வங்கி ஊழியர்கள், மருத்துவர்கள் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பலர் பெரிய முகாம்களில் அடைக்கப்பட்டனர். ஹிட்லர் காலத்தில் யூதர்கள் அடைக்கப்பட்ட முகாம்களுக்கு நிகராக அவை இருந்தன.

இப்படி அடைக்கப்பட்டவர்கள் சாகும் வரை விவசாயப் பணியாற்றும் படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். நோயுற்றவர்கள் சிகிச்சை அளிக்கப்படாமல் அப்படியே சாக விடப்பட்டனர். கடும் வேலை காரணமாக இறப்பு விகிதம் உயர்ந்தது.

நோய், உணவுப் பற்றாக்குறை, பழக்கமில்லாத கடின வேலை, இராணுவக் காவலர்களின் தாக்குதல்கள், மலேரியா என்பனவற்றால் நாளாந்தம் உயிரிழப்பு மிக மோசமாகியது. விவசாயச் செய்கை, கால்நடைப் பராமரிப்பு, சதுப்பு நிலங்களை நன்னிலமாக்குதல் ஆகிய பணிகளுக்கு அதிகாலையில் முகாம் வாசிகள் விரட்டிச் செல்லப்பட்டனர் எனவும் அவர்களிடம் 12 மணி நேர வேலை வாங்கப்பட்டது எனவும் பிற்காலத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்களுக்குச் சிறிதளவு சோறும் ஒரு கருவாட்டுத் துண்டும் உணவாக வழங்கப்பட்டன. இரவு நெருங்கியதும் வேலைகள் நிறுத்தப்பட்டு முகாம்களுக்கு அவர்களை இராணுவத்தினர் கூட்டிச் செல்வார்கள். பின்பு நிம்மதியாக உறங்க விட மாட்டார்கள். ஒரு மணிநேரம் மார்க்சிஸ போதனை வகுப்புகளுக்கு அவர்கள் சென்றாக வேண்டும்.

கம்போடியா நடப்புக்களை சர்வதேச சமூகம் கவனத்தில் எடுக்கத் தவறியதோடு உதாசீனம் செய்யவும் தலைப்பட்டது. அயல்நாடான தாய்லாந்து ஊடாக இங்கு நடக்கும் மனிதப் படுகொலை நிகழ்வுகள் வெளியுலகிற்குக் கசிந்தன. பிரிட்டன் அரசு, ஐ.நா. மனித உரிமை ஆணையத்திடம் கம்போடியா பற்றி முறைப்பாடு செய்தது.

ஆனால், ஐநா செயற்பட மறுத்ததனால் வெளியுலகத் தொடர்பற்ற நாடாகக் கம்போடியா காணப்பட்டது. தபால் மற்றும் தொலைத் தொடர்புகள் நிறுத்தப்பட்டன. பிற நாடுகளுடனான இராஜதந்திரத் தொடர்புகள், வர்த்தகத் தொடர்புகள், போக்கு வரத்துக்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டன.

மக்கள் அடைக்கப்பட்ட முகாம்களில் விசாரணைகள், சித்திரவதைகள், மரண தண்டனைகள் என்ற மூன்று நடவடிக்கைகளும் நாளாந்தம் பொல் பொட்டின் அதிகாரிகளால் நடத்தப்பட்டன. முகாம் வாசிகள் அனைவரும் குற்றவாளிகள் என்று முதற்கண் தீர்மானிக்கப்பட்டது. இந்த அடிப்படையில் விசாரணைகள் நடந்தன.

சித்திரவதைக்கு ஒரு விசேட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தனி மனிதன் தன்னைச் சுத்திகரிக்க உதவும் வழிமுறையாகவும், சமுதாயம் தீயவரை ஒழித்துக்கட்டும் செயற்பாடாகவும் சித்திரவதைகள் முன்னெடுக்கப்பட்டன.

பொல் பொட் சீன ஆதரவு பெற்ற மாக்சிஸவாதி. அவனுடைய இராணுவ அதிகாரிகள் சீனாவில் பயிற்றப்பட்டனர். சீன ஆட்சியாளர்கள் தமது நாட்டில் நடைமுறைப்படுத்திய சித்திரவதை முறைமைகளைப் பொல் பொட் கம்போடியாவுக்கு அறிமுகம் செய்து வைத்தான். நாடு முன்னேற வேண்டும் என்றால் அது பின்னோக்கிச் செல்ல வேண்டும் என்ற பிற்போக்குக் கருத்திற்கு பொல்பொட் முக்கியத்துவம் கொடுத்தான்.

இனிமேலும் பொறுக்க முடியாது என்ற கட்டம் தோன்றியதால் 1979 ஜனவரியில் கம்போடியாவுக்குள் வியட்நாம் இராணுவம் புகுந்தது. அத்தோடு பொல் பொட் ஆட்சி முடிவுக்கு வந்தது. சீனா உதவிக்கு வரும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்து விட்டது.

வியட்நாம் ஆக்கிரமிப்பு நீடிக்கவில்லை. பொல் பொட்டுக்குக் காட்டாத எதிர்ப்பைச் சர்வதேசம் வியட்நாம் ஆக்கிரமிப்பிற்கு எதிராகக் காட்டியது. வியட்நாம் ஆட்சியின் கீழ் நாடு ஓரளவு இயல்பு நிலைக்குத் திரும்பியது.

வியட்நாமின் வெளியேற்றத்தின் பிறகு ஐ.நாவின் தலைமையில் அமைதி நடவடிக்கைகளும் பொதுத் தேர்தல்களும் கம்போடியாவில் நடத்தப்பட்டன. இதில் ஜப்பான் முக்கிய பங்களிப்பு செய்தது. அப்போது ஐநாப் பணியாளராகக் கடமை புரிந்த [illegible] கம்போடிய


1980 ஆம் ஆண்டு தமது சகாக்களுடன் பொல்பொட்.

விவகாரத்தில் தீவிர கவனம் செலுத்தினார்.

பொதுத் தேர்தல்களுடன் புதிய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. பொல் பொட் ஓரங்கட்டப்பட்டாலும் அவனுடன் இணைந்து செயற்பட்ட முக்கிய தலைவர்கள் புதிய அரசில் பதவிகளைக் கைப்பற்றினர். பிளவுகளை இல்லாமல் செய்வதற்கும் மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் பழைய குற்றவாளிகளின் இணைப்பு அவசியம் என்று நியாயப்படுத்தல் வாதம் ஒன்றை அரசு முன்னெடுத்தது.

பொல் பொட் காலப்போக்கில் நோய்வாய்ப்பட்டு இறந்த பின்பும் கெமர் ரூஜ் அதிகாரிகள் போர் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட வேண்டும் என்ற குரல் ஓயாது ஒலித்தது. மனித உயிரின் மேன்மையைப் பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு சர்வதேசத்திற்கு எப்பொழுதும் உண்டு என்றும் வாதிடப்பட்டது.

கம்போடியாவின் பல பாகங்களில் அடையாளம் இல்லாத பல மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இறந்தோர் எண்ணிக்கை பற்றிய கணக்கெடுப்பில் 20 லட்சம் தொடக்கம் 30 லட்சம் வரையானோர் பொல் பொட் ஆட்சியில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டது.

கம்போடியாவில் இனப்படுகொலைக் காட்சியகங்கள் திறக்கப்பட்டன. இறந்தோரின் மண்டை ஓடுகளும் புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. ஆனால், போர்க் குற்ற விசாரணைகள் தொடங்கப்படாமல் இழுத்தடிப்புக்களை ஐ.நா. மேற்கொண்டது. கம்போடிய அரசு ஒத்துழைப்பு வழங்க மறுத்ததும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

இறுதியாக 30 வருடங்கள் சென்ற நிலையில் ஐ.நா நியமித்த தீர்ப்பாயம் கம்போடியா தொடர்பான போர்க் குற்ற விசாரணைகளை ஆரம்பித்தது 2010 ஜூலை 20ஆம் நாள் கெய்ங் குவெக் ஏவ் அல்லது தோழர் டுச் என்று அழைக்கப்பட்ட அதிகாரி மனித குலத்திற்கு எதிராகக் குற்றங்கள் புரிந்த குற்றவாளியாகக் காணப்பட்டான்.

முன்னாள் பள்ளி ஆசிரியரான இவன் தலைநகர் நொம்பென்னில் இருந்த துவொல் சிலெங் தடுப்பு முகாம் பொறுப்பதிகாரியாக இருந்தான். சித்திரவதை புரிவதில் சாதனை படைத்தான். 14,000 வரையிலான ஆண், பெண், சிறுவர்களை இவன் தெரிவு செய்து கொலைக்களம் அனுப்பினான் என்று நிரூபிக்கப்பட்டது.

இதுவரை இவன் ஒருவன் தான் விசாரணை செய்யப்பட்டுக் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளான். ஐ.நா அதிகாரி ஒருவர் இது பற்றிக் கூறுகையில், ''காலம் போர்க் குற்றச் செயல்களை மூடி மறைக்கும் என்ற எண்ணம் முற்றிலும் தவறானது'' என்றார். அத்தோடு இன்னும் விசாரணைகள் தொடரவிருக்கின்றன என்றும் தெரிவித்தார்.

2010 செப்ரெம்பர் நடுப்பகுதியில் மேலும் நால்வர் மீது போர்க்குற்றங்களை ஐ.நா சுமத்தியுள்ளது. இந்த நால்வரும் பொல்பொட்டுக்கு நெருக்கமானவர்கள். தாம் படுகொலைகளைச் செய்ததோடு படுகொலைகளுக்கு ஊக்குவிப்பும் வழங்கியவர்கள்.

- க. வீமன் -

நுவொன் 'சியா இயன்ங் செரி' ஆகிய நால்வரில் இருவர் பொல் பொட்டின் 2ஆம், 3ஆம் நிலை அதிகாரிகளாக இருந்தவர்கள்.

இலங்கை மீதும் போர்க் குற்றங்கள் சுமத்தப்பட்ட போதும் விசாரணைகள் தற்சமயம் உறக்க நிலையில் இருக்கின்றன. இலங்கைக்கு அனுசரணை வழங்கும் நாடுகள் இதற்குத் துணை போகின்றன. சர்வதேச நோக்கிலும் போக்கிலும் மாற்றம் நிகழும் போது விசாரணைகள் முனைப்புப் பெற வாய்ப்புண்டு.

30 வருடங்கள் சென்ற பின்பும் கம்போடியாவின் இனப் படுகொலை விவகாரம் கிடப்பில் போடப்படாமல் இருப் பதற்கு பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளில் வாழும் புலம்பெயர் கம்போடியர்களின் நீதிக்கான போராட்டம் முதற்காரணமாக அமைகிறது.✱

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கில் மீள்குடியமர்வு செவ்வாய், வியாழனில் பதிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.3

உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் வடமராட்சி கிழக்குப் பகுதி மக்கள் மீளக் குடியமர்வதற்கு வாரத்தில் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் பதிவுகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ரி.திருலிங்கநாதன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கியிந்த வடமராட்சி கிழக்கின் கிராம அலுவலர் பிரிவுகளான செம்பியன்பற்று வடக்கு மற்றும் தெற்கு, மருதங்கேணி, வத்திராயன் , உடுத்துறை, ஆழியவளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் மீளக் குடியமர ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இவர்களுக்குக் கடந்த 21,23,28 ஆம் திகதிகள் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டது.

எனினும் இந்தத் திகதிகளில் பதிவு களை மேற்கொள்ளத் தவறியோர் தமது பதிவுகளை மேற்கொண்டு மீளக்குடியமர்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

இவர்களுக்கே செவ்வாய், வியாழக்கிழமைகளில் பதிவுகளை மேற்கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினமும் 163 குடும்பங்கள் புதிதாகப் பதிவுகளை மேற்கொண்டு மீளக்குடியமர்ந்துள்ளன- என்றார். (ஒ-14)

## வெள்ளைப் பிரம்பு தின விழிப்புணர்வு ஊர்வலம்

### வாழ்வகம் ஏற்பாட்டில் நடக்கும்

சுன்னாகம், ஒக்,3

விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகமும் சுன்னாகம் லயனஸ் கழகமும் இணைந்து வெள்ளைப்பிரம்பு தினம் குறித்த விழிப்புணர்வு ஊர்வலமொன்றை நடத்தவுள்ளனர். ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி வெள்ளைப் பிரம்பு தினத்தன்று சுன்னாகம் சந்தியில் ஆரம்பமாகும் இவ்வூர்வலம் கே.கே.எஸ் வீதி வழியாக சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்திலுள்ள வாழ்வகத்தைச் சென்றடையும்.

வெள்ளைப்பிரம்பு குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் அதனைத்தாங்கிச் செல்பவருக்கு வீதியில் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்துவதும் இந்த ஊர்வலத்தின் நோக்கம். விழிப்புலனற்றவர்கள் தொடர்பான சமூகத்தின் மூடநம்பிக்கைகளைத் தகர்த்து அவர்களது தகைமைகள், திறமை களை வெளியுலகுக்குத் தெரியப்படுத்துவதே எமது நோக்கமாகும் என வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தெரிவித்தார்.

அன்றைய தினம் தொடர்ந்து வாழ்வகத்தில் விழிப்புணர்வுக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-38)

## ஐ.நாவுக்குச் சென்ற....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவுக்கு பயணம் செய்தமை ''உங்களால் முடிந்ததைச் செய்து பாருங்கள்'' என அமெரிக்காவுக்கு சவால் விடும் வகையிலானதொன்றா என்பதைக் கூற முடியாதுள்ளது.

உலகின் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிடப்பட்டுள்ள, பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டியங்கும் 'லெட்'என அழைக்கப்படும் அமைப்பின் உறுப்பினர்கள் இருநூறுபேர் இலங்கையில் இருக்கின்றனர் எனத் தமக்குத் தகவல் கிட்டியுள்ளதென அமெரிக்க உளவு நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தியாவில் ஜேர்மனி பேக்கறியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுக்குப் பொறுப்பான 'லெட்' பயங்கரவாத அமைப்பின் உறுப்பினர்கள் கொழும்பிலேயே அதற்கான பயிற்சிகளைப் பெற்றனர் எனத் தகவல் கிட்டியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இன்றைய இலங்கை, பயங்கரவாத நடவடிக்கைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட தொரு நாடு; உலகில் பாதுகாப்புமிக்கதொரு நாடு என்ற பரப்புரை உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அமெரிக்காவும், இந்தியாவும் இலங்கை குறித்து மேற்குறிப்பிட்ட விதத்திலான தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

உலகின் பயங்கரவாத அமைப்பொன்றான 'லெட்' அமைப்புக்குப் பாதுகாப்பான நாடாக இலங்கை ஆகியுள்ளதென்ற கருத்து உலக ரீதியில் பரவுமானால், விடுதலைப் புலிகள் அமைப்பைத் தோற்கடித்து, தலைதூக்க ஆரம்பித்துள்ள இலங்கையின் பெயரும் புகழும் ஒரு நிமிடத்தில் சரிய ஆரம்பித்துவிடும்.

இலங்கை அரசு தொடர்ந்து அமெரிக்காவுடன் சண்டித்தனப் போக்கில் செயற்பட முனையுமானால் அதனால் பாதிப்புறப் போவது இலங்கை அரசு மட்டுமல்ல. இந்த நாடும் இந்த நாட்டு மக்களும் கூடவே. ✱


## மரண அறிவித்தல்



### கதிரன் வீரகத்தி

தாவளை, இயற்றாலை, வரணியைப் பிறப்பிடமாகவும், 3ஆம் கண்டம் வலதுகரை, முத்தையன்கட்டை வசிப்பிடமாகவும், தாவளை, இயற்றாலை, வரணியில் தற்காலிக மாக வசித்தவருமான கதிரன் வீரகத்தி 01.10.2010 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ராசம்மாவின் அன்புக்கணவரும், பாக்கியராசா (பிரான்ஸ்), பாக்கியராணி (கனடா), யோகேஸ்வரி (பிரான்ஸ்), மங்களம் (வரணி), பரமேஸ்வரி (லண்டன்), விக்னேஸ்வரி (வரணி), புவனேஸ்வரி(கரவெட்டி), சிவகுமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலா, இந்திரலிங்கம், இரவிச்சந்திரன், கந்தசாமி, கிருபாகரன், விஜேந் திரன், தயாறூபன் ஆகியோரின் அன்புமாமனாரும் நிசாந்தி, நிதர்சன், தனுசா, யசிந்தன், நிசாந்தி, கௌசி, நிருந்தன், கஜிபா, மேனி, மேனுசா, தர்சி, தாரு, தர்மி, மதுசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவளை, இயற்றாளை,
வரணி. (104109)

தகவல்:
குடும்பத்தினர்.

**மணமகள் தேவை:** 1980இல் பிறந்த 7 இல் செவ்வாய்க்குற்றமுள்ள ஆசிரிய மணமகனுக்கு அழகிய, படித்த மணமகள் தேவை.
தொடர்பு: 0718474739, 0212225255

## அருள்முருகன் திருமண பணியகம்

Doctors, Engineers உட்பட பெருமளவிலான மணமக்களதும் பெற்றோரதும் நல்லெண்ணமும் நல்லாதரவும் பெற்று வரும் அப்பழுக்கற்ற கௌரவ சேவையிது. (அரச பதிவுள்ளது) நிர்வாகம்: ஓய்வு நிலை அரச சேவையாளர்(SLTS-1) தரகரல்ல விரும்புவோர் நேரில் வருக. 03, யாழ். வீதி, சிறாம்பியடி லேன் பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.2229334

## B.O.C.Travels (Pvt) Ltd
### Subsidiary Bank Of Ceylon

இலங்கை வங்கி மேற்தரக் கிளை
1 ஆம் மாடி, ஆஸ்பத்திரி வீதி,
(யாழ்.போதனாவைத்தியசாலை முன்பாக),
யாழ்ப்பாணம்.



### யாழ்ப்பாணத்தில்...

எமது சேவைகள்

- ★ இந்தியா, கனடா, லண்டன், பிரான்ஸ், அமெரிக்கா, சுவிஸ், கட்டார், சவூதி போன்ற அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களை இங்கேயே பெற்றுக்கொள்ளலாம்.
- ★ இந்தியா, மலேசியா, பாங்கொக் போன்ற நாடுகளுக்கான விசாக்களை இங்கிருந்தவாறே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் ஏனைய நாடுகளுக்குமான விசா உதவிகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
- ★ வெளிநாட்டிலிருந்து வரும் உங்கள் உறவினர்களின் விமானச் சீட்டினை Date Change/Reconfirmation செய்துகொள்ளமுடியும்.
- ★ Renewal of Passport, Travel Insurance, Visa Letter, Hotel பதிவுகள் போன்றவற்றை எம்மிடம் செய்துகொள்ளமுடியும்.

| | |
|---|---|
| Colombo/ Chennai/ Colombo | 13,100.00 |
| Colombo/ Thiruchirapally/ Colombo | 13,400.00 |
| Colombo/ Doha | 21,000.00 |
| Colombo/ Dubai | 16,700.00 |
| Colombo/ London | 38,300.00 |
| Colombo/ London/ Colombo | 74,540.00 |
| Colombo/ Paris | 38,300.00 |
| Colombo/ Paris/ Colombo | 64,000.00 |
| Colombo/ Frankfurt | 38,300.00 |
| Colombo/ Frankfurt/ Colombo | 78,400.00 |
| Colombo/ Sydney | 53,150.00 |
| Colombo/ Sydney/ Colombo | 90,590.00 |
| Colombo/ Toronto | 79,000.00 |
| Colombo/ Toronto/ Colombo | 119,000.00 |
| Colombo/ Singapore/ Colombo | 29,000.00 |
| Colombo/ Kualalumpur/ Colombo | 28,400.00 |
| Colombo/ Bangkok/ Colombo | 29,000.00 |
| Colombo/ Rome | 38,290.00 |
| Colombo/Rome/ Colombo | 59,600.00 |

★ The above Air fares are subject to change without priornotice.
★ Conditions apply.

அன்னைவேளாங்கன்னி, ஓம் சாயிராம்
ஸ்ரீ சத்திய பாபா யாத்திரைகள் ஆரம்பம்.
தொடர்புகளுக்கு: வெள்ளவத்தை கிளை.

மேலும் வெளிநாட்டுப் பிரயாணம் சம்பந்தமான அனைத்து உதவிகளுக்கும்
**24 மணிநேர தொலைபேசி: 0727849555**

தொடர்புகளுக்கு:
இலங்கை வங்கி மேற்தரக் கிளை
1 ஆம் மாடி, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
0212224575-76
E-mail:sureshk.boctrav@galileo.lk

Head Office: Tel: 0112688154

**Branches**

| | |
|---|---|
| Fort : | 0112393155 |
| Wellawatte: | 0114505574 |
| Ratnapura: | 0452224813 |
| Kandy : | 0812205131 |

www.boctravels.com

## விசேட விலைக் கழிவுகளுடன் !

சகல விதமான கணனித் தேவைகளுக்கும்




| Assemble Computer | Option I | Option II | Others |
|---|---|---|---|
| Processor | 2.7GHz | 2.7GHz | DDR I Ram |
| Mother Board | Asus G31 | Asus G31 | IDE HDD |
| Ram | 1GB | 1GB | LCD TV Combo |
| Hard Disk | 500GB | 320GB | & |
| DVD Writer | Samsung | Samsung | Cartridges |
| Monitor | 19"LCD | 15"LCD | Ribbon |
| Key Board/Mouse | PS/2 | PS/2 | Toner |
| UPS | DCP | DCP | |
| Casing | Power Logic | Power Logic | |
| Amount | 50,400.00 | 47,850.00 | |

WITH PC INTERNET SECURITY

D-Link Building Networks for People
ADSL/ Broadband Routers
» 03 years warranty & Other Net work items

## திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். ↔ கிளிநொச்சி & வவுனியா

## European College of Higher Studies

மாணவர்களின் நலன்கருதி அவர்களுடைய அறிவினை விருத்தி செய்யும் வகையில் லண்டனில் இருக்கும் கல்லூரி களில் எமக்கு தொடர்பான கல்லூரிகளில் இருந்து அதிகுறைந்த கட்டணங்களுடன் IELTS அவசியமற்ற புதிய விசா நடை முறையினை கொண்டு வருகின்றோம்.

### எமக்கு தொடர்பான பிரதான கல்லூரிகளான

*Bicken Hall College of Computing
*London Victoria College
*Thames College of Technology
*Union College
*London Richmond College
*Interlink College

என்பவற்றுடன் இணைந்து...

- ★Business Management
- ★Hotel Management
- ★Hospitality Management
- ★Business Administration
- ★International law and order
- ★Building Construction
- ★Nursing
- ★Information Technology
- ★Computer Multimedia
- ★Computer Hardware
- ★Software


போன்ற பாடங்களையும் இதுதவிர்ந்த வேறுபாடங்களுக்குமான அனுமதியினையும் 2½ வருடத்திற்கு குறையாமல் Sponsor வசதியுடன் விசாக்களை பெற்றுத் தருகின்றோம்.

ஆரம்பக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது

தொடர்புகளுக்கு: European College of Higher Studies
315 1/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
Tel: 0773537378, 0771882507,0213734747


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்:
22.07.1964

மறைவு:
03.09.2010

## Dr.N.கோபிகிருஸ்ணன்

உலகின் ஒளிவிளக்காய்
பிறரை வாழவைத்து வாழ்ந்தவரே
ஒன்றல்ல ஓராயிரம் மாதங்கள் சென்றாலும்
எம் நெஞ்சில் நீங்காது உம் நினைவலைகள்
உறவினனாய் மட்டுமல்ல - ஓர்
வைத்தியனாகவும் எம்மை வாழவைத்தவரே
பிறர் குறை கேளாது பாரினிலே
சிறப்பாக வாழ்ந்தவரே - நீர் சிவனடியில்
அமைதிபெற வேண்டுகிறோம் இறைவனை.

கடந்த 03.09.2010 இறைபதம் அடைந்த எம் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசியிலும் ஆறுதல்தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்,
அப்பா, அம்மா,
சகோதரி லீணாறாதிகா.

(104127)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
08.01.1929



உதிர்வு:
03.09.2010

## திருமதி இராசமுத்து நவரத்தினம்
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அன்பான மனைவியாய் பாசமிகு தாயாய்
பண்பான ஆசிரியையாய் பார்போற்றும் புகழோடு
இன்பமழை பொழிந்த எம் இனிய விடிவிளக்கே
இதயத்தில் சுடராய் எந்நாளும் ஒளிர்வீரே!


கடந்த 03.09.2010 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி
சேர்ந்த எமது குடும்பத் தலைவியின்
31 ஆம் நாள் நினைவு தினமான இன்று அவரது இல்லத்தில்
நடைபெறும் மதியபோசனத்தில் அனைவரையும்
கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு.

(101782)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## சண்முகம் முத்துலிங்கம்

*முன்னாள் உடுவில் கிராமசபைத் தலைவரும், சமாதான நீதிவானும், முன்னாள் சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும், தமிழர்விடுதலைக் கூட்டணியின் (T.U.L.F.) சிரேஷ்ட தலைவர்களில் ஒருவருமாகிய* இணுவில் மேற்கைச் சேர்ந்த சண்முகம் முத்துலிங்கம் நேற்று (02.10.2010) சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - இலட்சுமிப் பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி- அபிராமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற இரத்தினத்தின் (ஆசிரியை) அன்புக் கணவரும் பவானந்தன் (கனடா), காலஞ்சென்ற சதானந்தன் மற்றும் விஜயானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மீனாம்பிகை (கனடா), டெய்சிகாதேவி (கொழும்பு), பாக்கியலீலா ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி தனலட்சுமி திவாகரன் (கனடா), திருமதி பவானி சிவானந்தராஜா (கனடா), அபிராமி (கனடா),பாமினி- சுபோதரன் (கனடா), சேந்தன் (லண்டன்) ஆகியோரின் பேரனும், திசாந், நிலாந், செந்துஜன், சிந்துஜா, சுகிந்தன், சுகிதரன் ஆகியோரின் பூட்டனும் காலஞ்சென்ற கணேஸ் மற்றும் பூமணி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, செல்லப்பா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2010) ஞாயிற்றுக் கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(104122)

தகவல்:
குடும்பத்தினர்.

''சிறிகந்தவாசா'',
இணுவில் மேற்கு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாட்டுவண்டிச் சவாரி ஒத்திவைப்பு

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பண்டத்தரிப்பு பெரியவிளான் சாவரித்திடலில் இன்று நடத்தப்படவிருந்த மாட்டுவண்டிச் சாரிப்போட்டி ஒத்திவைக்கப் பட்டுள்ளது. இப்போட்டி நடைபெறவுள்ள திகதி பின்னர் அறி விக்கப்படுமென்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஒ-16)

(முன்னர் வந்த செய்தி 14 ஆம் பக்கத்தில்)

## வெள்ளி விழா வாழ்த்து

திருமண பந்தத்தில் இணைந்து இன்று வெள்ளிவிழாக் காணும் எமது பெற்றோரைப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

**திரு. குமாரவேலு லிங்கேஸ்வரன் (சித்திரன்)**

**திருமதி லிங்கேஸ்வரன் இராஜபூபதி (மணி)**

தம்பதியினர் -



வெள்ளிவிழாக் காணும் எங்கள் பெற்றோர்
எம்மை உயிருக்குயிராக வளர்த்து
நகமும் சதையும் போல அருகே இருந்து
நல்ல வார்த்தைகளைக் கூறி
பழக்க வழக்கத்தில் நல்ல குழந்தைகளாக வளர்த்து
எம்மை வளர்த்த பெற்றோருக்கு
ஆயிரம் நன்றிகள் சொன்னாலும் போதாது,
இவர்கள் இருவரும் மேலும் பல்லாண்டுகள் வாழ
வாழ்த்துகின்றோம்.

பிள்ளைகள்: கஜீபன், ரதிகாந்த் (சுவிஸ்), கஜீபனா, நிருபன், நிருபனா (இந்துக்கல்லூரி, சாவகச்சேரி) மற்றும் சகோதரர்கள், மருமக்கள், மைத்துனர்கள் N.பாலச்சந்திரன் (உப அதிபர், இந்துக்கல்லூரி, சாவகச்சேரி) M.மனோகரன் (கனடா)

ஐயா கடை யடி., சாவகச்சேரி.

வாழ்க வளமுடன்

## 9ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர் தொண்டர்

**கந்தையா திருநாவுக்கரசு**

(சிவயோக சுவாமிகளின் அடியவரும் வடஇலங்கை சர்வோதய ஸ்தாபகரும் ஜீவதானியும்)

மலர்வு
01.03.1939

உதிர்வு
03.10.2001

03.10.2010

என் கடன் பணி செய்து கிடப்பதே

"எனையீன்றே தந்தைக்கும் தாய்க்கும்
மக்கள் இனமீன்ற தமிழ் நாடு தனக்கும்
என்னால் தினையளவு பயனேதும் கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்."

இன்று (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை வட இலங்கை சர்வோதய சேவை வளாக புஸ்பா மணி மண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் நினைவுதின நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

வட இலங்கை சர்வோதயம்,
புங்குடுதீவு.

வடஇலங்கை சர்வோதய
குடும்பத்தினர்.

(104110)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26 ★ 03 ★ 1926



மறைவு
14 ★ 10 ★ 2009

திருமதி
**சௌபாக்கியவதி சுப்பையா**

திதி : அபரபட்ச ஏகாதசி (03.10.2010)

அன்பு அம்மா!
இன்னும் சிலகாலம் இப்புவிதனில்
எம்முடன் வாழ்ந்திடாது
எமை விட்டுப் பிரிந்திட்டாலும்
எம் உயிர் உள்ளவரை தங்கள் நினைவிருக்கும்

குமரகோட்டம்,
கைதடி மேற்கு,
கைதடி.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/571568)

## யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு புதனன்று

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்.பல்கலைக்கழகத்தின் 26 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடை பெறவுள்ளது.

நான்கு அமர்வுகளாக நடைபெறவுள்ள இப்பட்டமளிப்பு விழாவில் முதல் அமர்வு முற்பகல் 9 மணிக்கும் இரண்டாம் அமர்வு முற்பகல் 11 மணிக்கும் மூன்றாம் அமர்வு பிற்பகல் 1.45 மணிக்கும் நான்காம் அமர்வு பிற்பகல் 3.30 மணிக்கும் இடம்பெறும். (ஒ-16)

## பொன்சேகாவை மாதத்தில் ஒரு தடவையே பார்வையிடலாம்

கொழும்பு, ஒக். 3

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை மாதம் ஒரு தடவையே அவரது மனைவி அனோமா பார்வையிட அனுமதிக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விசேட அனுமதி பெற்றால் மட்டுமே ஒரு தடவைக்கு மேல் பொன்சேகாவை அனோமா பார்வையிடமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ)

## சிவபூமி முதியோருக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3

முதியோர் தினத்தை முன்னிட்டு தொல் புரம் - சிவபூமி முதியோர் இல்லத்தைச் சேர்ந்த 45 முதியவர்கள் நேற்று முன்தினம் வலி.மேற்கு பிரதேச முன்பள்ளி மாண வர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

வலி.மேற்கு பிரதேச சபை சிரேஷ்ட நூலகர் பா.விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக டாக்டர் டினேஷ் ஜெயகுமாரன் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் 18 ஆண்களும், 27 பெண்களுமாக 45 முதியவர்களும் மற்றும் 156 முன்பள்ளி சிறுவர்களும் கலந்து கொண்டனர். (த-16-302)

## பல்கலைக்குத் தெரிவான வடமராட்சி கிழக்கு மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3

வடமராட்சி கிழக்கில் இருந்து பல் கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர் களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு குடத்தனை அ.த.க.பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு மாணவர் ஒன்றி யத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்நிகழ் வில் பலர் கலந்து கொண்டு மாணவர் களைக் கௌரவிக்கவுள்ளனர். (ஒ-ஐ)

## மென்பந்தாட்டப் போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்.மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நேற்றும் இன்றும் இடம்பெற விருந்த மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டி மழை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-ஐ)

## வவுனியா தமிழ் ம.விக்கு வெண்கலம்

வலி.வடக்கு, ஒக். 3

அகில இலங்கைப் பாடசாலை அணி களுக்கு இடையே தேசிய மட்டத்திலான தடகளப் போட்டிகளில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் வெண்கலப் பதக்கத்தை பெற்றுக்கொண்டது.

நேற்றைய தினம் இடம்பெற்ற 17 வய துப் பிரிவு பெண்களுக்கான குண்டெறி தல் போட்டியில் இராஜமனோகர் தர்சிகா 9.37 மீற்றர் தூரம் எறிந்து மூன்றாம் இடத் தைப் பெற்றுள்ளார்.

இந்த வெற்றியுடன் இவர் வர்ண விரு தினையும் பெற்றுக்கொண்டமை குறிப் பிடத்தக்கது.

இந்த வீராங்கனைக்கான பயிற்சிகளை வவுனியா பிரதேச விளையாட்டு அலுவ லர் கே.விஜிதரன் வழங்கி வருகின்றார். (ஒ-16)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.முன்னாள் உடுவில் கிராம சபைத் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவருமான

**சண்முகம் முத்துலிங்கம் (JP)**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றேம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு கட்சியின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி.

## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

19 ஆம் ஆண்டு



திருமதி கந்தையா
இராசம்மா

4 ஆம் ஆண்டு



அமரர் கனகசிங்கம்
பாஸ்கரன்

*மலர்வு: 07.09.1973*
*உதிர்வு: 17.10.2006*
*திதி: 03.10.2010*

இப்புவியில் நாம் வாழும் வரை
உங்கள் நினைவுகள் நிலைத்து நிற்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*16, சங்கிலியன் வீதி,*
*நல்லூர்.*

பிரிவால் துயருறும்
திருமதி கலைஞானசிங்கம்
தியாகேஸ்வரி (மகள், அன்ரி)

## கண்ணீர் அஞ்சலி



கச்சாய் தெற்கைச் சேந்தவரும்,எமது குடும்ப நண்பருமான

**சின்னத்துரை சிங்கராசா (கன்டு)**

இத்தாலியில் நேற்று (02.10.2010) சனிக்கிழமை காலமானதையிட்டு, அன்னாரின் பிரிவால் துய ருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு,எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

செல்வம் சுவல்லார்,
*நவீன சந்தை,*
*சாவகச்சேரி.*

ச.தவச்செல்வம்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

*திருமதி உமாதேவி கர்ணசாமி*



மூளாய் மேற்கைச் சேர்ந்த உமாதேவி கர்ணசாமி 30.09.2010 வியாழக்கிழமை காலமானர்.

அன்னார் திருமாணிக்கம் கர்ணசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - மீனாட்சி தம்பதியரின் இளைய மகளும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான சீவரட் ணம் கண்மணி, திருமதி பாலகிருஷ்ணன் பத்மாவதி ஆகியோ ரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி பொன்னம்மா, மாணிக்கம் சங்கரப்பிள்ளை, ஆறுமுகம் கனகம்மா ஆகியோரின் மைத்துனியும் புஸ்பராஜா (நோர்வே), லோகாஞ் சனா (ஜேர்மனி), கிருஷ்ணவேணி (லண்டன்), குணா (ஜேர்மனி) ஆகியோரின் தாயும் அருந்தவநாதன் (ஜேர்மனி), கமலநாதன் (லண்டன்), விஜயராணி (நோர்வே), ரஜீ (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் துளசிதாசன் (நோர்வே), அரவிந்தை (நோர்வே), அலர் விழி (நோர்வே), லவன் (ஜேர்மனி), லக்மி (ஜேர்மனி), அனுசாந் (லண்டன்), கீர்த்தனா (லண்டன்), உஷானி (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2010) ஞாயிற் றுக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் மூளாய் மயானத்தில் தகனஞ்செய் யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் மேற்கு,
சுழிபுரம்.

தகவல் :
மா.கர்ணசாமி
(கணவர்).

(104135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.,வவுனியா கல்வியற் கல்லூரி மாணவர் 231 பேருக்கு ஆசிரிய நியமனம்

## 6ஆம் திகதி ஜனாதிபதி கடிதங்கள் வழங்குவார்

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இருந்து வெளியேறிய 231 பேருக்கு எதிர்வரும் 6ஆம் திகதி ஆசிரிய நியமனம் வழங்கப் படவுள்ளது.

இவர்களுக்குரிய நியமனக் கடி தங்கள் எதிர்வரும் 6ஆம் திகதி ஜனாதிபதி செய லகத்தில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவினால் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற் சியை நிறைவு செய்து வெளியேறி யுள்ள 231 பேருக்கான நேர்முகத்தேர் வுகள் கடந்த 27ஆம், 28ஆம் திகதிகிளல் நடை பெற்றன. (ஒ-9)

## வடக்கில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் அவர்களுக்கு சொந்த காணி களை வழங்கும் படி அரசாங்கத்தை வலி யுறுத்துவது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற் கான அரசியல் தீர்வை தீவிரப்படுத்த அர சாங்கத்தை வலியுறுத்துவது.

(ஒ-ஐ)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மொழிவாழ்த்தை கிளிநொச்சி இந் துக் கல்லூரி மாணவிகள் வழங்கினர். அடுத்து வரவேற்புரையை கரைச்சி கலா சார உத்தி யோகத்தர் கு.றஜீபன் நிகழ்த்தி னார். தொடர்ந்து ஆய்வுரைகளை நா.தர் மராஜா (அகளங்கன்)'சுதந்திரத்திற்கு முற்பட்ட தமிழ் நாவல்களில் பெண்கள்' என்ற தலைப்பில் நிகழ்த்தினார்.

ஆய்வுரையை சுதந்திரத்திற்கு முற்பட்ட தமிழ் கவிதைகளில் பெண்கள் என்ற தலைப்பில் கலாநிதி செ.யோகராஜா நிகழ்த்தினார். அடுத்த ஆய்வுரையை கலாநிதி வ.மகேஸ்வரன் நிகழ்த்தினார். ஆய்வரங்கத்தின் இறுதி நிகழ்வாக கர வெட்டி கலாசார உத்தியோகத்தர் செல்வ சுகுணா உரை நிகழ்த்தினார்.

மழைகொட்டித்தீர்த்ததால் பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாக இருந்த விழா 3.00 மணியளவிலேயே ஆரம்பமாகியது. இதில் பிரதம விருந்தினராக கிளநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மாணவிகளின் தமிழ்த்தாய் வாழ்த்துட னும் வரவேற்பு நடனத்துடனும் விழா சிறப்பாக ஆரம்பமாகியது. திறந்த வெளி அரங்கில் நிகழ ஏற்பாடாகி இருந்த இவ் விழா மழை காரணமாக அப்புச்சி கதிரவேற் பிள்ளை அரங்கிலே இடம்பெற்றது. நிகழ் வின் தலைமை உரையை வடமாகாண பண் பாட்டலுவல் கள் திணைக்களப் பணிப்பாளர் சிறிதேவி நிகழ்த்தினார். வரவேற்புரையை கலாசார உத்தியோகத் தர் அருள் சந்திரன் நிகழத்தினார். மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாண மாணவர் களின் கலைநிகழ்வுகள் பார்வையாளர் களைக் கவர்ந்தது.

மழையின் சீற்றமும் இடத்தின் பொருத் தப்பாடு அற்ற தன்மையும் விழா பேரவளர் களி டையே ஒருவித எரிச்சலை ஏற்படுத்தி இருந்ததை அவதா னிக்க முடிந்தது.

(ஒ-ஐ-ஏ-319)

## நாடுகடந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவிகளையும் ஏழு அமைச்சர் பதவிகளை யும் உருவாக்கத் தீர் மானிப்பட்டுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசுக்கான அரசமைப்பு வரைவும் அங்கு ஏகமீனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. (ஒ-ஐ)

## குடத்தனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணல் எங்களின் சொத்து, செல்வம் முன்னைய காலங்களில் இந்த மணல் மூலம் எமது வாழ்க்கையை ஓட்டிவந்தோம்.

இன்று ஒரு கைபிடி மணலைக்கூட நாம் தொடமுடியாத நிலை. எமது வீடு களைக் கட்டக் கூட இந்த மணலை நாம் பாவிக்க முடியாத பரிதாப நிலைமை

வெளியார் எம் கண்முன்னே மணலைக் சூறையாடி பணம் சம்பாதிக்கிறார்கள். எமது செல்வம் நாளாந்தம் எம்மைவிட்டுப் போய்க்கொண்டிருக்கிறது.

இது தொடர்பாக பலதரப்புக்களிடமும் முறைப்பட்டும் எந்தப் பயனும் கிடைக்க வில்லை. எனவே தாங்களாவது மணல் அகழ் வைத் தடுத்து நிறுத்தி எமது வாழ்வா தாரத் துக்கு உதவவேண்டும். - என்று மன்றாட் டமாக அந்த மக்கள் தெரிவித்த னர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர் களுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாக மாவை சேனாதிராசாஅவர்களிடம் உறுதிய ளித்தார். (ஒ-ஐ)

## மணல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடங்கள் பள்ளமாக்கிவிட்ட காரணத்தாலும் மக்களின் எதிர்ப்பாலும் மணல் அள்ளும் இடத்தை மாற்றும்தேவை மகேஸ்வரி நிதி யத்துக்கு ஏற்பட்டது.

அதனடிப்படையில் நேற்று முன்தினம் குடத்தனைக்கு வந்த கனியவள திணைக் கள அதிகாரிகள் குடத்தனைத் திட்டியில் இனிவரும் 6 மாத காலத்திற்கு மணல் அள்ளலாம் எனக் கூறிச் சென்றுள்ளனர். எனி னும் அந்த இடத்தில் மணல் அள்ளுவதற்கு கிராம மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள் ளனர். இதனால் மணல் ஏற்றுவதற்கு நேற் றுக் காலை எந்த டிராக்டரும் செல்லவில்லை.

குடத்தனை கிராம மக்களே இந்த மணல் அகழ்ந்து வெளியே கொண்டு வந்து கொடுக்கும் பணியைச் செய்கின்றனர். புதிதாகக் குறித்து ஒதுக்கப்பட்ட இடத்தில் மணல் அகழ அவர்களுக்கும் விருப்பம் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்படு கிறது.

மணல் ஏற்றுவதற்கு மக்கள் எதிர்ப்பு மற்றும் டிராக்டர்கள் மணல் ஏற்றச் செல் லாமை என்ப வற்றை அடுத்து அப்பகுதி யில் நேற்று பெரும் பரபரப்பு ஏற்பட் டது.

உடனடியாக சம்பவ இடத்திற் குச் சென்ற மகேஸ்வரி நிதிய ஊழியர்கள், சம்பந்தப்பட்ட தரப்பு களுடன் பேசினர். அதன் பின் னர் புதிய இடத்தைக் கைவிட்டு பழைய இடத்திலேயே மணல் அள்ளலாம் என்று தெரிவிக்கப் பட்டது. இதனை அடுத்து நிலைமை வழமைக்குத் திரும்பியது.


### படிவங்கள் விற்பனையாகிறது

1. வடமாகாணசபையின் பதவி வெற்றிடங் களுக்கு பட்டதாரிகளை ஆள்சேர்ப்பு செய்வதற்கான படிவம்.
2. மகளிர் அபிவிருத்தி அலுவலர்.
3. கைத்தொழில் அபிவிருத்திச் சபை வெற்றிடங்கள்.
4. புகையிரத நிலைய அதிபர் - III

பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ்நிலையம், யாழ்ப்பாணம். வேம்படிச்சந்தி, யாழ்ப்பாணம்.

### மேல் மாடி வீடு வாடகைக்குண்டு

திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் பிரதான வீதியில் 4 அறைகள், Hall, சமையல் அறை, குளியல் அறையும், ஏனைய சகல வசதிகளையும் கொண்ட மேல் மாடி வீடு வாடகைக்குண்டு. அலுவலக உபயோகத்துக்கு விரும்பத்தக்கது.
தொடர்பு : K. யோகராஜா,
50/1, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P : 0213210423

### A/L Day Class
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் : 04-10-2010 திங்கள் 8.00 மணி
பாடம் மாறிக் கற்போருக்கு விசேட பிரிவுகள்.
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

### A/L DAY CLASS
கணக்கீடு
AP.பகீரதன் B.B.A (FM Spl)
★ வாரத்தில் ஐந்து நாள்களும் வகுப்புக்கள் (mon-Fri 8-10 Am)
★ வார இறுதியில் விசேட Paper Class (sat-sun 11-12 Am)
★ தொடர்ச்சியான பரீட்சைகளும் [10மாதிரிப்பரீட்சைகள்] அவற்றுக்கான கருத்தரங்குகளும் (Fri2.30- 5.00Pm)
★ முழுமையான பாடத்திட்டமும் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.
★ பாடம் மாறிக்கற்போர், வெளிமாவட்ட மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்.
ஆரம்பம்: 04.10.2010 திங்கள் 8.00மணி
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.யாழ்ப்பாணம்.

### A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கற்கைநெறிகள்
Advanced Dip. in Video mixing
Auto CAD
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01→09வரை)
Group Classes
CHARLES BABBAGE COMPUTER ACADEMY CBCA SRILANKA
கே.கே.எஸ் வீதி உப்புமடம் சந்தி அருகாமையில்
CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903

### விற்பனையாகின்றது
அனைத்து வகையான Medical, Nursing புத்தகங்கள் (Jaypee வெளியீடு) விஷேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.
இன்றே நாடுங்கள்.
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### விற்பனையாகின்றது
Amra Publication வெளியீடான, கணித ஆசிரிய ஆலோசகரும், உசாத்துணை நூல் ஆசிரியருமான திரு.S.நஸீர் அவர்களின்
பரீட்சை வழிகாட்டி - (O/L) 2010
புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் புள்ளித்திட்டங்களும்
அனைத்தும் பரீட்சை எதிர்பார்ப்பு வினாக்கள்
யாழ்.மாவட்ட ஏக விநியோகத்தர்
அன்னை புத்தக சாலை
யாழ்ப்பாணம் - சாவகச்சேரி
0212229881 - 0212270003

### அன்பொளி கல்வியகம்
யாழ்.இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
2011இல் தரம் 4 (தற்போது தரம் 3) மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
காலம் :- 10.10.2010 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணி
அனுமதிகளை 10.10.2010 ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளுங்கள்.
சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.
இயக்குநர்

### Quick Accounting
கணனி மூலமாக வியாபாரக் கணக்குகள் பதிவுசெய்து வியாபார இலாபநட்டக் கணக்கு, ஐந்தொகை தயாரித்துத் தரப்படும். அத்துடன் வருமானவரி, புரள்வு வரி (Turnover Tax), VAT, ESC போன்ற வரிகளுக்கான விவரத் திரட்டுக்கள் பூரணப்படுத்தியும் அவ்வரிகள் தொடர்பான ஆலோசனை சேவையும் வழங் கப்படும்.
தொடர்பு : 0752226667

### வீடு தேவை
யாழ்ப்பாண எல்லைக்குள் இரண்டு அல்லது மூன்று அறைகள் கொண்ட வீடு நீண்டகால வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ தேவைப்படுகிறது. சிறிய திருத்தவேலைகள் மேற்கொள்ளலாம். கூரை நல்ல நிலையில் இருக்க வேண்டும். வாடகை பேசித் தீர்மானிக்கலாம்.
Con.No - 0771352469
E-mail - newjaffna804@gmail.com

### காணி தேவை
யாழ்ப்பாண நகரத்தில் இருந்து 5 k.m சுற்றுவட்டத்திற்குள் 30 - 70 பரப்புக் காணி தேவைப்படுகிறது. (விலை அண்ணளவாக ஒரு பரப்பு 1,25,000ஆக இருக்க வேண்டும்) விற்கவோ அல்லது நீண்ட காலக் குத்தகைக்குக் கொடுக்கவோ விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
Con.No - 0771352469
E-mail - newjaffna804@gmail.com

### வீடு விற்பனைக்கு
கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலைக்கு அருகில் 2½ பரப்பு காணியில் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் புதிதாகக் கட்டப்பட்ட வீடு உடன் விற்பனைக்கு.
தொடர்பு : 0715397117

### e.com ISO 9001-2008 அங்கீகாரம் பெற்ற கம்பியூட்டர் கற்கைநெறிகள்
Computer Learning Center
Diploma in Microsoft Office 2007/2010
Diploma in Desk Top Publishing
Diploma in Network Engineering
Diploma in Web Technology
Diploma in Hardware Engineering
Diploma in Software Engineering
ICT, GIT Classes for O/L, A/L Students
Certificate in Internet & E-Mail
Diploma in Graphics and IT
Diploma in Data Entry
Tally Financial Accounting
CAD Interior
BIT
Microsoft CERTIFIED courses




Call : 021-7429005
No.95A Temple Road, Nallur, Jaffna. K.K.S Road, Kondavil, Jaffna.
Web: www.e-comonline.net E-Mail: e.com@esrilanka.lk


### Diploma Courses
upto 90%Discount.
Closing Date 05.10.2010
Ms Office - Rs.~~2400~~
Multimedia - Rs.~~3600~~
Accounting - Rs.~~3600~~
AutoCAD-2&3D - Rs.~~6000~~
Web Development - Rs.~~27000~~
Fast Track 01 Month
Unlimited Practicals
அனைத்து மாணவர்களுக்கும் Free
Dip. in English
ICDL DTP
MCS Supported By UNDP/JRRP
324,Palaly Road,Parameswara Junction
SMS your name & course to 772 395 895 & Get Schol.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ஸ்ரீ.கஜபாலினி, தரம் -8C,
யா/இந்து மகளிர் கல்லூரி.


சி. தாட்சாயினி, தரம் -8A,
கிளி/முழங்காவில் ம.வி


சு. கஜீபன், தரம் -4E,
யா/இந்து ஆரம்பப் பாடசாலை.


இ. கவிராஜ், தரம் -6,
யா/சந்திரபுரஸ் கந்தவரோதய ம.வி.


இ அபிநயா, தரம் -4,
யா/முத்துக்குமாரசாமி வித்தியாலயம்.


சி. பானுபன், தரம் -4B,
யா/இந்து ஆரம்பப் பாடசாலை.


சி. தர்சிஜா, தரம் -6A,
யா/இந்து மகளிர் கல்லூரி.


ம.ஜொகான்சன், தரம் -3,
யா/உடுவில் அ.த.க. பாடசாலை.

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-............................................

தரம் :-............................................

பாடசாலை :-............................................

............................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மட்டும்)

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா?76

1. கடலாதெனிய விகாரையை அமைத்த மன்னன் யார்?
2. உலகிலே மிகப்பெரிய தீவு எது?
3. ஒரு மனிதனின் சாதாரண உடல் வெப்ப நிலை எவ்வளவு?
4. இந்தியாவின் மிகப்பழமையான மொழி எது?
5. 2010ஆம் ஆண்டு உதைபந்தாட்டப் போட்டி எங்கே நடைபெற்றது?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 10.10.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா? 74 இற்கான சரியான விடைகள்

1. இந்தியா
2. பென்குயில்
3. ஒக்டோபர் -1
4. ஒக்மோபஸ்போல்
5. கண்கருவிழி

### பரிசுபெறுவோர் விவரம்

1. பா. அம்புஜன், தரம் 9A, யா/ புனித பத்திரிசியார் கல்லூரி.

2. சி. லதாங்கி, தரம் 01, யா/ துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.

3. ஸ்ரீ.கஜபாலினி, தரம்8C, யா/ இந்து மகளிர் கல்லூரி.

## விடுகதைகளும் விடைகளும்

★உணவை எடுத்திடுவாள். உண்ணாமல் வைத்திடுவாள். உடல் மெலிந்தவள் அவள் யார்? அகப்பை

★ வட்டவடிவழகி, தண்ணீரில் வாழும் அழகி, வாடி வதங்கினால் வந்திடுவாள் பந்திக்கு - அவள் யார்? தாமரையிலை

★ என்னைப் பார்த்தால் உன்னைக் காட்டுவேன். அது என்ன? கண்ணாடி

★ சுமக்க முடியாத அளவில் காய்கள் பல காய்க்கும். உமக்குத் தெரியாதோ இது தோட்ட வேலியில் நிற்கும் மரம்! அதுஎன்ன? பூசனிக்காய்

★ இரவிலே பேரிரைச்சல் இட்டுமே பறந்தலையும் மரங்களில் பொந்து தனில் மறைந்து பகல் தூங்கிவிடும்! அதுஎன்ன? ஆந்தை

யோ.விலாஜினி, தரம் -06, யா/ இந்து மகளிர் கல்லூரி

## சிறப்புமிகு சின்னங்கள்

★அன்பின் சின்னம் - தாஜ்மகால்
★அமைதியின் சின்னம் -புறா
★தொண்டின் சின்னம் - அன்னை திரேசா
★தியாகத்தின் சின்னம் -அன்னை கஸ்தூரி
★பொறுமையின் சின்னம் - கழுதை
★தந்திரத்தின் சின்னம் - நரி
★கருணையின் சின்னம் -நாய்
★ஒற்றுமையின் சின்னம் -காகம்
★ சேமிப்பின் சின்னம் - தேன்

செ. தக்ஷாயினி, தரம் 6D,
யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை.

## திராட்சைத் தோட்டத்தில் மான்

ஒரு மான், காட்டில் புல் மேய்ந்து கொண்டிருந்தது. அந்தப்பக்கமாக வந்த ஒரு வேடன், மானைப் பார்த்து விட்டான். வேடன் மானை அம்பு எய்து கொல்ல முயன்றான். அதைப் பார்த்துவிட்ட மான் உயிர் பிழைக்கப் பாய்ந்தோடத் தொடங்கியது. வேடன் மானை விடவில்லை. துரத்திக் கொண்டு அதன் பின்னால் ஓடினான். கண் முன் திராட்சைத் தோட்டம் ஒன்று தென்பட்டது. மான் அந்தத் தோட்டத்தினுள் நுழைந்தது. வேடனும் விடாமல் தொடர்ந்து அத்தோட்டத்தினுள் புகுந்தான். மானின் ஆபத்தான நிலையை ஒரு திராட்சைக் கொடி பார்த்தது. மானின் மீது அதற்கு இரக்கமும் அனுதாபமும் ஏற்பட்டது. மானை நோக்கி ''மானே வேகமாக ஓடி வந்து என்னுடைய அடர்ந்த இலைகளுக்குப் பின்புறமாகப் புகுந்து, மறைந்து கொள் வேடனால் உன்னைக் கண்டு பிடிக்க முடியாது'' எனக் கூறிற்று. மானும் அது சொன்னபடியே திராட்சைக் கொடியின் அடர்ந்த இலைகளுக்கு பின்னால், மறைந்து கொண்டது. தோட்டத்திற்குள் நுழைந்த வேடன் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். மான் இருக்கும் இடம் அவனுக்குத் தெரியவில்லை. மான் எங்கோ தப்பி ஓடிவிட்டது. என நினைத்தான். ஓடிவந்த களைப்புத் தீரச் சற்று உட்கார்ந்து விட்டு போகலாமே என நினைத்து, ஒரு மரத்தடியில் சற்று நேரம் உட்கார்ந்தான். சிறிது நேரம் சென்றது. எந்த விதமாக சலனமும் இல்லை. வேடன் போயிப்பான் என்று மான் எண்ணிக் கொண்டது. திராட்சைக் கொடியின் இலைகள் மானின் கண்களைக் கவர்ந்தது. இரண்டொரு இலைகளைத் தின்று பார்த்தது. அவை சுவை மிகுந்து இருந்தன. மகிழ்ச்சியுடன் மேலும் ருசி மிகுந்த அந்த இலைகளைச் சுவைக்க ஆரம்பித்தது. அதைக் கண்டு வேதனைப்பட்ட திராட்சைக் கொடி, "மானே! உனக்கு நான் புகலிடம் கொடுத்தேன். அந்த நன்றியை மறந்து விட்டு என் இலைகளையே தின்கிறாயே! எனக்கு வலிக்கிறதல்லவா?'' எனக் கூறியது. "என்னை மறைத்துக் காத்த செடியே என்னை மன்னித்துக் கொள்,'' எனக் கூறி தன் உயிரைக் காத்த செடியிடம் விடைபெற்றுச் சென்றது மான்.★



இ. பாதுஷா, தரம் 4, கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளின் புத்துணர்ச்சிக்கு...



குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்க்காவிட்டால் அவர்கள் பல்வேறு நோய்களுக்கு உள்ளாக நேரிடலாம்.

பொதுவாக சிறிய குழந்தைகள் வயிற்றுப்போக்கு, வயிற்றுச் சிக்கல் போன்ற வற்றால் அவதிப்படுவதைப் பார்த்திருப்போம். அவ்வாறு அவர்கள் பாதிக்கப்பட்டால் துத்தநாக உப்புள்ள உணவு மற்றும் மருந்தைக் கொடுத்தால் அந்தக் குழந்தை உடனே புத்துணர்வுபெறும். பழங்களுடன் காய்கறிகளும் சேர்த்துக் கொண்டால் அவர்கள் உடலில் துத்தநாக உப்பு குறைவாகவே இருக்கும். நாரில்




## விற்பனைக்கு

மிற்சுபிசி புசோ 45 ஆசனங்கள் கொண்டது. குளிர்சாதன அமைப்புடன் கூடிய சொகுசு பஸ் உல்லாசப் பயணிகளை மட்டுமே ஏற்றி இறக்கப் பாவிக்கப்பட்டது.

பார்வையிடக்கூடிய இடம்
6, திஸ்ஸமாவத்த, பில்லவத்த.
ஆண்டி அம்பலம்,மினுவாங்கொட.
T.P: 011 2256485/2256486
Mobile: 077 32 83 965

# DIPLOMA IN TEACHING
EDEXCEL Accredited Teacher Training Diplomas

PEARSON Education · edexcel advancing learning, changing lives

வரையறுத்த அனுமதி

* Diploma in Primary Teaching in English Medium
* Diploma in Teaching English Language & Literature
* Diploma in Teaching Selected Subjects in English Medium
* Diploma in Pre-School Teaching and Day Care Training

• பாதுகாப்பான தங்குமிட வசதிகள்
• உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் தொழில் உத்தரவாதம்
• தவணை முறை கட்டண வசதிகள்
• உள்நாட்டில், வெளிநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள்

பிரிடிஷ் கவுன்சிலை ஒத்த UK பரீட்சைகளை இலங்கையில் சுயமாக நடாத்த உத்தரவாதம் பெற்ற பிரபல நிறுவனம்.

உங்கள் சான்றிதழ்கள் அனைத்தும் ISO 9001 – 2008 மற்றும் Edexcel International UK உத்தரவாதம் பெற்ற எமது நிறுவனத்தால் வழங்கப்படும்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு அமைச்சின் நற்சான்றிதழ் (TVEC P01/0305)

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்போரும் விண்ணப்பிக்கலாம்
காலம் : 9 மாதங்கள் ஆரம்பம் : ஒக்டோபர்
Hotline: 072 712 7008 / 077 740 1404

Academy of Professional Studies
364A, High Level Road, Nugegoda, Sri Lanka
eMail: info@apsedu.com, apseducation@yahoo.com
www.apsedu.com

LOTUS BRAND Plastic Bucket
Hotline:
038 2232962
077 7736518

# எந்தவொரு வாளியையும் வெற்றிகொள்ளும் சக்தி




குறைந்த விலையில் நீடித்த பாவனை, இரும்பு போன்று தகராது துருப்பிடிக்காது, பாவனைக்கு இலகுவானது
லோட்டஸ் பிளாஸ்டிக் வாளிகள் உறுதியான வாளிகள்

லோட்டஸ் பிளாஸ்டிக் வாளிகள் பின்வரும் வேலைகளுக்கு மட்டுமன்றி ஏனைய சகலவித தேவைகளுக்கும் பயன்படுத்த முடியும் என்பதே அதன் விசேட தன்மையாகும்.

• கட்டட வேலைக்காக • விவசாயத் தேவைகளுக்காக • தொழிற்சாலைகளின் உபயோகத்திற்கு

விற்பனை மற்றும் விநியோகத்தர்கள்
Keselwatta Agencies (Pvt) Ltd.
224, Diggala Road, Keselwatta, Panadura, Sri Lanka.
E-mail: sales@keselwattagroup.com / www.keselwattagroup.com
KAL

புதுமைகளைப் புகுத்தும் திருநெல்வேலி யாழ். வைத்தியசாலையில்

# கண் கற்றாக் சத்திர சிகிச்சை புதிய முறையில்...

கண்ணுக்கு கற்றாக் சத்திரசிகிச்சை இதுவரை காலமும் கொழும்பு கண்டி போன்ற இடங்களில் செய்யப்பட்ட சத்திர சிகிச்சை முறை திருநெல்வேலி
**யாழ்.வைத்தியசாலையில்**
ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.



இச் சத்திர சிகிச்சை ஊசி அல்லது மயக்க மருந்து இன்றி PHACO முறையில் 5 நிமிடங்களில் செய்யப்படும்

கண் வைத்திய ஆலோசனைகள்
தினமும்
மதியம் 12 - 1 மணி வரை
மாலை 4.00 மணியில் இருந்து

## புதிய யாழ்.வைத்தியசாலை
315, பலாலி வீதி, திருநெல்வேலி.

மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள:
021 222 3533, 0777781003,
0773107685.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org